விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 18 சனிக்கிழமை (04.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 320

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# அதிகாரங்களை பகிர சிங்களவர் விரும்பவில்லை



## இன முரண்பாட்டுக்கு இதுவே காரணம் - முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

ஆங்கிலேயரிடம் இருந்து பெற்றுக்கொண்ட அதிகாரங்களை தமிழ் பேசும் மக்களுக்கு சிங்கள தலைவர்கள் பகிர்ந்துகொள்ள மறுப்பதே இன்றைய இன முரண்பாட்டுக்கான காரணம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் இயல்புநிலை பாதிப்பு

## வெள்ளத்தால் 45 குடும்பங்கள் பொம்மைவெளியில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த ஐந்து தினங்களாகத் தொடரும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் யாழ். நகர் பொம்மைவெளியில் 45 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மக்கள் பொது இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பிரதேச செயலர் தெரிவித்தார். (ம-9)

## எதிர்வரும் மூன்று தினங்களுக்கு கடுமையான மழை நீடிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட வடமாகாணத்தின் பல இடங்களில் கடுமையான மழை பெய்வதனால் வீதிகள் அனைத்தும் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளன.

தொடர்ந்து 5 நாட்களுக்கும் மேலாக கடுமையான மழை பெய்வதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து நேற்று இரவு 8.30 மணிவரை குடாநாட்டில் 841.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலைய பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ் குடாநாட்டில் நேற்று முன்தினம் இரவு 8.00 மணி 23☛

## எமது அழைப்பை நிராகரித்து

## தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வரலாற்று தவறை இழைத்துள்ளனர்

## பல்கலை மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

வரலாற்றில் பதிப்பட வேண்டிய மாணவர் ஒன்றியத்தின் அழைப்பை நிராகரித்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வரலாற்று தவறை இழைத்துவிட்டார்கள் என தெரிவித்த யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் 23☛

## கூட்டமைப்பின் நிலைப்பாடு நாட்டை சுவர்க்க பூமியாக்கும்

### கயந்த கருணாதிலக



(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி ஊடான அதிகாரப் பரவலை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் ஏற்றுக்கொண்டதன் ஊடாக, 23☛

## அரசியல் கைதிகளின் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பில் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் மேற்கொண்டிருந்த நிர்வாக முடக்கல் போராட்டத்தின் முதற்கட்ட விளைவாக, அநுராதபுரம் சிறைச்சாலையில் 40 நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் இன்று தற்காலிகமாக இடை நிறுத்தப்படவுள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 40 நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தியும் 23☛

## யாழில் வாள்வெட்டு இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியா ஐந்து பேர் கொண்ட குழு வாளால் வெட்டியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, வண்ணார் 23☛

## அரச பேருந்தில் கேரள கஞ்சா கடத்தியவர் கைது

(மல்லாவி)

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட வவுனியா நகரப் பகுதி அரச பேருந்து நிலையத்தில் வைத்து இளைஞர் ஒரு 23☛

## அரியாலை துப்பாக்கிச் சூடு

## விசேட அதிரடி புலனாய்வு உத்தியோகத்தர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

அரியாலை துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில், விசேட அதிரடிப்படை புலனாய்வு பிரிவின் உபபொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ்கான்ஸ்டபிள் ஆகிய இருவர் நேற்று குற்றப் புலனாய்வு பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். 23☛

## கைதிகளின் கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மூன்று கைதிகளின் கோரிக்கை நிறைவேறும் வரையில் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுப்பதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக 23☛

## 70 வருட இனப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத்தரும் தருணத்தை எட்டியுள்ளோம்

### எம்.ஏ.சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)

70 வருட தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினைப் பெறும் தருணத்தினை எட்டியுள்ளோம். பிளவுபடாத நாட்டிற்குள் சமனான அதிகாரப்பகிர்வுகளை வலியுறுத்தியுள்ளோம். இதில் வெற்றியடையலாம். வெற்றியடைவதற் 23☛

## யாழில் மீன் மழை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய வளாகத்தில் பெய்த மழைநீரில் 24☛

## அரசியலமைப்பு சபையின் தலைவர் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளார்

### ஆனந்தன் எம்.பி



(கொழும்பு)

இலங்கையின் புதிய அரசியல் யாப்பிற்கு எதிராக தான் பேசப்போவதாக, அரசியலமைப்புச் சபை தலைவருக்கு தவறான தகவல் வழங்கப்பட்டதாலேயே 04☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பேருந்து தடம் புரண்டது; நால்வர் காயம்

புதுக்குடியிருப்பில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபையின் முல்லைத்தீவு சாலைக்கு சொந்தமான பாடசாலைப் பணியில் ஈடுபடும் பேருந்து ஒன்று, முன்னால் சென்ற தனியார் பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட போது வீதியை விட்டு தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 4 பயணிகள் சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.10 மணியளவில் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

தினசரி 1.45 மணியளவில் முல்லைத்தீவு நகரப் பகுதியில் இருந்து முள்ளிவாய்க்கால் வலைஞர்மடம் மாத்தளன், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு ஆகிய வழித்தடங்களின் ஊடாக பாடசாலை மாணவர்களை ஏற்றி பயணிக்கும் முல்லைத்தீவு சாலைக்கு சொந்தமான அரச பேருந்தே விபத்துக்குள்ளாகியுள்ளது.


நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் முல்லைத்தீவு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது முன்னால் சென்ற தனியார் பேருந்தை முந்திச் செல்ல முற்பட்டபோது இரட்டை வாய்க்கால் சந்திக்கும், வலைஞர்மடம் செல்லும் வீதிச் சந்திப் பகுதிக்கும் இடைப்பட்ட வீதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் விபத்துக்குள்ளான பேருந்தை மீட்டு எடுப்பது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-15)


## அறிவித்தல்

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரியில் இயங்கிவந்த
YBLSC
Yarl Beauty & Language's Skills College
04.11.2017 முதல்
இல.307, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
YICSD COLLEGE
Yarl International College of Skills Develoment
எனும் பெயரில் இடம் மாறுகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்
T.P: 0217223301
(C-268)


# மரண அறிவித்தல்கள்



## கறுப்பையா சிவலிங்கம்

(கிளிநொச்சி யாழ் தாமரை உணவகம், தர்மினி மிக்சர் உரிமையாளார்)

கிளிநொச்சி யாழ் தாமரை உணவகத்தின் உரிமையாளரும் தர்மினி மிக்சர் தயாரிப்புக்களின் உரிமையாளரும் கண்டியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இராமநாதன் கலட்டி கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கறுப்பையா சிவலிங்கம் நேற்று முன்தினம் (02.11.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (05.11.2017) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமநாதன் கலட்டி,
கோப்பாய்.

(1219)

தகவல்:
குடும்பத்தினர்

## திருமதி சிவராஜா புஸ்பவதி (மாலா)



சோமஞானவைரவர் கோவிலடி டச்சு வீதி சித்தன்கேணியை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவராஜா புஸ்பவதி (மாலா) அவர்கள் நேற்று முன்தினம் (02.11.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சி.சிவராஜா (இலங்கை வங்கி ஓய்வுபெற்ற DSO) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பகவதிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், அமரர் கிருஷ்ணபிள்ளை - தனேஸ்வரி தம்பதிகளின் மருமகளும், சிவனேஸ்வரி (கனடா), வரதராஜா (P.S Service Station), சடாச்சரதேவி (ரதி), பூபதிராஜா (கனடா), ஜீவராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவபாலன் (லண்டன்), சிவயோகநாதன் (லண்டன்), சிவகுருநாதன் (ஜேர்மனி), சிவயோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், சிவதர்சனா (கனடா), குமுதா (லண்டன்), விஸ்வாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், லக்ஸ்மிகாந்தன் (கனடா), சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், லிஸாரா, கவின், அகின் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

கைபிலயாங்கரி,
சித்தன்கேணி.

தகவல்: கார்த்திகேசு வரதராஜா (சகோதரன்)
சிவராசா - 001 416 648 2401


## பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர் உள்ளகம், வெளியகம் (இருபாலாரும்)
- பொது சனத் தொடர்பாளர் (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை)
- ஒப்பு நோக்குநர் (இருபாலாரும்)
- கணனி தமிழ் ரைப்பிங் (இருபாலாரும்)

**குறிப்பு:-**

க.பொ.த உயர்தரத்தில் சித்தியும் 25 வயதிற்கு மேற்பட்டவர்களும். முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படுவதுடன் யாழ்ப்பாண நகர மையத்தில் இருந்து அண்மித்த இடத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் 06.11.2017 திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு நேரில் வரவும்.

**வலம்புரி**
பொது முகாமையாளர்
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:-0215671532





# புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டு அதிகாரம் பகிரப்பட்டால் மீண்டும் போர் வெடிக்கும்

## கோத்தாவின் அமைப்பு கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

**புதிய அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்டு மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிரப்பட்டால் நாட்டில் 30 வருடகாலமாக இடம்பெற்ற யுத்த சூழல் மீண்டும் உருவாகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமை தாங்கும் எதிர்பார்புக்களை ஒளியேற்றும் அமைப்பு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.**



தேசிய நூலகத்தில்நேற்று இடம்பெற்ற விஷேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய எதிர்பார்ப்புக்களை ஒளியேற்றும் அமைப்பின் செயற்பாட்டாளர் சிறியந்த மென்டிஸ் தெரிவிக்கையில், தற்போது நாட்டில் புதிய அரசியல் அமைப்பினை நிறைவேற்றுவதில் அனைவரும் மும்முரமாக செயற்படுகின்றனர்.

ஆனால் இந்த அரசியல் அமைப்பு நிறைவேறினால் .ஏற்படும் ஆபத்துக்கள் குறித்து யாரும் பேசுவதில்லை.

மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிரப்பட்டால் மீண்டும் நாட்டில் யுத்த அழிவுகளே தோன்றும் என்பதை அறிந்தும் அறியாதவர்கள் போல் உள்ளனர்.

மாகாணங்களுக்கு அதிகாரம் பகிரப்பட்டால் மத்திய அரசிற்கு மீண்டும் அதிகாரத்தை பெறமுடியாமல்போகும்.

அது மட்டுமல்லாமல் மாகாண சபைகளுக்கு இடையிலும் முரண்பாடுகள் தோன்றும். இதனால் எதிர்காலத்தில் நாட்டில் உருவாகும் பாதிப்பினை அறிந்தும் அரச தலைவர்கள் அமைதியாக இருப்பது வியக்கத்தக்கது.

நாட்டில் அதிகாரம் பகிரப்பட்டால் மாகாணசபைகள் பலம்மிக்கதாகி மத்திய அரசு பலவீனமடையும். ஜனாதிபதி வெறும் நாமநிர்வாகியாகவே செயற்படுவார்.


நாட்டின் தலையெழுத்தை மாற்றுவதும் தற்போது நாடு எதிர்நோக்கவுள்ள அழிவினை தடுப்பதும் பொதுமக்களின் கைகளிலேயே உள்ளன.

அதனால் மக்களின் ஜனநாயகத்தை வெளிப்படுத்தும் தேர்தலினை முறையாக பயன்படுத்தி நாட்டையும் பொதுமக்களையும் காப்பாற்றுவது மக்களின் கைகளில் உள்ளதே தவிர 225 பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அல்ல.

எனவே புதிய அரசியல் அமைப்பு நிறைவேறுவதில் உள்ள பிரச்சினைகளை மட்டும் பார்க்காமல் நிறைவேற்றினால் உருவாகும் பிரச்சினைகளை ஆராய்ந்து ஜனாதிபதி நல்ல தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (இ-7)

## உணவு வழங்க உதவுங்கள்

### விண்மீன் அமைப்பினர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

மேலதிகமான உணவுகளை ஏழைகளுக்கு வழங்கும் திட்டத்தில் தொடர்ச்சியாக பயணிக்க ஆதரவு வழங்குமாறு பொதுமக்களிடம் விண்மீன் அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு, மாகாணத்தில் உள்ள உணவகங்கள். மண்டபங்கள், வீடுகளில் மேலதிகமாக இருக்கும் உணவுகளை வீண்விரயமாக்காது ஏழைகளுக்கு வழங்கும் திட்டத்தை விண்மீன் அமைப்பினர் ஆரம்பித்துள்ளனர். பசித்தவர்க்கு உணவளிப்போம் என்ற இந்த பயணத்தில் அதிகளவான இளைஞர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக அன்றாடம் மண்டபங்களில் நடக்கும் வைபவங்களில் உணவகங்களில் பல இலட்சம் ரூபாய் மதிப்பிலான உணவுகள் வீண்விரயமாகி வருகிறது. ஆனால் பல பகுதிகளில் ஒரு வேளை உணவுக்கும் வழியின்றி பல ஏழை மக்கள் தற்போதும் வடபகுதியில் உள்ளனர். மேலதிகமாக உள்ள உணவுகளை வீண்விரயம் செய்யாது பசித்தவர்களுக்கு உணவளிக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இத்திட்டத்தை தொடர்ச்சியாக செயற்படுத்த அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் என குறித்த அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

எங்கு உணவுகள் மேலதிகமாக விரயமாக்கப்படவுள்ளதோ அதை நேரகாலத்துடன் குறித்த அமைப்பினருக்கு அறியத்தரும் பட்சத்தில் அங்கு குறித்த அமைப்பினர் சென்று உணவுகளை பொதி செய்து பசித்தவர்களுக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளார்கள். பகுதி நேர பணியாக பல இளைஞர்கள் இதை ஆர்வத்துடன் செய்து வருகின்றனர். வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனால் ஆளணி பற்றாக்குறை இருப்பதால் இந்த சேவையில் இணைந்து கொள்ள விரும்புவர்களும், விரயமாகும் உணவுகளை வழங்கத் தயாராக உள்ளவர்களும், 0770763610, 0778480603, 0770702280 என்ற கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற முடியும் என குறித்த அமைப்பினர் அறிவித்துள்ளனர். (இ-9)

## கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் கடும் பிரச்சினைகள் காணப்பட்டன

### நீதியமைச்சர் தலதா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் கடுமையான பிரச்சினைகள் காணப் பட்டதாக நீதி அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார். கடந்த அரசாங்க ஆட்சி யின் இறுதிக் காலப் பகுதி யில் பல்வேறு நெருக்கடிகள், பிரச்சினைகள் காணப் பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாத நிலையினால் அரசாங்கம் ஜனாதிபதி தேர்தலை நடத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பலன்கொட, பம்பகின்ன பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## விமலரத்ன தேரரின் கருத்துக்கு பாக்கியசோதி கடும் எதிர்ப்பு



(கொழும்பு)

பெல்லன்வில விமல்ரத்ன தேரரின் கருத்துக்கு மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையமும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரான பாக்கிய சோதி சரவணமுத்துவும் பணத்திற்காக புதிய அரசியல் அமைப்பினை உருவாக்குவதற்கு முயற்சிப்பதாக பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பு சிங்கள ஊடகமொன்று செய்தியும் வெளியிட்டிருந்தது. எனினும் விமல ரத்ன தேரரின் இந்தக் கருத்துக்கு கடும் ஆட்சேபம் வெளியிடுவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் தெரிவித்துள்ளது. கடும்போக்குவாத செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் பெல்லன்வில விமலரத்ன தேரர் கருத்து வெளியிட்டிருப்பது கவலையளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. புதிய அரசியல் சாசனத்திற்கு ஆதரவான தரப்பினர் தேசத் துரோகிகள் என அடையாளப்படுத்தி வருவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (இ-7)

## மனிதவுரிமை பாதுகாப்பு தேசிய திட்டம் வெளியீடு



(கொழும்பு)

நாட்டில் மனிதவுரிமைகளை உறுதிப்படுத்தும் வாய்ப்பு மீண்டும் உருவாகியிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 2017 - 2021 ஆம் ஆண்டுக்கான மனிதவுரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு தேசிய திட்டம் வெளியிடும் நிகழ்வு பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனிதவுரிமைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிப்போருக்கு எதிராக வன்முறைகளை பிரயோகிக்கக்கூடாது.

அதற்கு மாறாக அவர்கள் கருத்து வெளியிட வாய்ப்பளிக்க வேண்டும் என பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிகழ்வில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றுகையில், மனிதவுரிமைகளைப் பாதுகாக்க சமகால அரசாங்கம் அர்ப்பணிப்புடன் பாடுபடுகின்றது எனத் தெரிவித்தார். (இ-7)

# தொடரை கைப்பற்றுமா இந்தியா?

## நியூசிலாந்துடன் இன்று 2ஆவது மோதல்

இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதும் இரண்டாவது 'ரி20' போட்டி ராஜ்கோட்டில் இன்று தொடங்குகிறது இதில் இந்திய அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி, தொடரை கைப்பற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள நியூசிலாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட சர்வதேச 'ரி20' தொடரில் பங்கேற்கிறது. டில்லியில் நடந்த முதல் போட்டியில் 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற இந்திய அணி, 1-0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது 'ரி20' போட்டி, குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் உள்ள சவுராஷ்டிரா கிரிக்கெட் சங்க மைதானத்தில் இன்று நடக்கிறது.

முதல் ஆட்டத்தில் தொடக்க வீரர்களான ரோகித்சர்மா, ஷிகார் தவான் முதல் விக்கெட்டுக்கு 158 ரன் (16.2 ஓவர்) குவித்து அசத்தினர். ஹோலி, பாண்ட்யா, தோனி போன்ற அதிரடி வீரர்கள் உள்ளனர்.

பந்துவீச்சில் புவனேஸ்வர்குமார், பும்ரா, சஹால், அக்சர் பட்டேல் ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். கடந்த ஆட்டத்தோடு ஓய்வு பெற்ற நெஹ்ராவுக்கு பதிலாக புதுமுக முகமது சிராஞ் அல்லது குல்தீப் யாதவ் இடம் பெறலாம்.

20 ஓவர் போட்டியில் நியூசிலாந்துக்கு எதிராக முதல் வெற்றியை பதிவு செய்த இந்தியா அதே உத்வேகத்துடன் இன்றைய ஆட்டத்திலும் வெற்றி பெற்று தொடரை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது.



ராஜ்கோட் மைதானத்தில் இன்று நடப்பது 2ஆவது 20 ஓவர் போட்டியாகும். 2013-ம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தியா 202 ஓட்டங்களை சேசிங் செய்து வெற்றி பெற்று இருந்தது.

நியூசிலாந்து அணியில் மார்டின் குப்தில், முன்ரோ, வில்லியம்ஸன், ரொம் லெதம், புரூஸ் நிக்கோலஸ் போன்ற அதிரடி வீரர்கள் உள்ளனர். பந்துவீச்சில் சௌதி, போல்ட், சான்ட்ரோ, கிரான்ட்ஹோம், சோதி போன்றோர் உள்ளனர்.

இன்றைய போட்டியில் நியூசிலாந்து தோற்றால் தொடரை இழந்துவிடும். இதனால் அவ்வணி வெற்றிக்காக கடுமையாக போராடும். ஒருநாள் போட்டி தொடரை இழந்துவிட்டதால் 20 ஓவர் போட்டி தொடரையும் இழக்காமல் இருக்க அந்த அணி முயற்சிக்கும்.

# மைதானத்துக்குள் பாய்ந்த கார்




ராஞ்சி டெஸ்ட் தொடரில் டெல்லி மற்றும் உத்தரபிரதேச மாநில அணிகள் மோதிய போட்டி பாலம் விமானப்படை மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

கம்பீர், இஷாந்த் சர்மா, சுரேஷ் ரெய்னா என முன்னணி வீரர்கள் இந்த போட்டியில் விளையாடி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்றைய 3ஆவது நாள் ஆட்டம் முடிவடைய 20 நிமிடங்கள் இருககும் போது பி.ப 4.40 மணியளவில் திடீரென மைதானத்தின நடுவே கார் ஒன்று பாய்ந்து வந்தது.

இதனால், ஆட்டம் தடைப்பட்டதுடன் வீரர்கள் பதற்றமடைந்தனர். இதனையடுத்து, அந்த காரை ஓட்டி வந்த நபருக்கு எச்சரிக்கை விடப்பட்டு அனுப்பப்பட்டார்.

கார் மைதானத்தில் சென்றதால் பாதிப்பு இல்லை என போட்டி நடுவர் தெரிவித்துள்ளார். மழை, வெளிச்சம், ரசிகர்கள் இடையூறால பாதிக்கப்பட்ட போட்டிகள் இருக்கையில், மைதானத்தில் கார் புகுந்ததால் போட்டி தடைப்பட்டது விநோத நிகழ்வாகி விட்டது.

## அரசியலமைப்பு...

இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்ற தனக்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளதென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய அரசியல் யாப்பு தொடர்பான இடைக்கால அறிக்கை குறித்த விவாதம், அரசியலமைப்பு நிர்ணய சபையில் கடந்த நான்கு நாட்களாக நடைபெற்று வந்தது. இதில் தனக்கான சந்தர்ப்பம் வழங்கப்படாததைத் தொடர்ந்து, நேற்றுமுன்தின விவாதத்தின் போது சிவசக்தி ஆனந்தன் இக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

225 பேரைக் கொண்ட நாடாளுமன்றில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வன்னி மாவட்டத்திலிருந்து தெரிவான தனக்கு மாத்திரம் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமையானது, நாடாளுமன்றத்தில் பாரம்பரிய ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்றது என்பதையே சுட்டிக்காட்டுகின்றதென அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல, இதுகுறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பே தீர்மானிக்க வேண்டும் எனறும், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பாக பேசி பதிலளிப்பதாக்வும் குறிப்பிட்டார். (ம)

## அதிகாரங்களை பகிர...

அதிகாரப் பகிர்வைக் கைவிட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றும்போது கூறியுள்ளார். இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆங்கிலேயர் வெளியேறும்போது சிறுபான்மையினரை நீதியாக, நேர்மையாக, சுயகௌரவத்துடன் அவர்கள் வாழ வழி வகுப்பார்கள் என்று கருதியே சிங்கள அரசியல் தலைவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்துச் சென்றார்கள். வெள்ளையர்கள் செல்லும் வரையில் நல்லவர்கள்போல் நடித்து அதிகாரம் அவர்கள் கைகளுக்கு வந்தவுடன் சிங்கள மக்கட் தலைவர்கள் தமது சுயரூபத்தை வெளிக்காட்டி விட்டார்கள். சோல்பரி பிரபு சுதந்திரம் அளித்து பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னர் டீ.ஃபார்மர் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் சிங்கள மக்கட் தலைவர்கள் இவ்வாறு சிறுபான்மையினருக்கு எதிராக நடப்பார்கள் என்று அறிந்திருந்தால் ஒரு சமஷ்டி அரசையே தந்துவிட்டுச் சென்றிருக்கலாம் என்று அங்கலாய்த்தார்.

எமது நாட்டின் இன முரண்பாட்டுக்கான காரணம் சிங்கள அரசியல்வாதிகள் நாடு பூராவுக்குமான அரசியல் அதிகாரங்களைத் தம் வசம் ஆக்கிரமித்துக் கொண்டதே. உதாரணத்திற்கு வட கிழக்கில் தமிழ்மொழி காலாதி காலமாகப் பேசப்பட்டு வந்த போதும் 1956ஆம் ஆண்டில் "சிங்களம் மட்டும்" சட்டமானது வடக்கையும் கிழக்கையும் மற்றைய ஏழு மாகாணங்களுடன் இணைத்து முழு நாட்டுக்கும் ஒரே மொழி என்று சட்டம் இயற்றியது. தமிழ் மக்கட் தலைவர்கள் இதனை எதிர்க்கப்போக அவர்களுடன் உடன்பாடுகள் செய்து வட கிழக்கில் உள்ளவர்கள் பெறவேண்டிய உரித்துக்களைக் கையளிப்பதாகக் கூறிவிட்டு உடன்படிக்கைகளைச் செல்லாக் காசாக்கினர். இன்று இந்த நாட்டில் நிலவும் ஒரேயொரு பிரச்சினை பெரும்பான்மையினர் தாம் ஏதோ வழியில் ஆங்கிலேயரிடம் இருந்து பெற்றுக் கொண்ட அதிகாரங்களை மற்றைய இனங்களுடன், குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களுடன் பகிர்ந்து கொள்ள மறுத்து வருவதே. எல்லாப் பெரும்பான்மையினக் கட்சிகளின் சிங்களத் தலைவர்களும் கட்சி பேதமின்றி சிங்களப் பெரும்பான்மையினர் பெற்றுக் கொண்ட அதிகாரம் வேறெவருடனும் பகிர்ந்து கொள்ளப்படாது என்பதில் ஒருமித்த கருத்தைக் கொண்டே உள்ளனர்.

விடுதலைப்புலிகளின் கை ஓங்கியிருந்த போது விட்டுக் கொடுக்க முன்வந்தவர்கள் புலிகள் அழிந்ததும் பழைய நிலைக்கே மாறி விட்டார்கள். எனவே ராஜபக்ஷ புதிதாக எதையும் கூற வரவில்லை. பிரச்சினைகள் வரும் போது அதிகாரப் பகிர்வுகள் பற்றிப் பேசும் சிங்கள அரசியல் தலைவர்கள் பிரச்சினைகள் ஓரளவு தணிந்ததும் பழைய நிலைக்கே சென்று விடுகின்றார்கள். அதிகாரப் பகிர்வு பற்றி எந்த வித மனமாற்றமும் அவர்களிடையே ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

அதிகாரப் பகிர்வு பற்றி மகிந்த ராஜபக்ஷ கூறிவருகின்றார். அதாவது அவர் குறிப்பிடுவது ஒற்றையாட்சியின் கீழான அதிகாரப் பகிர்வே. கிட்டத்தட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை ஒட்டிய மீளாய்வு செய்யப்பட்ட அதிகாரப் பகிர்வையே அவர் எதிர்க்கின்றார். இவர்தான் போர் முடிந்ததும் 13 + என்று கூறியிருந்தார். இப்பொழுது அதிகாரப்பகிர்வு வேணடாம் என்கின்றார். இந்தியாவில் சென்று இலங்கையில் பௌத்தம் முதலிடம் பெறாவிட்டால் பௌத்தம் அழிந்துவிடும் என்ற விதத்தில் பேசியுள்ளார். அவர் கூறுவது பௌத்தம் பற்றியல்ல. சிங்கள ஆதிக்கம் பற்றியே என்பதை நாம் உணர வேண்டும். இலங்கையில் பௌத்தத்தைப் பின்பற்றுபவர்கள் சிங்களவரே. ஆகவே பௌத்தத்திற்கு முதலிடம் கோருபவர்கள் சிங்களவருக்கே முதலிடம் கோருகின்றார்கள். அதாவது பௌததம் முதலிடம் பெற்றால் சிங்கள ஆதிக்கம் நிலைக்கும். தமிழர்கள், முஸ்லிம்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக மாற்றப்பட்டு விடுவார்கள் என்பதே எதிர்பார்ப்பு. இந்து, கிறிஸ்தவத் தமிழரும் முஸ்லிம்களும் எக்காலத்திலும் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்குவதை ஏற்கக்கூடாது. ஏற்றால் நாம் இரண்டாந்தரப் பிரஜைகள் ஆகிவிடுவோம். பெரும்பான்மையினர் அரசாளும்போது பெரும்பான்மையினர் மதத்திற்கு முன்னுரிமை கேட்பது மதத்திற்குப் பங்கம் வரும் என்பதற்காக அல்ல. மதத்தைக் காரணம் காட்டி சிறுபான்மையினரைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான்.

மகிந்த ராஜபக்ஷ கூறிய கருத்தைப் பற்றி என்னுடைய கருத்தைக் கேட்டீர்களானால் நானும் மகிந்த ராஜபக்ஷ செப்புவதையே கூறுவேன். அதாவது ஒற்றை ஆட்சியின் கீழான அதிகாரப் பகிர்வைக் கைவிட வேண்டும் என்று அவரோடு சேர்ந்து கூறிவிட்டு அதே மூச்சில் சமஷ்டி அரசியல் யாப்பே எமக்கு அவசியம் என்பேன். ஒற்றை ஆட்சியின் கீழான அதிகாரப்பகிர்வு தமிழ் மக்களின் துயரங்களைத் துடைக்க உதவாது. மீண்டும் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தின் கீழ் நாம் கொண்டுவரப்பட்டு தொடர்ந்து போராட வேண்டிய நிலையே ஏற்படும். சுயகௌரவத்துடன் வாழத்துடிக்கும் எந்த ஒரு இனமும இன்னொரு இனத்தின் ஆதிக்கக் கெடுபிடிகளுக்கு அடிமைப்பட்டு வாழ அனுமதி தெரிவிக்க மாட்டார்கள். ஒரேவிதமான மக்கட் கூட்டங்கள் இடையேதான் ஜனநாயகம் பெரும்பான்மையினரின் கருத்தை ஏற்றுக் கொள்கின்றது. பல்லின, பல்மத, பன்மொழி மக்களைப் பொறுத்த வரையில் யாவரும் சம உரித்துக் கொண்டவர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் யாவரதும் அடிப்படை உரிமைகளை வழங்கிய பின்னரே மற்றவற்றைப் பற்றிச் சிந்திக்கின்றது.

மேலும் சில விடயங்களை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஊன்றியாராய்ந்து அவற்றிற்கான ஆக்கபூர்வமான தீர்வுகளைப் பெற்றுத்தர பெரும்பான்மையினப் பெருங் கட்சிகள் என்றென்றும் பின்னின்றே வந்துள்ளன. ஓரளவு ஏற்புடையதான ஒரு தீர்வை சந்திரிகா அம்மையார் கொண்டு வந்த போது அதன் வரைவை ஐ.தே.கட்சியினர் பாராளுமன்றத்தில் எரித்துப் போட்டனர். இனி அவ்வாறான ஒரு தீர்வைக் கொண்டு வர மாட்டார்கள் என்று நினைக்கின்றேன். அப்போது விடுதலைப் புலிகளுக்குப் பயந்து அவர்கள் அந்தத் தீர்வுத் திட்டத்தை 2000 ஆம் ஆண்டு முன்வைத்தார்கள்.

இனி முற்றுமுழுதான சிங்கள ஆதிக்கத்தின் கீழ் ஒரு சில சலுகைகளை ஒற்றையாட்சியின் கீழ் தருவது போலத்தான் தீர்வு வரைபுகள் இருப்பன. ஆகவேதான் நான் கூறுகின்றேன் ராஜபக்ஷமார் தமது அரசியலுக்கும் இன ரீதியான சிந்தனைக்கும் ஏற்பவே இவ்வாறு கூறுகின்றார்கள். அடுத்த தேர்தலின் வெற்றியே அவர்களின் ஒரேயொரு குறிக்கோள். அவர் அவ்வாறு கூறுகின்றார் என்று அவருடன் முரண்பட்டு பாராளுமன்றத்தில் அடிபட்டுப் பேச்சுப்பட்டு இந்த அரசாங்கம் அரையும் குறையுமான ஏதோ ஒரு வகையான ஒற்றையாட்சி அதிகாரப் பகிர்வினை நல்குவதால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. சிங்கள அரசியல் தலைவர்களின் ஆதிக்கம் எம்மை விட்டு நீங்க வேண்டுமானால், எம்மிடம் இருந்து ஆங்கிலேயர் காலத்தில் பெரும்பான்மையினத் தலைவர்கள் எதை எதையோ கூறி ஏமாற்றிப் பெற்றுக் கொண்ட அதிகாரங்கள் மீண்டும் எம்முடன் பகிரப்பட வேண்டுமானால், அதற்கு உண்மையான அதிகாரப் பகிர்வொன்றே தீர்வாகும். அவ்வாறான தீர்வு சமஷ்டி அரசியல் யாப்பு ஒன்றின் கீழேயே கிடைகக்கும். ராஜபக்ஷ போன்றவர்கள் வெறும் அரசியல்வாதிகள். அவர்களுக்கு அடுத்த தேர்தலே முக்கியம். நாட்டின் ஐக்கியமும் நலலிணக்கமும் வருங்காலச் சுபீட்சமும் ஒரு பொருட்டல்ல.

தற்போதைய சிங்கள அரசியல்த் தலைவர்கள் தமது குற்றமுள்ள நெஞ்சை ஆசுவாசப்படுத்த தமிழர்களுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று நினைத்து முன்மொழிவுகளை முன்வைக்கக் கூடும். அவர்கள் தருவதானது அவர்களால் தருவதாக அமையட்டும். எம்மைப் பொறுத்த வரையில் இந்நாட்டின் இனப் பிரச்சினை நிரந்தரமாகத் தீரவேண்டுமானால் 1949ஆம் ஆண்டிலிருந்து எமது அரசியல் தலைவர்கள் வலியுறுத்தி வரும் சமஷ்டி அரசியல் யாப்பே எமக்கு ஓரளவாவது நன்மையயப்பதாய் அமையும் எனத் தெரிவித்தார் (ம)


## விற்பனைக்கு

யமகா அவுட் போட் என்ஜின் 25 HP, 30 HP உடன் விற்பனைக்கு உண்டு.

(C-269)

தொடர்பு:-

077 436 6704

## கிளிநொச்சி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க

# பொதுக்கூட்டம் - 2017

கிளிநொச்சி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 12.11.2017 (ஞாயிற்றுக்கிழமை) பி.ப 2 மணிக்கு எமது கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் சங்க யாப்பு பொதுச்சபையின் அங்கீகாரம் பெறப்படவுள்ளதுடன் யாப்புக்கு அமைய புதிய நிர்வாக தெரிவும் கல்லூரி சுற்றுமதில் அமைத்தல் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறும்.

**தலைவர்/செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம்**
**கிளிநொச்சி இந்துக் கல்லூரி**

(C-271) தொடர்புகளுக்கு: osa.kilinochchihinducollege@gmail.com

# இனவாதத்தை பரப்புவது பௌத்த துறவிகள்தான்

## சந்திரிகா பகிரங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் நல்லிணக்கத்தை நிலைநாட்ட அரசாங்கத்தினால் மாத்திரம் முடியாது. இதற்காக சகல இன மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அத்துடன் 2013 ஆம் ஆண்டில் நாட்டில் மதவாதம் மிகத் தீவரமாக முன்னெடுக்கப்பட்டது. பௌத்த துறவிகள் என்று சொல்லக் கூடியவர்களே நாட்டில் பல்வேறு இடங்களில் இனவாதத்தை பரப்பி வருகின்றனர் என முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகமும் தேசிய ஐக்கியத்திற்கான பாக்கீர் மாக்கார் நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த "ஒற்றுமையில் வேற்றுமையே தேசத்தின் பலம்" என்னும் தொனிப்பொருளில் அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் சித்திரப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதும் சகவாழ்வும் எமது நாட்டிற்கு அத்தியாவசியமான விடயங்கள். எமது நாட்டில் வாழும் பல்லின மக்களுக்கிடையில் சமாதானத்தை கட்டியெழுப்ப நான் என் வாழ்நாளில் அரைவாசிப் பகுதியையும் கழித்துள்ளேன். பல்வேறு அர்ப்பணிப்புக்களைச் செய்துள்ளேன்.

எமது நாடு சிறியதொரு வளமானதொரு நாடு. கலாசாரத்திலும் நாகரிகத்திலும் உன்னதமானதொரு வரலாற்றை கொண்டுள்ளது. 2000 ஆண்டுகளுக்கு அதிக காலம் தொட்டு சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்கள் இங்கு வாழ்ந்துள்ளார்கள். அதன் பின்னர் பல்வேறு இனங்கள் இங்கு வந்துள்ளன. பல தசாப்தங்களாக எவ்வித பிளவுகளும் இன்றி நாம் ஒற்றுமையாக வாழ்ந்ததற்கான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன.

தென்னிந்தியாவில் பல்வேறு இராச்சியங்கள் காணப்பட்டன. அங்கிருந்து பல்வேறு அரசர்களும் இங்கு வந்து எமது நாட்டை கைப்பற்றப்பார்த்தார்கள். ஆனால் ஆக்கிரமிப்பு சக்திகளிடமிருந்து நாட்டை காப்பாற்ற நாம் எல்லோரும் போராடியுள்ளோம். ஒரு காலத்தில் எமது நாட்டில் 3 இராச்சியங்கள் காணப்பட்டன. ஒன்றுபட்ட தேசம் 3 பகுதிகளாக பிளவுபட்டிருந்தது. அதன் பின்னர் வெளிநாட்டு சக்திகள் எமது நாட்டை ஆண்டன. எல்லா இனத்தவர்களும் ஒன்றுபட்டு சுதந்திரத்தை வென்றெடுத்தார்கள். ஆனால் சுதந்திரத்திற்கு பிந்திய காலத்தில் அரசியல் நோக்கங்களுக்காக மக்களுக்கு மத்தியில் பிளவுகள் அதிகரிக்கலாயின. பிற்பட்ட காலத்தில் கடும்போக்குவாத தீவிர மதவாத சக்திகளின் தாக்கம் அதிகரித்தது. இதன் விளைவாக 30 வருட யுத்தமும் வெடித்தது.

சந்தர்ப்பவாத அரசியலை முன்னிலைப்படுத்தியே இனவாதம் அரங்கேற்றப்படுகின்றது. என்றாலும் இந்நாட்டில் பெரும் பான்மையின மக்கள் இதற்கு எதிராகவே இருக்கின்றனர். 2013ஆம் ஆண்டிலேயே மதவாதம் மிகத்தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. பௌத்த துறவிகள் என்று சொல்லக் கூடியவர்கள் அதிகளவிலானோர் நாட்டில் பல்வேறு இடங்களில் இனவாதத்தை பரப்பி வருகின்றனர். என்றாலும் பெரும்பாலான தேரர்கள் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் செயற்றிட்டங்களை முன்னெடுக்கிறார்கள். ஆனால் அவை ஊடகங்களில் வருவதில்லை. சிங்கப்பூரின் பிரதமர் லீகுவான் இலங்கையை முன்னுதாரணமாகக் கொண்டு அன்று அந்நாட்டை கட்டியெழுப்பினார். ஆனால் இன்று எமது நாடு மதவாத கடும்போக்குவாத அரசியலால் இருள் யுகத்தை நோக்கிச் சென்றுள்ளது.

அதனை மாற்றியமைக்க தற்போதைய அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. புதிதாக இதற்கு அமைச்சுக்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தமிழ், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் எல்லாம் இன்று 70 வருடங்களின் பின்னர் ஒன்றுபட்டுள்ளன.

இதுவே நல்லிணக்கத்திற்கான அடித்தளம். எனவே நாம் எல்லோரும் ஒன்றுபட்டு முன்செல்ல வேண்டும். எமது நாட்டிற்கு சமூக, பொருளாதார அபிவிருத்தி அவசியம். முன்னேற்றகரமான கலாசார முறைகள் அவசியம். இந்நிலைக்குச் செல்வதற்கு வரலாற்றிலிருந்து பாடம் கற்று செயற்பட வேண்டும். அரசாங்கத்திற்கு மாத்திரம் இப்பணியைச் செய்ய முடியாது. தேசிய நல்லிணக்க அலுவலகம் இது தொடர்பில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

கடந்த 11 வருட காலமாக நாம் இதனை செயற்படுத்தி வருகின்றோம். 2 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இதில் பிரயோசனம் பெற்றுள்ளனர். வடகிழக்கு பகுதிகளில் இதன் செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளோம். எனவே சகலரினதும் பங்குபற்றுதலும் ஒத்துழைப்பும் அவசியம்.

நாட்டின் பெரும்பாலான மக்கள் தேசிய நல்லிணக்கம் தேவையென கூறுகின்றார்கள். சிறியதொரு கூட்டத்தினர் மாத்திரமே இனவாதத்தை விதைக்கிறார்கள். நாம் எல்லோரும் ஒன்றுபட்டு முன்னேறிச் செல்ல வேண்டும் என அனைவரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்



திரு. முத்துச்சாமி விக்னேஸ்வரன் (SLPS-I)

உரும்பிராய் ஓடையம்பதி
கற்பக விநாயகர் மணி மண்டபத்தில்
இன்று பணிநயப்பு விழாவினைப் பெறும்
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின்
ஓய்வு நிலை அதிபரை வாழ்த்துவதுடன்
30.10.2017 அன்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி
உயர்திரு மாணிக்கராசா இளஞ்செழியன்
முன்னிலையில் சமாதான நீதவானாக
சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையும்
பாராட்டி வாழ்த்துகிறேன்.

Congratulations

(சி-261) ப.விஜயரட்ணம் (ரவி). சிற்பாசாரியார்(அராலி)
மாவடி வைரவர் கோவிலடி.அல்வாய் தெற்கு. அல்வாய்.


## இராசி பலன்

04.11.2017
ஐப்பசி 18, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பூரணை முற்பகல் 11.49 மணிவரை
பரணி பின்னிரவு 3.19 மணிவரை
சுபநேரம் 3.04-4.34 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை
சித்தாமிர்தம்,ஐப்பசிப் பரணி

வளவன்

**மேடம்:** போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**இடபம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, சுபகாரியச் செலவுகள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன நன்மையுண்டு.

**கடகம்:** உங்களின் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் கைகூடும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், உடல்நலனில் கவனம் தேவை.

**துலாம்:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், தன்னம்பிக்கை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், பகைவர்கள் விலகுவர், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு:** வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சகோதர வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்:** வார்த்தைகளில் நிதானம் தேவை, பெரியோரை அனுசரித்துச் செல்வது நல்லது, பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு.

கிரகநிலை
சந்திராஷ்டமம்
சித்திரை

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| | கிரகநிலை | | ராகு |
| கேது | | | |
| | சனி, புத | சூரி, சுக், குரு | செவ் |

## செந்திநாதன் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)


ஈழத்து இலக்கிய பிதாமகர்களில் ஒருவரான குரும்பசிட்டி அமரர் இரசிகமணி கனக.செந்திநாதனின் நூற்றாண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு குரும்பசிட்டி கலாசார மண்டபத்தில் குரும்பசிட்டி சன்மார்க்க சபைத் தலைவர் சட்டத்தரணி சு.சிவபாதம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, சைவப் புலவர் சு.செல்லத்துரை மற்றும் சாந்திகம் பணிப்பாளர் ம.கோகிலா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

## உளநல விருத்தியை மேம்படுத்தும் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

பெண்களின் உள சமூக விருத்தியை மேம்படுத்தும் கருத்துரை வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.76, கோவில் வீதியிலுள்ள யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம் பெறும். இதில் கருத்துரையை யாழ்.போதனா வைத்தியசாலையின் உள மருத்துவர் எஸ்.சிவயோகன் வழங்குவார். (இ-10)

## மழையால் மந்துவில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மந்துவில் பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கடும் மழையால் வீடுகளிற்குள் மழைநீர் உட்புகுந்துள்ளதால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிலையில்இருப்பதாகவும்வயல் நிலங்களும் வெள்ளக்காடாக காட்சியளிப்பதாக மக்கள் தெரிவித்தனர்.

இதனால் நெற்பயிர்கள் அழிவடைந்து வருவதாகவும் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மழையால் உண்டானசேத விபரம் குறித்து மந்துவில் பிரதேசத்தில் அந்தந்த கிராம உத்தியோகத்தர்கள் தகவல் திரட்டி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-10-101)

## மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி

# இராணுவக் குடியிருப்பு நுழைவாயில் முன் வசாவிளான் மக்கள் நாளை போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் மற்றும் பலாலி தெற்கு மக்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு விழிப்புணர்வு அமைதிப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. வசாவிளான் சமூகநல அமைப்பின் ஏற்பாட்டில் "எமது மண் எமக்கானது" என்றஒற்றைக்கோரிக்கையை முன்வைத்து மக்களை ஒருங்கிணைத்து இப்போராட்டம் நடத்தப்படவுள்ளது.

வசாவிளான் கிராம முன்னேற்றச் சங்க முன்றலில் இருந்து ஆரம்பிக்கவுள்ள இவ் அமைதிப் பேரணி வசாவிளான் இராணுவ குடியிருப்பின் பிரதான நுழைவாயிலை சென்றடைந்து பின்னர் அப்பகுதியில் யாழ்.மாவட்ட, படைகளின் கட்டளைத் தளபதிக்கான மகஜர் கையளிக்கப்படும். ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் பிரதியே யாழ்.கட்டளைத் தளபதிக்கு கையளிக்கப்படவுள்ளதுடன், பிரதமர், மீள்குடியேற்ற அமைச்சர், அரச அதிபர் மற்றும் வலி.வடக்கு பிரதேச செயலாளர் ஆகியோருக்கான பிரதிகள் நேரில் கையளிக்கப் படவுள்ளதாக எற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், மக்களின் அன்றாட வாழ்வாதாரமாக உள்ள விவசாய நிலங்கள் படைத்தரப்பினால் வர்த்தக ரீதியில் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் மேலதிக தரிசு நிலங்களும் விவசாய நிலங்களாக மாற்றி பயனடைந்து வருகின்றனர். மக்களின் வீடுகளில் படைத்தரப்பினரின் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன்ர். தொன்றுதொட்டு வாழ்ந்து வந்த இடங்களை படைத்தரப்பு கையகப் படுத்தி வைத்திருப்பதானது எமது வாழ்விடங்களை சிதைப்பதற்கான, வரலாறுகள் அழிப்பதற்கான, மக்களின் சுதந்திரத்தை முடக்குவதற்கான ஒரு செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது.

மூதாதையர் விட்டுச்சென்ற பணிகளையும் வழித்தடங்களையும் எதிர்கால சந்ததியினருக்கு எம்மால் எடுத்துச்செல்ல முடியாதுள்ளது. இடப்பெயர்வினால் உண்டான மக்கள் அனுபவித்த அவலமும் வேதனையும் இந்த மீள்குடியேற்ற காலதாமதத்தால் மேலும் அதிகமாகியுள்ளது. ஒருவருட காலமாக தொடர் பேச்சுவார்த்தை, மனு கையளிப்பு என பல நடவடிக்கையை படைத்தரப்பு மட்டத்திலும், அரச மட்டத்திலும் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடமும் நேரில் முன்வைக்கப்பட்ட போதும்அதற்கான தீர்வையோ அல்லது அறிகுறிகளையோ அவர்கள் முன்வைக்கவில்லை. ஆகவே நியாயமான எமது கோரிக்கைகளில் அவதானம் செலுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கிலேயே குறித்த விழப்புணர்வு பேரணி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

எனவே மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து உரிய தீர்வு சம்பந்தப்பட்ட தரப்பினரால் முன்வைக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் தொடர் பேராட்டங்களை பல்வேறு வடிவங்களில் நடத்துவதில் கவனம் செலுத்தப்படும். எமது கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் முகமாக வசாவிளான் மற்றும் பலாலி தெற்கு மக்களுடன் சிவில் அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பொதுமக்கள்என அனைவரையும் கலந்துகொண்டு கிராமத்தின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்துமாறு ஏற்பாட்டாளர்களால் கோரப்பட்டுள்ளது. (இ-9)

## "பிரதீபா பிரபா" கலாசார வேலைத்திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்திலிருந்து 450 கலைஞர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள்திணைக்களத்தின் "பிரதீபா பிரபா" கலாசார சிகிச்சை மற்றும் முகாம் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் இருந்து 450 கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய கலாசாரம், கலையின் பன்முகத்தன்மை மற்றும் செழுமையை பாதுகாத்து எதிர்கால தலைமுறைக்கு உயர்ந்த கலைப்படைப்புக்களை உருவாக்கும் நோக்குடன், நாடு முழுவதும் சிதறி இருக்கும் திறமையான தனித்துவமான இளங்கலைஞர்களை அடையாளம் காணுவதற்கும், ஏற்றத்தாழ்வு இல்லாமல் அவர்களை தேசிய மட்டத்துக்கு உயர்த்திவைப்பதற்கு மேடை ஒன்றை உருவாக்கி கொடுப்பதை நோக்கமாக கொண்டு இவ் வேலைத் திட்டம் நாடுமுழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலக பிரிவில் இருந்தும் இசை (பாடல்வரி, பாடல், வாத்தியம்), நடனம், கட்புலக் கலை, நாடகம், இலக்கியம் (கட்டுரை), இலக்கியம்(கவிதை), விவரணம், புகைப்படம், தொலைக்காட்சி, வானொலி ஆகிய 10 துறைகளில், 18 வயது தொடக்கம் 35 வயதுக்குட்பட்ட, தலா 3 பேர் வரையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான வேலைத் திட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை யாழ்.இந்து கல்லூரியில் இடம்பெறவுள்ளது. விரிவுரைகள், போட்டிகள் இடம்பெற்று ஒவ்வொரு துறையிலும் தலா இருவர் தெரிவு செய்யப்பட்டு, தெரிவு செய்யப் பட்டவர்கள் தேசிய நிகழ்ச்சித் திட்டத்துக்குள் உள்வாங்கப்படவுள்ளனர். பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பிரதேச ரீதியில் கீழ் மட்டத்தில் இருக்கும் இளம் கலைஞர்களை அடையாளம் காணுதல், புத்தாக்கம் கொண்ட உயர் கலை படைப்புக்களை உருவாக்குவதற்கான தளம் ஒன்றினை உருவாக்குதல், இளம் கலைஞர்களின் படைப்பாற்றல் திறன்களை அதிகரிக்க இட வசதிகளை அமைத்து கொடுத்தல், பல்துறை திறமை வாய்ந்த கலைஞர்களை நாட்டிற்கு பங்களிப்பு வழங்கல், கலாசார சிகிச்சை மூலம் கலாசார நட்புறவு மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல் போன்ற நோக்கத்தை கொண்டு இவ் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-9)

## அனைத்து மக்களும் சமவுரிமையுடன் வாழும் சூழ்நிலை உருவானால் சர்வதேசம் மதிக்கும்

### சுமந்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு





(குரணவாய்)

இந் நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் சமவுரிமையுடன் வாழ்கின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டால் தான் இந்த நாட்டின் எதிர்காலம் சுபீட்சமாகவும் அதே நேரம் சர்வதேசத்தால் மதிக்கப்படுகின்ற ஒரு நாடாகவும் இருக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட மேல்மாடி கட்டடத்திறப்பு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 3மணியளவில்பாடசாலைஅதிபர்கேகுணநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் கட்டடத்தினைத் திறந்து வைத்ததன் பின் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது,

போர் முடிந்தபிறகு தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று வருவதற்கான சாத்தியக்கூறு உண்டா? என்று இருந்த சூழலில் இருந்து நாட்டிலே ஓர் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அதன்பின்னர் புதிய அரசியலமைப்பு வரைபு ஒன்றை கொண்டு வரும் பணியிலே நாங்கள் வெகு தூரம் வந்திருக்கிறோம்.

இதனுடன் மட்டும் நின்றுவிட முடியாது. இந்நாட்டின் எதிர்காலம் சுபீட்சமாக இருக்க வேண்டுமாக இருந்தால் இந்த நாடு அன்று தேசத்தால் மதிக்கப்படுகிற ஒரு நாடாக இருக்க வேண்டுமாக இருந்தால் இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் திருப்திகரமாக வாழுகிறவர்களாக இருக்க வேண்டும்.

நாங்களும் சம பிரஜைகளாக வாழுகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டால்தான் சாத்தியமாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து தீர்க்கப்படாமல் இருந்த பிரச்சினைக்கு வழி நடத்தல் குழுக்கள் மூலமும் ஆறு உப குழுக்கள் மூலமும் ஓர் அறிக்கையினை முன் வைத்திருப்பது ஒரு வெற்றியாகும் எனத் தெரிவித்தார். (இ-60)


## சமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் வருடாந்த சமய தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல்10 மணிதொடக்கம்இல.66, கல்லூரி வீதி நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சமய தீட்சை பெற விரும்புவோர் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் சைவ பரிபாலன சபையில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு சைவ பரிபாலன சபையின் செயலாளர் வை.இரகுநாத முதலியார் கேட்டுக்கொண்டுள்ளார்.(இ-10)

# நல்லூரிலிருந்து கதிர்காமம் நோக்கி பாதயாத்திரை ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் ஆலயத்திலிருந்து கதிர்காமக் கந்தன் ஆலயம் நோக்கிய புனித திருத்தல தரிசனபாத யாத்திரை நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் நல்லூர்க்கந்தன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகியது.

இலங்கைமுதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர் சபையினர், யாழ். சின்மயாமிஷன் சுவாமிகளின் ஆலோசனைக்கமைய ஈழ மணித் திருநாட்டில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம் வேண்டியும் இனங்களுக்கிடையே பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டி இந்த புனித பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

பிரதான வீதிவழியாக ஆலய தரிசனங்களுடன் வவுனியா, திருகோணமலை தென்கயிலை ஆதீனம் திருகோணமலை காளிகோவில் வளியாக தொடர்ந்து மட்டக்களப்பு வீதியூடாக மாமாங்கேஸ்வரர் ஆலயம் மண்டூர் முருகன் ஆலயம் தாந்தாமலை என் பிரதான புனித ஆலய தரிசனத்துடன் கதிர்காமம் சென்றடையவுள் ளதாக இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை ஆணையாளர் வை. மோகனதாஸ் தெரிவித்துள்ளார். (இ-9)

## பொலிஸ் பரிசோதகர்கள் 29 பேருக்கு பதவி உயர்வு

பொலிஸ் பரிசோதகர்கள் 29 பேருக்கு பதவி உயர்வு வழங்க பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர நடவடிக்கை எடுத்துள்ளார். குறித்த 29 பேரும்பிரதான பொலிஸ் பரிசோதகர்களாக பதவி உயர்வு பெறவுள்ளனர். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்தப் பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது. (இ-7)

## யோகா புதிய பயிற்சி நெறிகள் நல்லூர்த் தேரடி அருகே ஆரம்பம்

யாழ். யோகா உலகம் அமைப்பு யோகா புதிய பயிற்சி நெறிகளை நல்லூர்த் தேரடி அருகிலுள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் ஆரம்பிக்கின்றது. இதற்கான அறிமுக நிகழ்வு நாளை 05.11.2017 ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு சித்த வைத்தியர் கே.கோகிலன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் யோகா கலைக்கான வருகைப் போதனாசிரியர் சி.உமாசுதன் ஆரோக்கியத்திற்கான யோகா வழிமுறைகள் என்னும் தொனிப் பொருளிலும் யோகா உலகம் அமைப்பின் பொதுச் செயலர் சோ.முகுந்தன் தியான யோகம் என்னும் விடயம் பற்றியும் கருத்துரை வழங்குவர்.

யோகா வகுப்புக்கள் காலை 6.00 மணி தொடக்கம் காலை 7.00 மணி வரையும், மாலை நேர வகுப்புக்கள் முறையே 4.30 மணி தொடக்கம் 5.30 மணி வரையும் மற்றும் 6.00 மணி தொடக்கம் 7.00 மணி வரையுமாக மூன்று பயிற்சி நெறிகள் இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும்.

ஆரோக்கியத்திற்கு அவசியமான ஆசனம் பிராணாயாமம், தியானம் மற்றும் சாந்த வழிமுறைகள் அனுபவம் உள்ள ஆசான்களால் பதஞ்சலி யோகா வழிமுறையில் நுணுக்கமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன் பெண்களுக்கான மேலதிக யோகா பயிற்சிகள் பெண் ஆசிரியரால் கற்பிக்கப்படும் கையேடு, சான்றிதழ் என்பனவும் வழங்கப்படும்.

யோகா பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் அறிமுக நிகழ்வில் கலந்து கொள்வது அவசியமானது. ஆர்வமுள்ள அனைவரும் யோகா பயிற்சி நெறிகளில் இணைந்து பயனடைய முடியும் என்று யோகா உலகம் அமைப்பினர் அறிவித்துள்ளனர். (இ-7)


## தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. ஆரம்ப சம்பளம் மாதம் 18,000/= வழங்குவதுடன் பிற சலுகைகளும் உண்டு. ஒரே இடத்தில் சுயமாக மாடு, ஆடு வளர்க்கவும், ஊடுபயிர் செய்யவும் ஆர்வம் உடையவர்களும் தொடர்பு கொள்ளலாம். (சி-264)

தொ.இல: 077 168 1697, 076 620 5322

## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ...
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
'மதசார்பற்றது 'ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

## எலக்ரோனிக் பொருட்கள் விற்பனையாளர் தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஷ் ஆண்டெனா மற்றும் கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு மேற்படி பொருட்கள் விற்பனையில் அனுபவமுள்ள/ஆர்வமுள்ள நபர்கள் தேவை.

தங்கி இருந்து வேலை செய்ய விரும்புவர்களுக்கு தங்குமிடம், உணவு இலவசம். திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும். சிங்களம் ஆங்கிலம் பேசக்கூடியவர் களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

Contact: 077 771 0785 (Kumar)
SATS-TECH ENGINEERS,
NO.51/102, WOLFENDHAL STREET,
COLOMBO-13
(C-263)

குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## மனவளக்கலை யோகா பயிற்சிகள்

உடல், உயிர், மனம் வளமாக

எளிய முறை உடற்பயிற்சிகள் காயகல்ப பயிற்சிகள்






எளிய முறை தியானப் பயிற்சிகள்



யாழ்.அறிவுத் திருக்கோவிலில் தமிழ்நாடு மனவளக் கலைப் பேராசிரியர் ச.இந்திரா அவர்களால் நடத்தப்படுகின்றன.

04.11.2017 சனிக்கிழமை
மாலை 5.00 மணி

அனைவரையும் பயிற்சி பெற்று பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

021 222 2772

இல.31, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-262)

The 66th Annual Festival of Carols
By the
Combined Choirs of
Schools and Colleges of the North
will be held at the St.John's College Hall
on Sunday, 5th Nov. 2017
at 4.00 p.m.
Admission: By Hymn Sheet-Rs 20/=

St.John's College,Jaffna. Principal

C-245

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 28 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/7906 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 42 சூரிசெவ் 8 இல்<br>தகைமை/தொழில்:Charted/ கணக்காளர்<br>தொ.இ: G/7927 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L சொந்த தொழில்<br>தொ.இ: B/7907 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/7929 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BA, Bsc,MBA தனியார் தொழில்<br>தொ.இ: B/7909 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 36 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/7932 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 34 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L அரசதொழில்<br>தொ.இ: B/7910 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 30 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7935 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவுகள் 4,088 குடும்பங்களுக்கு வழங்க வேண்டும்

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தெரிவிப்பு

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் உள்ள 19 கிராம அலுவலர்கள் பிரிவுகளிலும் யுத்த சூழ்நிலைகளால் இடம் பெயர்ந்த நிலையில், 13 ஆயிரத்து 177 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 288 அங்கத்தவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில், சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவை 6 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்து 441 குடும்பங்கள் மட்டுமே பெற்று வருவதுடன் இன்னமும் 4 ஆயிரத்து 88 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டியுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் மருதலிங்கம் - பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடப்பெயர்வின் பின்னரான மக்கள் மீள் குடியேற்றத்தின் போது புதுக்குடியிருப்பு பிரதேச செயலகபிரிவிலும் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலும் உள்ள அநேக கிராமங்களில் மீள் குடியேற்றம் உடனடியாக நடைபெறவில்லை.

இதனால், ஏனைய பிரதேச செயலக பிரிவுகளைப் போன்று சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவை இங்குள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு வழங்க முடியாது போய் விட்டது

இதற்கமைய, 6 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இருந்த அந்த குடும்பங்களின் குடும்ப நிலையை கருத்தில் கொண்டு தரவுகளின் அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இதற்கமைய, விசுவமடு மேற்கு கிராமத்தில் மீள் குடியேறியுள்ள 945 குடும்பங்களில் தற்போது 281 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கப்படுகின்றது.

இன்னமும் 161 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

இதேபோன்று, விசுவமடு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 537 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ள நிலையில் தற்போது 224 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இன்னமும் 75 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கப்பட வேண்டியுள்ளது.

வள்ளுவர்புரம் கிராமத்தில் 420 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ள நிலையில் தற்போது 238 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கப்படுகின்றது.

இன்னமும் 26 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

மாணிக்கபுரம் கிராமத்தில் 422 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ள நிலையில், தற்போது இவற்றில் 262 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கப்படுகின்றது.

இன்னமும் 17 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கப்பட வேண்டியுள்ளது.

தேராவில் கிராம அலுவலர் பிரிவில் 439 குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் தற்போது 277 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

இன்னமும் 29 குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது.

ஆறாவது கிராம அலுவலர் பிரிவான மன்னாகண்டல் கிராமத்தில் 277 குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் 159 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழாங்கப்படுகின்றது.

இன்னமும் 50 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கப்பட வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் கடந்த 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் படிப்படியாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மிகுதியாக இருக்கும் 13 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து இதுவரை ஒரு பயனாளி கூட சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவை பெறவில்லை.

அவ்வாறான கிராமங்களான, சுதந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவில் 819 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ள நிலையில் 487 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கப்பட வேண்டியுள்ளது.

தேவிபுரம் கிராம அலுவலர் பிரிவில் 905 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் 582 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கப்பட வேண்டியுள்ளது.

வள்ளிபுனம் கிராமத்தில் 634 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ள நிலையில், 308 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கப்பட வேண்டியுள்ளது. உடையார் கட்டு வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 757 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ள நிலையில், 329 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கப்பட வேண்டியுள்ளது.

கோம்பாவில் கிராமத்தில் ஆயிரத்து 3 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ள நிலையில், 518 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியுள்ளது.

உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் ஆயிரத்து 111 குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில், 515 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கப்பட வேண்டியுள்ளது.

இரணைப்பாலை கிராம அலுவலர் பிரிவில் 448 குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில், 226 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண உதவி வழங்க வேண்டியுள்ளது.

புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் ஆயிரத்து 542 கிராம அலுவலர் பிரிவில் 671 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி வழங்கப்பட வேண்டியுள்ளது.

சிவநகர் கிராமத்தில் 455, குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில், 308 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியுள்ளது.

புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 807 குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப் பட்டுள்ள நிலையில், 319 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

மல்லிகைத் தீவு கிராம அலுவலர் பிரிவில் 498 குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில், 261 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

ஆனந்தபுரம் கிராமத்தில் 244 குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில், 178 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

மந்துவில் கிராம அலுவலர் பிரிவில் 614 குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில், 308 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

ஒட்டுமொத்தமாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளில் 4 ஆயிரத்து 88 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)



## புகையிரதக்கடவையை விரைந்து அமையுங்கள்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மாங்குளம் புகையிரத நிலையத்துக்கும் முறிகண்டி புகையிரத நிலையத்துக்கும் இடைப்பட்ட மக்கள் குடியிருப்புக்களில் புகையிரத கடவை அமைக்கப்படாத இடங்களுக்கு விரைவில் புகையிரதக் கடவைகளை அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

இது தொடர்பில் பல்வேறு தரப்பினரிடம் முறையிட்டும் தமக்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லையெனமக்கள் தெரிவிக்கின்றனர் இறுதியாக மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாகவும் இரண்டு தடவைகள் புகையிரத திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எனவே உரிய அதிகாரிகள் விரைந்து உயிர் ஆபத்து ஏற்படுவதற்கு முன்னர் செயற்பட்டு தமக்கான பாதுகாப்பான கடவையை அமைத்து தருமாறு கோருகின்றனர்

பாதுகாப்பான கடவை இல்லாததன் காரணமாக பாடசாலை மாணவர்கள் முதல் அனைவரும் பாதிக்கப்படுவதாகவும் உயிரபயத்துடனேயே குறித்த கடவையை கடப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (2-281)

### கடந்த 3 தினங்களில்

## 100 மி.லீ மழைவீழ்ச்சி கிளிநொச்சியில் பதிவு

கிளிநொச்சியில் கடந்த மூன்று நாட்களாக கடும் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்து வருகின்றது. இதனால் மாவட்டத்தின் நீர் நிலைகள் சடுதியாக உயர்ந்துள்ளன.

பருவப்பெயர்ச்சி ஆரம்பித்துள்ள நிலையில் வடக்கு உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் கனமழை பெய்து வருகிறது.

இந் நிலையில் மூன்று நாட்கள் பெய்த கடும்மழையில் 100 மில்லி லீற்றர் மழை பெய்துள்ளது. கிளிநொச்சியிலுள்ள குளங்களின் நீர்மட்டங்களின் அளவு அதிகரித்துள்ளது. குறிப்பாக இரணைமடு குளத்தில் 7 அடியாக இருந்த நீர் சடுதியாக 13 அடியாக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-312)

## மன்னார்-பூநகரி பேருந்து சேவை

பூநகரி அரச அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் நலன் கருதி புதிய பேருந்து சேவையொன்று மன்னாரில் இருந்து கிளிநொச்சி வரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பேருந்து மன்னார் பேருந்து நிலையத்தில் இருந்து 8.20 மணிக்கு புறப்பட்டு பூநகரி ஊடாக 11 மணியளவில் கிளிநொச்சி சென்றடையும்.

பிற்பகல் 3.30 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு பூநகரி ஊடாக பிற்பகல் 6 மணியளவில் மன்னார் பேருந்து நிலையத்தைச் சென்றடையுமென கிளிநொச்சி இ.போ.சபை சாலை வட்டாரத் தகவல் தெரிவிக்கின்றது. (2-84)

## ஐயன்கன்குளம் கிராமத்தை சுற்றி மின்சார வேலிகள் அமைப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு ஐயன்கன்குளம் பகுதியில் காட்டுயானைகளின் அழிவுகளில் இருந்து விவசாய செய்கைகளை பாதுகாக்கும் வகையில் மின்சார வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்தும் காட்டுயானைகளின் தொல்லை அதிகளவில் காணப்படுவதுடன் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரச்செய்கைகளையும் அழித்து வருகின்றன.

இந்நிலையில் ஐயன்கன்குளம் பகுதி மக்கள் தமது பயிர்ச்செய்கைகளையும் தமது கிராமத்தையும் பாதுகாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் ஐயன்கன்குளம் கிராமத்தை சுற்றி யானைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் மின்சார வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. (2-315)

## இறைச்சிக்காக மாடுகள் கடத்தல்; பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு கள்ளியடிப்பகுதியில் இருந்து சுமார் 40 வரையான மாடுகளை இறைச்சிக்காக கடத்தி அனுமதியின்றி கொண்டுசென்ற நபர்களை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளார்கள்.

கடந்த 31 ஆம்திகதி இரவு கள்ளியடிப்பகுதியில் 40 கால்நடைகள் அனுமதி பெறாமல் முள்ளியவளைக்கு கொண்டுசெல்ல முற்பட்ட வேளை புதுக்குடியிருப்பு பொலிஸார் 5பேரை கைது செய்ததுடன் கால்நடைகளையும் கைப்பற்றினர்.

இவர்கள் அனைவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்கள். (2-281)

## உள்ளூர் மீனவர்களின் பாதிப்பு தொடர்பில் இன்று கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

சுருக்குவலைத்தொழிலால் உள்ளூர் மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பான கலந்துரையாடல் கடந்த முதலாம் திகதி பிற்பகல் நான்கு மணியளவில் முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் நடைபெற்றது.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட மீனவர்கள், சுருக்குவலைகளுக்கான அனுமதியை இனிமேலும் வழங்கக்கூடாது எனத் தெரிவித்தனர்.

மேலும், இன்று சனிக்கிழமை அனைத்து கடற்றொழிலாளர் சங்கங்களின் சார்பாளர்களையும் அழைத்து இது தொடர்பில் கலந்துரையாடுவதாகவும் தெரிவித்தனர். (2)

# போதைப்பொருள் விழிப்புணர்வு செயலமர்வு வேலைத்திட்டம்



(பனிக்கன்குளம்)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது நாடளாவிய ரீதியில் NO DRUGS நாம் YOUTH எனும் தொனிப்பொருளில் போதைப். பொருள் விழிப்புணர்வு செயலமர்வு முன்னெடுத்து அதனூடாக கிராமங்கள் தோறும் விழிப்புணர்வை எற்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தி வருகிறது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட இளைஞர், யுவதிகளை தெளிவூட்டும் வேலைத்திட்டமொன்று கடந்த முதலாம் திகதி துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் துணுக்காய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஜெ.சுகந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி பானுமதி காந்தரூபன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி சறோஜா குகநேசதாசன், துணுக்காய் பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் சி.சண்முகநாதன், இளைஞர் சேவை அதிகாரி செ.சுஜிதரன், இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் செல்வி ஜெ.யூட்பிரிடா, விரிவுரையாளர்கள், பொதுமக்கள் மற்றும் இளைஞர், யுவதிகளென பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி



(வவுனியா)

போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி மற்றும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் மற்றும் மாகாண சபை உறுப்பினர், பிரதேச செயலக ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள்



மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-9)

# 'உயிரிழை' அமைப்பின் உறுப்பினர்களின் சித்திபெற்ற பிள்ளைகள் கௌரவிப்பு



(பனிக்கன்குளம்)

முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் அமைப்பான "உயிரிழை" அமைப்பின் உறுப்பினர்களின் பிள்ளைகளின் இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணிக்கு மாங்குளத்தில் அமைந்துள்ள உயிரிழை அமைப்பின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, LEBARA நிறுவன நிறுவகர் கந்தையா பாஸ்கரன், மனநல வைத்தியர் வைத்திய கலாநிதி சிவதாஸ் LEBARA நிறுவன இலங்கைக்கான நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் விவேகானந்தா பிரேம்குமார் மற்றும் உயிரிழை அமைப்பின் வடக்கு மாகாணம் தழுவிய பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

உயிரிழை அமைப்பு கல்வி மற்றும் சுகாதார உதவித்திட்டம் உள்ளிட்ட பல உதவித்திட்டங்களை இந்த உறுப்பினர்களுக்கு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# இந்த அரசும் தமிழ் மக்கள் ஏற்கும் நியாயமான அரசியல் தீர்வைத் தராது

## முன்னாள் எம்.பி வினோ சுட்டிக்காட்டு



(வவுனியா)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது இரண்டும் இணைந்த தற்போதைய கூட்டரசாங்கமோ தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான அரசியல் தீர்வொன்றினைத் தந்துவிடப்போவதில்லை என்பதை முன்பள்ளிகளின் சிறார்களிடம் கேட்டாலே சொல்லிவிடுவார்கள். தெற்கின் அரசியல் நிலைமை இதைத்தான் சொல்லி நிற்கின்றது என முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் உடையார்கட்டு, விசுவமடு பிரதேசங்களில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு உறையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். உடையார்கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் திறன் வகுப்பறை கட்டடத்தையும் விசுவமடுவில் இலவச கணனி பயிற்சி நிலையத்தையும் திறந்து வைத்து உறையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது, தெற்கிலே என்றுமில்லாதவாறு அரசியல் நெருக்கடி தோன்றியுள்ளது. ஒருவர் பாராளுமன்றத்தின் மீது குண்டு வீசப்பட வேண்டும் என்கிறார். இன்னுமொருவர் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை ஆதரிப்பவர்களை சுட்டுக்கொல்ல வேண்டும் என்கிறார். இவர்கள் தான் வன்னியில் எமது மக்களை கூட்டாக படுகொலை செய்தவர்கள். வன்னியின் அவலத்துக்கு காரணமானவர்கள். இது இனவாதத்தின் உச்ச நிலையைக் காட்டுகிறது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் முன்மொழியப்பட்ட இடைக்கால தீர்வுத்திட்டம் மூலம் நிறைவேற்றப்படுமா? என்பதில் நாம் இன்னமும் நம்பிக்கையீனத்துடனேயே இருக்கின்றோம். இறுதியான வரைபு திட்டத்தை அறியாமல் எம்மில் சிலர் ஆதரிக்கவேண்டும் என்கின்றனர், சிலர் ஆதரிக்கக் கூடாது என்கின்றனர். தமிழ் மக்கள் குழம்பிப் போயுள்ளனர். ஆதரிப்பதோ, எதிர்ப்பதோ ஒருமித்து ஒரு நிலைப்பாடு எடுக்க முடியாதவர்களாக எமது தலைவர்கள் இருக்கின்றனர். இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டித் தீர்வைத் தவிர வேறெந்த தீர்வையும் ஏற்கப்போவதில்லை என கடந்த ஒவ்வொரு தேர்தல்களிலும் விஞ்ஞாபனங்களாகவும் வீரப் பேச்சுக்களாகவும் மேடையேறி முழங்கிவிட்டு அந்த நிலைப்பாட்டிலிருந்து நமது தலைவர்கள் எவருமே தப்பிக் கொள்ள முடியாது. போராளிகளினதும் பொதுமக்களினதும் தியாகங்களுக்கும் இழப்புக்களுக்கும் துரோகம் செய்து விட முடியாது. அப்படியாயின் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்களின் போது சமஷ்டி தீர்வையும் வடகிழக்கு இணைப்பையும் கைவிட்டு விட்டோம் என பகிரங்கமாகச் சொல்லி மக்களிடமே மீண்டும் ஆணையைப் பெற வேண்டும் அல்லது கொள்கையில் உறுதிப்பாட்டுடன் மக்களிடம் செல்ல வேண்டும் என்றார். (2)

# படையினரிடமுள்ள விவசாய நிலங்கள், குளங்களை விடுவித்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் வசமுள்ள விவசாய நிலங்கள் மற்றும் சிறிய குளங்களை விடுவித்துத் தரவேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் மக்கள் குடியமர்விற்கு அனுமதிக்கப்பட்டு எட்டு வருடங்கள் கடந்துள்ள போதும் மக்களின் வாழ்வாதார பயிரச் செய்கை நிலங்கள் பல இன்னும் விடுவிக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதி மக்களுக்குச் சொந்தமான 18 இற்கும் மேற்பட்ட சிறிய குளங்கள் அதன் கீழான 2000 ஏக்கர் வரையான விவசாய நிலங்கள் மகாவலித்திட்டத்தின் கீழ் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள மக்கள் பயிர்ச் செய்கைகளுக்குரியதாக்கியுள்ளனர் என பல்வேறு தரப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள அம்பகாமம் கரிப்பட்டமுறிப்பு ஆகிய பகுதிகளில் பல ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் தொடர்ந்தும் படையினர் வசமுள்ளன.

இதேவேளை அம்பகாமம், முறிகண்டி, ஒட்டுசுட்டான் ஆகிய பகுதிகளில் 10இற்கு மேற்பட்ட சிறிய விவசாய குளங்கள் தொடர்ந்தும் பல்டயினரின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன எனவும் சுட்டிக் காட்டியுள்ள விவசாயிகள் இவற்றை விடுவித்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் அதிகளவான நிரப்பரப்பை படையினர் கையக்கப்படுத்தியுள்ள மாவட்டமாக காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில் அம்பகாமம் பகுதியில் 8ஆயிரத்து 500 ஏக்கர் வனப் பகுதியும் கறிப்பட்டமுறிப்பு முதல் இரணைமடுக்குளம் வரையுமான 3ஆயிரத்து 500 ஏக்கர் வனப்பகுதியும் கேப்பாபிலவுப் பகுதியில் 2 ஆயிரத்து 500 ஏக்கரும் கொக்கிளாய் பிரதேசத்தில் 520 ஏக்கரும் கோட்டை கட்டிய குளம், அம்பலப் பெருமாள்குளம், அமைதிபுரம் ஆகிய பகுதிகளில் தலா 50 ஏக்கரும் தேறாங்கண்டல் பகுதியில் 120 ஏக்கரும் என சுமார் 16 ஆயிரத்து 720 எக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் படையினர் வசமுள்ளதாக மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (2-315)





# முகமாலையில் வெடிபொருட்கள் அகற்றப்பட்ட ஒருபகுதி விரைவில் மக்களிடம் கையளிக்கப்படும்

(கண்டாவளை)

கிளிநொச்சி முகமாலை பகுதியில் வெடிபொருட்களை அகற்றி மிக விரைவில் ஒரு பகுதியை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு வெடிபொருட்கள் அகற்றுவதிலுள்ள தாமதம் காரணமாக தற்போது 258 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது மீள்குடியேற்றத்திற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ள போதும் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில் கடந்த ஏழு ஆண்டுகளாக வெளியிடங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

முகமாலைப்பகுதி என்பது மிகவும் வெடிபொருட்கள் ஆபத்தான பகுதியாக காணப்படுகின்றது.

இப்பகுதியில் வெடிபொருட்களை அகற்றுவதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நீண்டகாலம் யுத்தம் இடம்பெற்ற பகுதியாக இது காணப்படுவதனால் அதிகளவான வெடி பொருட்கள் ஆபத்தான பகுதியாக காணப்படுகின்றது என்றும் தெரிவித்த தன்னார்வத்தொண்டு நிறுவனமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் பிரதிநிதி தற்போது ஒரு பகுதி வெடிபொருட்கள் அகற்றப்பட்டு அதன் பணிகள் நிறைவு பெற்று வருகின்றன.

அதனை மிக விரைவில் மக்கள் மீள்குடியேறுவதற்கு கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (2-315)

# இரத்ததான முகாம்

(முல்லாவி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை மாபெரும் இரத்ததான முகாம் நடைபெறவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரத்ததான நிகழ்வில் இளைஞர்கள், இளம்பெண்கள், ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களையும் கலந்து கொண்டு தானத்தில் சிறந்த தானமான இரத்ததானத்தை வழங்கி சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்கள். (2-15-315)


# நல்லிணக்க நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பிய பிரதிநிதிகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களின் 4 பிரதிநிதிகளை உள்ளடக்கிய பாராளுமன்ற குழு, அரசியல் ஆலோசகர், ஐரோப்பிய பாராளுமன்ற செயலக பிரதிநிதிகள், இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழு உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 10 உறுப்பினர்கள் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் GSP+ உள்ளடங்கலான அபிவிருத்திகள் பற்றி கலந்துரையாடுவதற்காக இலங்கைக்கு வந்துள்ளனர்.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நேரடி வழிகாட்டலின் கீழ் செயற்படும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சுக்கு வந்து ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற குழு நேற்று முன்தினம் கலந்துரையாடலை மேற்கொண்டது.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற தேசிய நல்லிணக்க உபாயங்கள், கருத்திட்டங்கள் மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பாக அவ்வமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி விளக்கமளித்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அமைச்சரவை அங்கீகாரத்துடன் முன்னெடுக்கப்பட்ட மாவட்ட நல்லிணக்குழு 25 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டிருப்பதுடன் அக்குழுக்கள் மாவட்ட மட்டத்தில் இன, மத, கலாசார முரண்பாடுகளையும் மோதல்களையும் தீர்ப்பதற்கான செயற்பாடுகளை புரிந்துணர்வு அடிப்படையில் பேச்சுவார்த்தை மூலம் சுமுகமாக தீர்வுகாணும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. பலமதத் தலைவர்களை அங்கத்தவர்களாக உள்ளடக்கிய இந்தமாவட்ட செயலணிஒரு முன்னேற்றகரமான செயற்பாடு எனவும் இதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கான திட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியம் பங்குபற்ற விரும்புவதாகவும் குறிப்பிடப்பட்டது.





ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற குழு காணாமல் போனோருக்கான அலுவலகத்தை அமைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில் கைச்சாத்திட்டமையும் அதனடிப்படையில் பாராளுமன்ற அரசியல்யாப்பு சபை 7 ஆணையாளர்கள் மற்றும் அங்கத்தவர்களை நியமிப்பது தொடர்பாக வெளிப்படைத்தன்மையுடன் கூடிய விளம்பரத்தினை பிரசுரித்தமை பற்றியும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்களையும் இளைஞர்களையும் நல்லிணக்க தூதுவர்களாகவும் பரிந்துரைப்போராகவும் மாற்றுவதன் மூலம் நிலைபேறான சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பான வேலைத்திட்டங்களான நல்லிணக்க நட்புத்தன்மை கொண்ட பாடசாலைத் திட்டம், ஞாயிறுதினங்களில் நடைபெறும் அறநெறி பாடசாலைகளில் நல்லிணக்கத்தை பாடவிதானங்களில் உள்வாங்குவதுடன் ஆசிரியர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. தென்னாபிரிக்கா மற்றும் வட அயர்லாந்து போன்ற நாடுகளினது சிறந்த நல்லிணக்க செயற்றிட்ட அனுபவங்கள் உள்வாங்கப்பட்டு முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்கள் மற்றும் உபாயங்கள் பற்றி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி விளக்கமளித்தார்.

நிலைமாற்றுநீதி தொடர்பான முன்னேற்றங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டதுடன் ஆற்றுப்படுத்தலின் கீழ் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் 50 ஆயிரம் நிரந்தரமான கல் வீடுகளை பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்குவதற்கான முன்னெடுப்பு பற்றியும் 2500 கி.மீ வீதிகளை புனரமைக்கும் வேலைத் திட்டங்கள் பற்றியும் வாழ்வாதார, பொருளாதார மேம்பாடு திட்டங்கள் தொடர்பாக பாரிய முதலீடுகளுடன் கூடிய முன்னெடுப்புகள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் முன்னெடுக்கப்படுவது தொடர்பாகவும் ஐரோப்பிய ஒன்றிய பாராளு மன்ற குழுவிற்கு விளக்கமளிக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ள வாழ்வாதார, பொருளாதார மேம்பாட்டு திட்டங்களும் பொருளாதார, சமூக உட்கட்டமைப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான சிறப்பு கருத்திட்டங்கள் பற்றியும் விளக்கப்பட்டன.

ஐரோப்பிய ஒன்றியக்குழு வடமாகாணத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின் அடிப்படையில் காணி விடுவிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை துரித கதியில் மேற்கொள்ள வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்திற்கான மாற்று சட்டத்தை உருவாக்குதல், கைதிகள் தொடர்பான வழக்குகளை துரிதகதியில் முன்னெடுத்தல் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் என்பவற்றின் முன்னுரிமைப்படுத்தலின் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

நல்லிணக்க வேலைத் திட்டங்கள் தொடர்பாக முன்னேற்றகரமான செயற்பாடுகள் நடைபெறுவதாக பாராளுமன்றக்குழு தெரிவித்தது. அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற சமாதான ஊடகம், நல்லிணக்க நடைபவனி, தேசிய நல்லிணக்க வார பிரகடனம், தேசிய நல்லிணக்க கொள்கை மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள், தாயகம் திரும்பும் அகதிகள், சமூகமயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகள், காணாமல்போன அங்கத்தவர்களின் குடும்பத்தவர்கள், அங்கவீனர்கள், வலுவிழந்தோர் மற்றும் இடம் பெயர்ந்தவர்கள் தொடர்பான ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளும் பற்றி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி விளக்கமளித்தார்.

நல்லிணக்க முன்னேற்ற பெறுபேற்று குறிகாட்டிகளும் அறிக்கையிடலும் தொடர்பாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் நிதிப்படுத்தலின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற அறிக்கையிடல் செயற்பாடுகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றக் குழுவில் தெற்காசிய தூதுக்குழு தலைவி ஜீன் டெனிஸ் லம்பேட், ஐரோப்பிய ஒன்றிய இலங்கைக்கான தூதுவர் டுங்லாய் மாகு, தெற்காசிய தூதுக் குழுவின் உபதலைவர் ரிச்சட் கிரகம் கோபட், புல்ரிக் முலர், வசீட் கான், போல் கொட்பிரே, பொருளாதார ஆலோசகர் ரொசான்லைமன், அரசியல் ஆலோசகர் சபையின் சுசான் கொளம்பாமேயர் உட்பட பாராளுமன்ற குழு மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என நல்லிணக்க அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# எவ்வாறான பிரதிநிதியை தெரிவு செய்ய வேண்டும்

## சு.க.செயலர் அறிவுரை



(கொழும்பு)

கிராமத்திற்கான மக்கள் பிரதிநிதியை தெரிவு செய்யும் போது அரசாங்கத்தின் அதிகாரம் இருக்கும் கட்சியின் மூலம் அந்த பிரதிநிதியை தெரிவு செய்தால் கிராமத்திற்கு சேவைகளை செய்து கொள்ள முடியும் என சு.க.வின் செயலரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ராஜாங்கனைய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் உதவிகளை சரியான முறையில் கிராமத்து மக்கள் அனுபவிக்க செய்வது வெட்கமான செயலோ அல்லது கூடாத நடவடிக்கையோ அல்ல.

ஜனவரி மாத இறுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தெளிவாக கிராமத்திற்குச் சேவை செய்யக் கூடிய நபரை தெரிவு செய்ய வேண்டும்.

கிராமத்திற்கு தெரிவு செய்யப்படும் நபர் கிராமத்திற்கு சாதகமாக இருந்தாலும் ஏனைய கிராமங்களுக்கு நஷ்டம் ஏற்படும்.


பொதுவாக பங்கேற்று மேற்கொள்ளப்படும் பணிகளில் அவர்களின் பங்களிப்பு குறைவாகவே இருப்பதை தற்போது காணக்கூடியதாகவுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நிதி வழங்கலில் சமத்துவம் பேணப்படல் வேண்டும்

## கோடீஸ்வரன் கோரிக்கை

(கொழும்பு)

ஒரு குறிப்பிட்ட மாகாணத்தில் காணப்படும் நிதி, மூல வளங்கள் மற்றும் கனிய வளங்களை எடுக்கின்றபோது அந்த மாகாணத்தின் அனுமதியுடன் அது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



அத்தோடு, அவற்றில் கிடைக்கும் வருமானத்தில் குறிப்பிட்ட வீதத்தை அந்த மாகாணமே பயன்படுத்தும் நிலை ஏற்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

புதிய அரசியல் யாப்பு தொடர்பான இடைக்கால அறிக்கை குறித்த விவாதத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்தோடு, உள்ளூராட்சி சபைகளுக்கு மாகாண சபைகள் நிதி வழங்குகின்ற செயற்பாட்டில் சமத்துவம் பேணப்படல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அதாவது, பாதிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கும் நகர சபைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்றும், அதுவே சமத்துவமான அதிகாரம் மற்றும் அபிவிருத்தியை சம்பந்தப்பட்ட பிரதேசங்கள் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும் என்றும் கோடீஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# பேருந்து விபத்து; நால்வர் காயம்



கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி சென்ற பேருந்தொன்று விபத்திற்கு உள்ளாகியதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று அதிகாலை கல்குணாமடு பூவே பாலத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக ஈரட்டைபெரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகியதாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சாரதியின் தூக்கமின்மையே விபத்திற்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை ஈரட்டைபெரியகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பாதாள உலகக்குழுக்களை முடக்க மும்முனை நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

**தெற்கில் பாதாள உலகக் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்துள்ள நிலையில் பாதாள உலகத்தை முற்றாக முடக்க பொலிஸார் மும்முனை நடவடிக்கை ஒன்றினை ஆரம்பித்துள்ளனர். பாதாள உலகக் கோஷ்டி மோதல்கள் பழிதீர்த்தல் படலத்தின் பின்னணியில் உள்ளதாக விசாரணைகளில் அடையாளம் காணப்பட்டுள்ள, தற்போது வெளிநாடுகளிலிருந்து கோஷ்டிகளை இயக்கும் 5 பாதாள உலக தலைவர்களை குறிவைத்து இந்த மும்முனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

டுபாயில் உள்ள மாகந்துரே மதூஷ், கொஸ்கொட சுஜீ, உள்ளிட்ட மூவரையும் இந்தியாவில் உள்ள அங்கொட லொக்கா, லடியா ஆகியோரையும் கைது செய்ய இந்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர். லத்தீபின் கீழ் இந்த நடவடிக்கைகள் இடம் பெறுவதுடன், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, பொலிஸ் விசேட அதிரடிப் படை (எஸ்.ரி.எப்.) மற்றும் திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவு (ஓ.சி.பி.டி.) ஆகியவற்றை ஒன்றிணைத்து இந் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காக வேண்டி சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பையும் பெற திட்டமிடப்பட்டுள்ள நிலையில் முதலில் இந்த பாதாள உலக தலைவர்களுக்கு எதிரான சாட்சியங்களை திரட்டி சிவப்பு அறிவித்தல்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. (இ-7)

# பதவியிழந்தார் கீதா குமாரசிங்க எம்.பியாகிறார் பியசேன கமகே!



(கொழும்பு)

கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்பட்டதையடுத்து, அவரது இடத்துக்கு முன்னாள் அமைச்சர் பியசேன கமகே நியமிக்கப்படவுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்ட பின்னரே கீதா குமாரசிங்கவின் பறிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்புரிமைக்கு தகுதியுடைய அடுத்த உறுப்பினரின் பதவிப் பிரமாணம் இடம்பெறும் என நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரால் குறித்த பெயர் பரிந்துரைக்கப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

இரட்டைக் குடியுரிமையை கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க அந்தப் பதவியை வகிக்க முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியிருந்தது.

இந் நிலையில், ஏற்பட்ட வெற்றிடத்துக்கு முன்னாள் அமைச்சர் பியசேன கமகே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் நியமிக்கப்படவுள்ளார்.

கடந்த 2015 ஓகஸ்ட் மாதம் 17 ஆம்திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் காலி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட கீதா குமாரசிங்க 63 ஆயிரத்து 955 வாக்குகளால் நாடாளுமன்றத்துக்கு தெரிவானார்.

இவருக்கு அடுத்தபடியாக குறித்த மாவட்டத்தில் 47 ஆயிரத்து 874 வாக்குகளை முன்னாள் அமைச்சர் பியசேன கமகே பெற்றிருந்தார். இதற்கமைய அவர் குறித்த வெற்றிடத்துக்கு நியமிக்கப்படவுள்ளார். (இ-7)

# சு.க. - ஐ.தே.க. இனி இணையாது

(கொழும்பு)

"எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து, ஐக்கிய தேசியக் கட்சி, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போட்டியிடாது" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் அமரசேன தெரிவித்தார்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து போட்டியிடும் என்று, வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், அமைச்சரவை இணைப்பேச்சாளர்களில் ஒருவரான அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்திருந்தமை, அவருடைய தனிப்பட்ட கருத்தாகும்" என்றார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பிரச்சினைக்கு தீர்வு கண்டிருந்தால் மகிந்தவே இன்றும் ஜனாதிபதி

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதா சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பிரச்சினையை தீர்க்க முடிந்திருந்தும் மகிந்த ராஜபக்ஷ அதனை செய்யத் தவறியிருந்தார். எனவே தேசிய பிரச்சினைக்கு அவர் தீர்வு வழங்கியிருந்தால் இன்றும் அவர் ஜனாதிபதியாக இருந்திருப்பார். புலம்பெயர்ந்த தமிழர்கள் முதலீடுகள் செய்ய தயாராக இருக்கின்றனர். எனினும் ஊக்குவிப்பு கிடையாது என கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அரசியலமைப்பு சபையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடைக்கால அறிக்கை மீதான நான்காம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பில் மாற்றம் ஏற்பட்டாலும் தற்போது புதிய அரசியலமைப்பு தேவை என்பதை உணர்ந்து இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் மலையக மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டனர். அவர்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்டனர். ஏனெனில் எமது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. அதன் பின்னர் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் ஊடாக மலையக மக்கள் பல்வந்தமாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

நாம் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவிற்கு நன்றி கூற வேண்டும். அவர்தான் எம்மவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கினார். மலையக மக்கள் யுத்தத்தினால் அதிகளவில் பாதிக்கப்பட்டனர். தற்போது வடக்கு- கிழக்கில் வாழும் மக்களுக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே மீண்டும் யுத்தம் வராமல் பாதுகாக்க வேண்டும்.

இதன்படி இனங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். மதங்கள் மதிக்கப்பட வேண்டும். இதற்கு சிங்கப்பூர் உதாரணமாகும். இலங்கையில் மதங்களையும் மொழிகளையும் மதிக்கும் சூழல் வேண்டும்.

அரசியலமைப்பின் நிதி தொடர்பான உப குழுவில் நானும் இருந்தேன். பந்துல குணவர்தன அதன் தலைவராக இருந்தார். இதனை அடிப்படையாக கொண்டு அரசியலமைப்பினை தயாரிக்கவே ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாட்டில் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டு வந்தாலும் சிக்கல்கள் உள்ளன. இந்த பிரச்சினைக்கு தீர்வாக அமைதி கொண்டு வரப்பட வேண்டும். தற்போது ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய மூன்று தலைவர்களும் இணைந்து அரசியலமைப்பை உருவாக்க முன்னிலை வகிக்கின்றனர். எனவே இன்று விட்டால் நாளை செய்ய முடியாது.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கு முன்னின்று செயற்பட்டார். எனினும் அவர் அப்பகுதிகளில் வாழும் மக்களின் மனங்களில் உள்ள பிரச்சினைகளை இனங்காணவில்லை. ஆனால் இந்த பிரச்சினை தீர்க்க முடிந்திருந்தும் மகிந்த ராஜபக்ஷ அதனை செய்ய தவறியிருந்தார். எனவே தேசிய பிரச்சினைக்கு அவர் தீர்வு வழங்கியிருந்தால் இன்றும் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்திருப்பார்.

எனவே சிங்கள மக்களின் ஆதரவுடன் அரசியலமைப்பினை நிறைவேற்ற வேண்டும். அத்துடன் தற்போது தம்மின மோதல்கள் அதிகமாகும். மலையக தமிழர்கள் மோதுகின்றனர். வடக்கு- கிழக்கு மக்களுக்குள் பிரச்சினை. முஸ்லிம்களுக்குள் பிரச்சினைகள் உள்ளன. இது மாற வேண்டும். ஐக்கியத்தை கட்டியெழுப்ப வேண்டும். இலங்கை மீது இன்னும் புலம்பெயர்ந்தவர்களுக்கு நம்பிக்கை வரவில்லை. வெளிநாடுகளுக்கு சென்றால் எப்போது தமிழீழம் உருவாகும் என கோருகின்றனர். அத்துடன் வெளிநாடுகளிலிருந்து வரும் முதலீட்டாளர்களுக்கு ஆர்ப்பாட்டங்கள் இடையூறாக உள்ளன.

நாட்டில் முதலீட்டாளர்களை ஊக்குவிப்பாளர்கள் இல்லை. புலம்பெயர்ந்தவர்கள் தமிழர்கள் முதலீடுகள் செய்ய தயாராக இருக்கின்றனர். எனினும் ஊக்குவிப்பு கிடையாது. இதுபெரும் பிரச்சினையாகும். இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இதற்கு சிங்களவர்களின் ஆதரவு அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெள்ளக்காடானது சென்னை

(சென்னை)

சென்னையில் இடைவிடாமல் பெய்து வரும் கனமழை காரணமாக சென்னை நகர் முழுவதும் வெள்ளத்தில் மிதக்கிறது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வீதிகள் வெள்ளக்காடாகியுள்ளதால் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதுடன், மக்களும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

போக்குவரத்தைவழமைக்குக்கொண்டுவருவதற்கு பொலிஸார் திண்டாடியுள்ளனர்.

பூந்தமல்லி நெடுஞ்சாலை, அண்ணாசாலை, காமராஜர் சாலை, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சர்தார் பட்டேல் சாலை உள்ளிட்ட நகரின்



முக்கிய வீதிகளில் மழைநீர் ஆறுபோல் ஓடியுள்ளது.

தண்டவாளங்களில் தண்ணீர் தேங்கியதால் மின்சார ரயில் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பஸ்சேவையும் பாதிக்கப்பட்ட காரணத்தால் மெட்ரோ ரயில் நிலையங்களில் தஞ்சம் புகுந்த மக்கள், அங்கிருந்து மெட்ரோ ரயில் மூலம் பயணிக்கின்றனர்.


கனமழை காரணமாக அடையாறு ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

இதேவேளை, சென்னையில் கொட்டித் தீர்த்த கனமழையின் காரணமாக பல இடங்களில் வெள்ளம் தேங்கியதால் 112 இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் கடந்த 2015 ஆம் ஆண்டு பெய்த கனமழை காரணமாக மக்கள் பெரும் உயிரிழப்புக்களையும், சொத்திழப்புக்களையும் சந்தித்துள்ளனர். இந்நிலையில், மீண்டும் அவ்வாறானதொரு இழப்பு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் மக்கள் உள்ளனர். (இ-7)

# மக்கள் நலனில் மத்திய, மாநில அரசுக்கு அக்கறையில்லை

சீமான் ஆவேசம்



(சென்னை)

அரச நிர்வாகம் என்பது வருமுன் காப்பதாக இருக்க வேண்டும். அந்த வகையில் பருவமழையை எதிர்கொள்ள தமிழக அரசு தவறிவிட்டது என்றே கூறவேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

மக்கள் நலன் சார்ந்த திட்டங்களில் கவனம் செலுத்த மத்திய, மாநில அரசுகளுக்கு நேரமில்லை எனவும் அவர் தெரிவித்தார். திருச்சியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த போதே சீமான் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அவர், 'மின்சார சபையின் அலட்சியத்தால் கொடுங்கையூரில் இரண்டு சிறுமிகள் உயிரிழந்த பின்னர், மின்சார சபை அதிகாரிகளை தற்காலிக பணி நீக்கம் செய்வது ஏற்புடையதல்ல.

பருவ மழையையொட்டி அனைத்துத் துறைகளும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முன்கூட்டியே எடுத்திருக்க வேண்டும். ஆனால், அதனை தமிழக அரசு மேற்கொள்ளவில்லை.

பெரு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பணிபுரியும் அரசாக மத்திய அரசு மாறிவிட்டது.

பா.ஜ.க. கட்சியினரும் மக்கள் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளை அரங்கேற்றி வருகின்றனர் என ஆவேசமாகக் கூறினார் சீமான். (இ-7)

# அணு ஆயுதச் சோதனை மையத்தில் விபத்தா?

## வடகொரியா மறுப்பு



(பியாங்யாங்)

அணு ஆயுதச்சோதனை மையத்தில் விபத்து என வெளியான செய்திக்கு வடகொரியா மறுப்பு தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் 6 ஆவது அணு ஆயுத சோதனையானது பலரது உயிரை பறித்து விட்டது என வெளியான செய்தியை வடகொரியா அரசு ஊடகம் மறுத்துள்ளது. இது தவறான தகவல் என தெரிவித்துள்ளது.

வடகொரியா கடந்த மாதம் ஐதரசன் வெடிகுண்டைப் பரிசோதனை செய்த பின்னர் பியாங்யாங் அணு ஆயுத சோதனை மையத்தில் சுரங்கம் இடிந்து விபத்து நேரிட்டது.

இதில் 200க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என ஜப்பானின் அஹாஹி தொலைக்காட்சி செய்தி வெளியிட்டது.

இதற்கு மறுப்பு தெரிவித்துள்ள வடகொரியா ஊடகம், இவ்விவகாரம் தொடர்பாக வெளியான செய்திகள் தவறானவை. எங்களுடைய நாட்டிற்கு எதிராக அவதூறு பரப்புவதற்கான செய்தி. வடகொரியா அணு ஆயுத மேம்பாட்டில் நவீன நிலையில் உள்ளது என தெரிவித்துள்ளது. (இ-7)

# ஸ்பெயின்

# தனிநாடு கே

# தலைவர்க



## 741 பொதுமக்களை கொன்று மு

(மொசூல்)

ஈராக்கின் மொசூல் நகரில் அமெரிக்க கூட்டுப் படையுடன் நடந்த சண்டையின் போது மனிதகேடயமாக பயன்படுத்திய 741 பொது மக்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொன்று குவித்த தகவல் வெளியாகியுள்ளது.

ஈராக்கின் 2ஆவது பெரிய நகரமான மொசூல் மற்றும் அதைச் சுற்றிய பகுதிகள் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசம் இருந்தன. அவற்றை ஒருங்கிணைத்து தனிநாடு அமைத்து நிர்வாகம் செய்து வந்தனர்.

அப்பகுதியை மீண்டும் கைப்பற்ற அமெரிக்க கூட்டுப்படையின் உதவியுடன் ஈராக் இராணுவம் ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் போரிட்டது. இந்த சண்டை பல மாதங்கள் நீடித்தது. இறுதியில் மொசூல் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் மீட்கப்பட்டன.

மொசூலில் நடந்த சண்டையின் போது அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படைகள் தீவிரவாதிகள் மறைவிடத்தின் மீது குண்டு வீச்சு நடத்தியது. இத்தாக்குதல் கடந்த 2016 நவம்பர் முதல் 2017 ஜூலை மாதம் வரை நடந்தது.

# தமிழக துணைமுதல்வர்

## ஓ.பி.எஸ். வீட்டிற்குள் வெள்ளம்



(சென்னை)

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்ச்சியாக பெய்து வருகிறது.

இதன் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் மழைநீர் தேங்கி மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

அத்துடன் பல இடங்களில் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டும், சில இடங்களில் வெள்ளங்களும் ஏற்பட்டுள்ளன.

சென்னை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

இந்த மழை வெள்ளத்துக்கு துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வீடும் தப்பவில்லை.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது வீட்டின் தரைதளத்தில் வெள்ளம் நீர் சூழ்ந்தது.

இதையடுத்து நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. (இ-7)

# மராவியில் பாதுகாப்பு கவ

(மராவி)

பிலிப்பைன்ஸின் மராவி நகரில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் சிலர் மறைந்துவாழும் நிலையில், அங்கு பாதுகாப்பு நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக பாதுகாப்புத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மராவியின் தற்போதைய நிலைமை தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை அவர்கள் தெரிவிக்கையில், 'மராவி நகரில் மோதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும், பாதுகாப்புப் படையினருக்கும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கும் இடையில் அவ்வப்போது மோதல் தொடர்ந்த



வண்ணமுள்ளன.

இந்நிலையில், ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ஒருவரை நேற்று முன்தினம் புதன்கிழமை கைதுசெய்து விசாரணை நடத்திய போது, மராவியில் பொதுமக்களுடன் பொதுமக்களாகச் சேர்ந்து ஐ.எஸ் பயங்கரவாதிகள் சிலர் மறைந்து வாழ்கின்றமை தெரியவந்துள்ளது.

# வெளிநாடு

# ன் அரசு அராஜகம் கோரி வாக்கெடுப்பு கள் சிறையிலடைப்பு!



(கொழும்பு)

**நாட்டுக்கு எதிராக கிளர்ச்சி செய்த தாக தெரிவித்து காட்டலோனியாவில் வாக்கெடுப்பில் முக்கிய பங்காற்றிய எட்டுத் தலைவர்களை ஸ்பெயின் உயர் நீதிமன்றம் கைது செய்து சிறை வைத் துள்ளது.**

இந்நிலையிலேயே குறித்த எட்டு தலைவர்களும் கைது செய்யப்பட்டு சிறை வைக் கப்பட்டுள்ளனர்.

கலகம் செய்தல், தேச துரோகம் மற்றும் பொது நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டு களின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட் டுள்ள குறித்த காட்டலோனி யத் தலைவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் முன்னி லையா கியிருந்த நிலை யிலேயே கைது செய்யப் பட்டு சிறை வைக்கப்பட டுள்ளனர்.

அதேவேளை பதவி நீக் கம் செய் யப்பட்ட காட்டலோ னிய முன்னாள் ஜனாதிபதி கார்லெஸ் பூகிடமண்ட் (Carles Puigdemont) மற்றும்நான்கு தலைவர்கள் நீதிமன்றம் அனுப்பிய அழைப்பாணையை நிரா கரித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இந்த விசா ரணை அரசியல் நோக்கம் கொண்டது என தற்போது பெல்ஜியத்தில் தங்கியுள்ள கார்லெஸ் பூகிடமண்ட் கண்ட னம் தெரிவித்துள்ளார். (இ-7)

## ன்று குவித்த ஐ.எஸ்

அப்போது அங்கிருந்து குடும்பத்தினரு டன் பொது மக்கள் தப்பி ஓடினர். அவர் களை பிடித்து மனித கேடயமாக ஐ.எஸ். தீவிரவாதிகள் பயன்படுத்தினர். இறுதி யில் அவர் களை கழுத்தை அறுத்தும், துப்பாக் கியால் சுட்டும் கொன்றனர்.

இது போன்று 741 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த தகவலை ஐ.நா. சபையின் மனித உரிமை கள் அமைப்பின் தலைவர் சயீத் ராத் அல் உசேன் தெரிவித்தார்.

மேலும் ஈராக் இராணுவம் மற்றும் அமெரிக்க கூட்டுப்படைகள் நடத்திய குண்டு வீச்சில் பொது மக்கள் 461 பேர் உயிரிழந்துள்ளனர். (இ-7

## வலைக்கிடம்



இந்நிலையில், சுமார் 39 பேர் இவ் வாறு மறைந்து வாழ்வதாகவும் தெரியவந்துள்ளது. இது மிகவும் ஆபத்தானது என்றனர்.

மராவி நகரில் ஐ.எஸ். பயங்கர வாதிகளுக்கு எதிராக கடந்த ஐந்து மாதங்களாக முன்னெடுக்கப்பட்டி ருந்த மோதல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக கடந்த ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி பிலிப்பைன்ஸ் அரசாங் கம் அறிவித்திருந்ததுடன், யுத்த வெற் றிக் கொண்டாட்டத்திலும் ஈடுபட்டிருந் தது.

இதன் பின்னர், இடம்பெயர்ந்த மக்கள் தங்களது இருப்பிடங்களுக்குத் திரும்ப அரசாங்கம் அனுமதித்திருந் தது. இதுவரையில் 30 ஆயிரம் பேர் திரும்பியுள்ளதாகவும் கணக்கிடப் பட்டுள்ளது. (இ-7)

## காட்டலோனியா தலைவர்களுக்காக பொதுமக்கள் போராட்டத்தில் குதிப்பு

(மட்ரிட்)

சுதந்திர நாடாக பிரகட னம் செய்யப்பட்டதை அடுத்து கைது செய்யப்பட்ட காட்டலோ னியா முன்னாள் அமைச்சர் கள் சிறையில் அடைக்கப் பட்டதைக் கண்டித்து பொது மக்கள் போராட்டத்தில் குதித் துள்ளனர்.




ஸ்பெயினில் காட்டலோ னியா மாகாணம் தன்னாட்சி உரிமை பெற்றது. அதற்கு சுதந்திரம் வழங்கும்படி கோரிக்கை எழுந்தது. கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி பொது வாக்கெடுப்பு நடந்தது.

அதில் வெற்றி பெற்றதாக் அறிவிக்கப்பட்டு காட்டலோ னியா சுதந்திரம் அடைந்த தாக அறிவிக்கப்பட்டது. இதை ஸ்பெயின் அரசு நிராகரித்தது.

மேலும் காட்டலோனியா பாராளுமன்றம் கலைக்கப் பட்டது. அது ஸ்பெயினின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. மேலும் காட்டலோனியா பிரிவி னைக்கு எதிராக செயற்பட்ட தாக கூறி அதன் தலைவர் சார்லஸ் புக்டிமான்ட் உள் ளிட்ட 20-க்கும் மேற்பட்டோர் மீது வழக்கு பதிவு செய்யப் பட்டது.

இவர்கள் நீதிமன்றில் நடைபெறும் விசாரணைக்கு நேரில் ஆஜராக உத்தரவிடப்பட் டது. இதற்கிடையே காட்ட லோனியா தலைவர் கார்லஸ் புக்டிமான்ட் மற்றும் 4 முன் னாள் அமைச்சர்கள் பெல்ஜி யம் தலைநகர் பிரசல்ஸ் நகருக்கு தப்பிச் சென்று விட்டனர்.

மற்ற 8 முன்னாள் அமைச் சர்கள் நீதிமன்றில் ஆஜரா கினர். அவர்களை சிறையில் அடைக்கவும் பிணையில் வர முடியாதபடியும் நீதிபதி கார் மன் லமேலா உத்தரவிட்டார்.

இதற்கிடையே நீதிமன் றில் ஆஜராகாத காட்டலோ னியா தலைவர் புக்டிமான்ட் மற்றும் 4 அமைச்சர்களை கைது செய்ய சர்வதேச பிடி யாணை பிறப்பிக்கப்பட் டது.

கைது செய்யப்பட்டவர் கள் மீதான தண்டனை நிரூ பிக்கப்பட்டால் அவர்களுக்கு 30 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும்.

இதற்கிடையே ஸ்பெயின் அரசின் நடவடிக்கையைக் கண்டித்தும் கைது செய்யப் பட்டவர்களை விடுதலை செய்யக்கோரியும் காட்ட லோனியா பாராளுமன்றம் உள்ள பார்சிலோனியாவில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் திரண்டு போராட்டம் நடத்தி வருகின்றனர். (இ-7)

## நியூயோர்க் தாக்குதல்; ஐ.எஸ்.பொறுப்பேற்பு




(நியூயோர்க்)

நியூயோர்க்கின் மன் ஹாட்டன் பகுதியில் நடத்தப் பட்ட தாக்குதல் சம்பவத் துக்கு, ஐ.எஸ். பயங்கரவாதி கள் பொறுப்பேற்றுள்ளதாக பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய தாக்குதல் தாரி, கலிஃபா மாநிலத்தின் முன்னாள் போராளி என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இது தொடர் பாக போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை எனவும் அப்பத்திரிகை கூறியுள்ளது. மன்ஹாட்டன் பகுதியில் நடைபாதையில்சென்றுகொண் டிருந்த பொதுமக்களை இலக் குவைத்து, டிரக் வண்டி யால் மோதி நடத்தப்பட தாக்குதலில், 8 பேர் உயிரிழந் ததுடன், 12 படுகாயமடைந் துள்ளனர்.

இதனையடுத்து, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை, துப்பாக்கிச் சூடு நடத்தி பொலிஸார் கைது செய்திருந்தனர்.

29 வயதுடைய சந்தேக நபர், கடந்த 2010ஆம் ஆண்டு அமெரிக்காவில் குடியேறிய வர் என்று பொலிஸாரின் விசாரணையில். தெரியவந் துள்ளது. (இ-7)

## இந்தியாவுக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக ஜஸ்டைர் நியமனம்



(வோஷிங்டன்)

இந்தியாவுக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக கென் னத் ஜஸ்டைர் நியமிக்கப்பட் டுள்ளார். இதற்கான ஒப்பு தலை அமெரிக்க செனட் சபை வழங்கியுள்ளது.

இதுவரை காலமும் இந்தி யாவிற்கான அமெரிக்க தூத ராக பதவி வகித்தவர் ரிச்சர்ட் வர்மாவின் பதவிக்காலம் முடிவடைந்ததை தொடர்ந்து இந்த நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் பரிந்துரைக்கு அமைய கென்னத் ஜஸ்டைர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், கடந்த ஜூன் மாதம் வரை ட்ரம்பின் சர்வதேச பொருளாதார விவகாரங் கள் துணை உதவியாளராக வும், தேசிய பொருளாதார கவுன்சிலின் துணை இயக்கு நராகவும் பதவி வகித்தி ருந்தார்.

அதற்கு முன்னதாக கடந்த 2001 முதல் 2005 ஆம் ஆண்டுவரை, முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் வணிக செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். (இ-7)

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் டுவிட்டர் கணக்கு திடீர் முடக்கம்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் டுவிட் டர் கணக்கு சுமார் 11 நிமிட ங்கள் செயற்பாடு இன்றி இருந்தது.

அமெரிக்க ஜனாதிபதி யாக டொனாலட் ட்ரம்ப் பதவி வகித்து வருகிறார்.

இவர் கடந்த 2009-ம் ஆண்டு முதல் 'டுவிட்டர்' சமூக வலைத்தளத்தில் கண க்கு வைத்துள்ளார். இதன் வழியாக தான் தனது கொள் கைக் கோட்பாடுகளை அவர் வெளியிட்டு வருகிறார். தனது அரசியல் எதிரிக ளுக்கு பதில் அளிக்கிறார். 2016-ம் ஆண்டு ஜனாதிப தித் தேர்தலின் போது டுவிட்டர் இணையத்தளத் தின் மூலம் தேர்தல் பிரசா ரம் மற்றும் வாக்குச் சேகரிப் பில் ஈடுபட்டார்.

தற்போது ஜனாதிபதியான பிறகும் தொடர்ந்து டுவிட டரை பயன்படுத்தி வருகி றார். இவரை 4 கோடியே 17 இலட்சம் பேர்பின்தொடருகின் றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை அவரது 'டுவிட்டர்' கணக்கு திடீரென முடங்கியது. சுமார் 11 நிமி டங்கள் செயற்பாடு இன்றி இருந்தது. அவரது டுவிட்டர் பக்கத்துக்கு சென்று தொடர்பு கொண்ட போது எந்த விதமான தகவலும் கிடை க்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன. (இ-7)

# கொழும்பு துறைமுகத்தில் இந்திய போர்க்கப்பல்கள்







(கொழும்பு)

இந்தியக் கடற்படையின் மூன்று போர்க்கப்பல்கள் நல்லெண்ண மற்றும் பயிற்சிப் பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இந்தியக் கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களான திர், சுஜாதா ஆகியனவும் இந்தியக் கடலோரக் காவல்படையின் சாரதி என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலுமே, கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளன.

இவை ஐந்து நாட்கள் இங்கு தரித்து நிற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் போது இந்தக் கப்பல்கள். இலங்கை கடற்படைக் கப்பல்களுடன் இணைந்து பயிற்சிகளில் ஈடுபடவுள்ளன.

அத்துடன் சமூக சேவைகளிலும் விளையாட்டுக்களிலும் இந்திய கடற்படையினர் ஈடுபடவுள்ளனர்.(இ-7)

# மூன்று ரோந்துப் படகுகளை இலங்கைக்கு வழங்குகிறது ஆஸி



(கொழும்பு)

இலங்கைக்கு மூன்று ஸ்டபி கிராப்ட் வகை படகுகளை (Stabicraft vessels) அவுஸ்திரேலியா வழங்கவுள்ளது. நேற்று முன்தினம் காலை இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த, அவுஸ்திரேலியப் பிரதமர் மல்கம் ரேன்புல், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த போது இதற்கான உறுதி மொழியை அளித்துள்ளார்.

இலங்கை கடலோரக் காவல்படையின் பயன்பாட்டுக்காகவே, அதிவேக ஸ்டபி கிராப்ட் படகுகளை அவுஸ்திரேலியா வழங்கவுள்ளது.

இவை, கரையோர நடவடிக்கைகளுக்குப் பெரும் பயனுள்ளதாக இருக்கும் என்று அவுஸ்திரேலியப் பிரதமர் கூறியுள்ளார்.

ஆட்களைக் கடத்தும் நடவடிக்கைகள், போதைப் பொருட் கடத்தலைத் தடுக்கும் நடவடிக்கைகளில் இலங்கையின் ஒத்துழைப்புக்கும் அவுஸ்திரேலியப் பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இலங்கை கடற்படைக்கு மூன்று அதிவேக ரோந்துப் படகுகளை அவுஸ்திரேலியா வழங்கியிருந்தது. இந்த நிலையில், மேலும் மூன்று அதிவேக ரோந்துப் படகுகளை வழங்க வுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சாய்ந்தமருது பிரச்சினைக்கு அரசியல் தலைமைகளே காரணம்-ஹிஸ்புல்லாஹ்

(ஏறாவூர்)

"சாய்ந்தமருது மக்களின் தனி பிரதேச சபைக் கோரிக்கையானது அரசியல் தலைமைத்துவங்களின் தேர்தல் கால பொய் வாக்குறுதிகளின் வெளிப்பாட்டால் ஏற்பட்ட பிரச்சினை என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு இவ் விடயம் குறித்து நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச சபை என்பது இன்று நேற்றுள்ள பிரச்சினை அல்ல. அது நீண்ட நாட்களாக உள்ள ஒரு பிரச்சினை. தேர்தல் காலங்களில் அரசியல் சுயலாபங்களுக்காக அரசியல் தலைமைத்துவங்கள் வழங்கிய வாக்குறுதிகளின் வெளிப்பாடே இன்றைய நிலைக்குக் காரணம்.

இப்பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பும் - கடப்பாடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்துக்கு உள்ளது. ஆனால், அது இதனை தீர்த்து வைக்காது இவ்வளவு காலம் இழுத்தடிப்பு செய்துள்ளது. இறுதியில் இந்த விடயத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் றிசாத் பதியுதீன் தலையிட்டதால் அது அரசியல் பிரச்சினையாக மாறியுள்ளது.

இரண்டு கட்சிகளினதும் தலைமைத்துவங்களுக்கிடையில் உள்ள அரசியல் ரீதியிலான பிரச்சினை இன்று ஒரு சமூகம் வீதியில் இறங்கிப் போராடுகின்ற அளவுக்கு மிகப்பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. அத்தோடு, இரண்டு முஸ்லிம் ஊர்களுக்கிடையில் பகைமையும் இது ஏற்படுத்தியுள்ளமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

புதிய அரசியலமைப்பு திருத்தம், மாகாண சபை எல்லை நிர்ணயம் போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய சமூகம் இவ்வாறு வீதியில் இறங்கி போராடுவது மிகவும் மனவேதனையான விடயமாகும். மறைந்த மாபெரும் தலைவர் அஷ்ரப் இருந்திருந்தால் ஒரு தொலைபேசி அழைப்பில் தீர்த்து வைக்கும் விடயமாக இது அமைந்திருக்கும்.

இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சர் பைஸர் முஸ்தபா ஆகியோருடன் கலந்தாலோசித்து இறுதித் தீர்மானம் எடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேங்காய் பற்றாக்குறைக்கு காரணம் இதுவா?

(கொழும்பு)

நாட்டில் பிஸ்கட் வகைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் பாரியளவில் தேங்காய்களை கொள்வனவு செய்வதே நாட்டில் தேங்காய் பற்றாக்குறை நிலவ பிரதான காரணம் என தெங்கு உற்பத்தியாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

பாரிய நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் உடனடி தேங்காய் பால் மாவை பாவனையாளர்கள் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பாவனைக்கான தெங்கு நாட்டில் உற்பத்தி செய்யப்படினும், அண்மைக் காலமாக திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட நிறைய பிஸ்கட் தொழிற்சாலைகள், பாரியளவில் தேங்காய்களை கொள்வனவு செய்கின்றமையே நாட்டில் தேங்காய் பற்றாக்குறை நிலவக் காரணம் எனவும் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, தேசிய தெங்கு உற்பத்தி சபையின் ஊடாக நகரும் லொறி மூலம் தேங்காய் ஒன்று 65 ரூபாவுக்கு விற்பனை செய்யப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நடப்பது நடக்கட்டும்

நம்மை நோக்கித் தினம் தினம் பிரச்சினைப் பந்துகள் வீசப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. நாம் ஆயத்தமாக இல்லாமலும் தக்க பாதுகாப்புடன் இல்லாமலும் இருப்பதால் அவை நம்மைக் கடுமையாகத் தாக்குகின்றன.

செயற்பாடு என்கிற மட்டையை வைத்துக் கொண்டு அறிவு என்கிற கையைக் கொண்டு விளாசி சிக்ஸர் அடிக்க நம்மால் முடியும். இதற்குத் துணிவு என்கிற உறுதியான கால்கள் தேவை.

இப்படிச் செயற்படாவிட்டால் நம் விக்கெட்டை வீழ்த்தி அவுட்டாக்கிவிடப் பிரச்சினைப் பந்துகள் தயாராக இருக்கின்றன.

எல்லா விடயங்களும் நம் விருப்பப் படியோ நம் கணிப்பின் படியோ நிகழ்வது இல்லை. பல நம் விருப்பத்திற்கு நேர்மாறாகவும் நம் கணிப்பிற்குத் தலைகீழாகவும் நிகழ்கின்றன.

நமக்கு விருப்பமற்றவை நிகழும் போது அவற்றை எதிர்கொள்ளத் தயாராகிவிட்டால் விடயம் பூதாகாரமாகிவிடும்.

எதிரி நாட்டு அரசன் ''போர் தொடுக்கிறேன்'' என்றான். இந்த அரசன் ''வேண்டாம் போர்'' என்று தூது விட்டான். எதிரி அரசன் கேட்டபாடில்லை. மாறாக நகைத்தான். என்னை எதிர்க்கத் திராணியற்ற உன் அரசனை என் காலடியில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்கச் சொல் பிழைத்துப் போகட்டும் என்றான் அவன். தூதுவன் முகம் தொங்கித் திரும்பினான். நடந்தவற்றைச் சொன்னான். அவன் படைகளைத் தயார் செய்தான். அவன் சொன்ன செய்தி கேட்டு அரசன் ஆவேசப்படவில்லை. ஆனால் படைகளைத் தயார் செய்தான். அரண் அமைக்கச் சொன்னான். போருக்கு நான் தயார்! என அறிவித்தான். எதிரி அரசன் தவறாகக் கணித்துவிட்டான். தூது அனுப்பிய அரசன் கோழை என்று; அவன் தயார் என்றதும் இவனுக்குத் தயக்கம் வந்துவிட்டது.

நம் வாழ்க்கையிலும் இப்படித்தான். பிரச்சினை எனும் எதிரியை எதிர்கொள்ள அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட வேண்டும். மனப்படையையும் தயார் செய்து கொண்டுவிட வேண்டும். வருவது வரட்டும் நடப்பது நடக்கட்டும் எதிர்கொள்வோம் என்று!

இந்த மனநிலை காரணமாகப் பிரச்சினை எனும் எதிரி சிறுத்துப் போய் விடுவான்.

பிரச்சினைகளை இப்படியே அணுகிப் பழகிவிட்டால் அதன் பின்னர் எந்தப் பிரச்சினையையும் கையாள்வது என்பது எளிது. ஆனால் பொதுவாகப் பிரச்சினைகளை எதிர்கொள்கிற விடயங்களில் பெரும்பாலானவர்கள் செய்கிற தவறுகள் இரண்டு.

ஒன்று எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டோம் என்று எண்ணிக் கொண்டு எங்காவது செம்மையாகக் கோட்டை விட்டு விடுவது.

இரண்டாவது நான் எதற்கும் தயார் என்று சொல்லிக் கொண்டிருந்துவிட்டு பிரச்சினை நெருங்கியதுமே மனபலத்தையும் துணிவையும் இழந்துவிடுவது.

இந்த இரு தவறுகளும் நடக்காமலிருந்தால் எந்தப் பிரச்சினையும் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது!

**லேனா தமிழ்வாணன்**

# சர்வதேச பௌத்த மகா சம்மேளனத்தின் 7ஆவது மாநாடு ஜனாதிபதி தலைமையில்

(கொழும்பு)

இலங்கையில்இடம்பெறும் சர்வதேச பௌத்த மகா சம்மேளனத்தின்ஏழாவது பௌத்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் அலரி மாளிகையில் இடம் பெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பில் இவ் வருட மாநாடு இலங்கையில் நடைபெறுவதுடன், 47 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த 300 பிரதான மகா நாயக்க தேரர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினர் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.





உலக சமாதானத்திற்கு பௌத்த சமயம்எனும்தொனிப்பொருளில் இடம்பெறும் இந்த பௌத்த மாநாடு நேற்று முன் தினம் முதல் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

நவம்பர் 6 மற்றும் 7 ஆம் திகதி அளவில் வரலாற்று பிரசித்தி பெற்ற அநுராதபுர புண்ணிய பூமி மற்றும் கண்டி தலதா மாளிகையின் இடம்பெறும் வழிபாட்டில் ஈடுபட மாநாட்டில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஜப்பான் சர்வதேச பௌத்த மகா சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படும் இந்த மாநாட்டில், உலகில் அமைதியையும் விழுமியப்பண்புகளையும் மேம்படுத்துதல் மற்றும் உலகம் முழுவதும் பௌத்த சமயத்தை பரவச் செய்வதற்கான பிரகடனமும் வெளியிடப்படவுள்ளது.

ஆரம்ப விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி, உலகில் தற்போது காணப்படும் பல்வேறு பிரச்சினைகள், நெருக்கடிகள் என்பவற்றினைக் கட்டுப்படுத்தி அமைதியான உலகினை கட்டியெழுப்புவதற்கு சமயக் கோட்பாடுகளினால் வழங்கப்படும் வழி காட்டல்கள் மிகவும் முக்கியமானவை எனத் தெரிவித்தார். (இ-7)

# 'ஏக்கிய' என்ற வசனத்தைத் தவிர வேறெதனையும் ஹெல உறுமய ஏற்றுக்கொள்ளாது - சம்பிக்க



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'ஏக்கிய' என்ற வசனத்தைத் தவிர வேறெதனையும்ஜாதிக ஹெல உறுமய ஏற்றுக்கொள்ளாது என, அக்கட்சியின் பொதுச் செயலாளரும் மேல் மாகாண அபிவிருத்தி மற்றும் பெரு நகர அபிவிருத்தி அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஏக்கிய என்பது, நாட்டின் அடிப்படைச் சட்டம் எனவும் அதனை ஒரு நிறுவனத்தின் ஊடாகவே முன்னெடுக்க வேண்டும் என்பதையுமே தமது கட்சியின் கருத்தாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

பல நிறுவனங்களுக்கு சட்டத்தின் அதிகாரங்கள், அரசமைப்புக்கூடாக பிரித்துக் கொடுக்கப்படுமாயின், அந்த ஏக்கியவில் எவ்விதமான பிரயோசனமும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரசியலமைப்பு குறித்த விசுவாசத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# என்முகத்தை காட்டியே வெற்றி பெற்றேன் மகிந்தவுக்குப் பதிலடி கொடுத்த நிஷாந்த

கடந்த பொதுத் தேர்தலில் தனது முகத்தை காண்பித்து வெற்றிப் பெற்றவர்கள் நாடாளுமன்றத்தில் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறினாலும் தான் உட்பட ஏனைய பிரதிநிதிகள் தமது முகங்களை காட்டியே நாடாளுமன்றத்திற்கு தெரிவானதாக பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

அதேபோல் மகிந்த ராஜபக்ஷ தனது முகத்தை காட்டியே கிராமத்திற்கு மக்கள் மத்திக்கு சென்றார் எனவும் அவர் கூறியுள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில்உரையாற்றும்போதே நிஷாந்த முத்து ஹெட்டிகம இதனைத் தெரி வித்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெரியளவில் வெற்றி பெற தயாராக இருக்கின்றோம்.

சிலர் கூறுவது போல் கூட்டணி சேர்ந்து போட்டியிடும் எந்த எண்ணமும் இல்லை. எப்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடப் போவதில்லை.

அரசாங்கம் என்ற வகையில் 50 வீத நன்மை மற்றும் 50 வீத தீமையான பிரதி பலன்களை பெற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் செயற்பட்டு வந்தாலும் எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய போவதில்லை.

அதேபோல் பசில் ராஜபக்ஷ இருக்கும் வரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டு எதிர்க்கட்சியும் இணைய முடியாது எனவும் நிஷாந்த முத்துஹெட்டிகம மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஏறாவூர் சவுக்கடி இரட்டை படுகொலை சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்!

(ஏறாவூர்)

ஏறாவூர், முருகன் கோவில் வீதி, சவுக்கடியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி எம்.ஐ எம் ரிஸ்வி முன்னிலையில், நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டபோது இவர்கள் இருவரையும் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவின் சவுக்கடி பிரதேசத்தில் கடந்த தீபாவளி தினமான 18 ஆம் திகதி இடம்பெற்ற தாய் மற்றும் மகன் இரட்டைக் கொலையின் சந்தேக நபர்கள் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த வீட்டில் இருந்து கொள்ளையிடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் யட்டவரவின் வழிகாட்டலில் விசேட விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் வஹாப் தலைமையில், பொலிஸ் உத்தியோகத்தர்களான ரோஹன, மனோகரன், தாஹா, பண்டார, சுரங்க , சாரதி பிரியசாந்த ஆகியோர் அடங்கிய குழுவினர் முன்னெடுத்த தொடர் விசாரணைகளை அடுத்தே குறித்த இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புதிதாக இருந்தால் போவேன்

## விமல் வீரவன்ச கூறுகிறார்

(கொழும்பு)

"அரசமைப்புத் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படும் சகல செயற்பாடுகளையும் இரத்துச்செய்து, புதிதாக ஆரம்பிக்கப்படுமாயின், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கூட்டவிருக்கின்ற சர்வகட்சிக்கு நான் போவதற்குத் தயார்" என்று, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கோட்டையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின்தலைமையகத்தில்நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டுகருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாட்டில் முன்னெடுக்கப்படும் புதிய அரசமைப்புச் செயற்பாட்டுக்குள் வைக்கோர்க்கும் வகையில், சர்வகட்சிக் கூட்டம் நடத்தப்படுமாயின், அதில் தாம் பங்கேற்கப் போவதில்லை என்றும் அதற்கு தாங்கள் ஒருபோதும் தயாரில்லை" என்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

"தற்போது முன்னெடுக்கப்படும் அந்தச் செயற்பாடுகளை அவ்வாறேகைவிட்டு விட்டு, புதிய வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டுமென, ஜனாதிபதி அந்நந்தப் பிரிவுகளுக்கு யோசனைகளை முன்வைக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கல், மணல் விநியோக பிரச்சினைகளுக்கு தீர்வு

## நிமல் போபகே தெரிவிப்பு

(கொழும்பு)

கல், மணல் மற்றும் மண் விநியோக நடவடிக்கைகளின் போது ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் சட்டத்தரணி நிமல் போபகே தெரிவித்துள்ளார்.

கட்டுமான நடவடிக்கைகளின் போது சுற்றாடலுக்கு பாதுகாப்பான முறையில் அவற்றை பெற்றுக் கொள்வது சவாலானது என நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல், மணல் விநியோகத்தின் போது ஏற்படுகின்ற சிரமங்கள் சம்பந்தமாக தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக நிமல் போபகே மேலும் தெரிவித்தார். (இ-7)



# புதிய அரசியலமைப்பு தேவையில்லை! ஸ்டிக்கர்களை ஒட்டும் இரகசிய கும்பல்

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பு தேவையில்லை என்ற வாசகம் தாங்கிய ஸ்டிக்கர்களை வாகனங்களில் இரகசியமாக ஒட்டும் கும்பல் ஒன்று பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

வாகன உரிமையாளர்களின் அனுமதியின்றி, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களில் இவ்வாறு இரகசியமாக ஸ்டிக்கர்கள் ஒட்டப்படுகின்றன.

சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு இந்த விடயம் குறித்து பொலிஸாருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

இவ்வாறு ஸ்டிக்கர் ஒட்டும் கும்பலுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு, பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் வரும் சிறிய குழுக்கள் பிரபல்யமான இடங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களில் இந்த ஸ்டிக்கர்களை ஒட்டி விட்டு சென்று விடுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் சன நெரிசல் மிக்க நகரங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்கள், பல்பொருள் அங்காடிகளுக்கு அருகாமையில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்கள், வாகன தரிப்பிடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்கள் போன்றவற்றில் இந்த ஸ்டிக்கர்கள் ஒட்டப்படுகின்றன.

குறுகிய நேரத்தில் இந்த ஸ்டிக்கர்களை ஒட்டி விட்டு இந்தக் கும்பல் தப்பிச் சென்று விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு சட்டம் ஒழுங்கு அமைச்சு பொலிஸாரை அறிவுறுத்தியுள்ளது. (இ-7)

# சேவைநலன் பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்கள பிரதம அலுவலரும்யாழ்.உரும்பிராய்சைவத் தமிழ் வித்தியாலய முன்னாள் அதிபரும் சமாதான நீதவானுமான மு.விக்னேஸ்வரனின் சேவை நலன் பாராட்டுவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் வடையம்பதி கற்பக விநாயகர் மணிமண்டபத்தில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அதிபர் சுந்தரம் திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெறும். (இ-10)

# ஊர்காவற்றுறை பிரதேச சபையைக் கண்டித்து மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்கள் போராட முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் தொடர்பில் உரிய அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நடவடிக்கைகள் காலதாமதமாகும் பட்சத்தில் பிரதேச சபைக்கு எதிராக யாழ். மாவட்ட மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் என யாழ. மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் பல்வேறு நெருக்கடிக்கு மத்தியில் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு நடத்தி செல்கின்றனர். மீனவக் குடும்பங்கள், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்கள் எனப் பலருடைய வாழ்வாதாரத்தையும் முன்னெடுக்கும் செயற்றதிட்டத்தை இச் சங்கங்கள் மேற்கொண்டு வருகிற்னறன.

அந்த வகையில் தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் செயற்பாட்டையும் 32 க்கு மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பத்தின் வேலை வாய்ப்பையும் இடைநிறுத்தும் செயற்பாட்டை தனியார் துறையினர் சிலருடன் இணைந்து ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளர் மேற்கொண்டு வருவதாக அறிய முடிகிறது.

இச் செயற்பாட்டை எமது சம்மேளனம் வன்மையாக கண்டிப்பதுடன், இவ்வாறான பக்கச்சார்புடைய செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

மீனவர் சங்கங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு உரிய செயற்பாட்டை விரைவில் மேற்கொள்ளுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர். (இ-9)



வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் 2017ஆம் ஆண்டுக்கான நிறைமதி கலைவிழா நிகழ்வு பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் கேட்போர் கூடத்தில் வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், சிறப்புவிருந்தினராக வடமாகாண கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார், வடமாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.கவே வெற்றிபெறும்

## அமைச்சர் தயாகமகே நம்பிக்கை

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியே வெற்றி பெறும். அதற்கான வேலைத் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் இப்பொழுதே முன்னெடுத்து வருகின்றோம் என ஆரம்ப கைத்தொழில் அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.



ஹற்றன் நோர்வூட் பகுதிக்கு நேற்று விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் அரசியல் அமைப்பு மாற்றங்கள் ஆரம்ப காலங்களில் இடம்பெற்றுள்ளது. ஆனால் மக்களின் அபிப்பிராயங்கள் பெறப்படாமலே முன்னெடுக்கப்பட்டது.

இதனால் பல்வேறு பிரச்சினைகளும் உருவானது. ஆனால் இன்று புதிய அரசியல் யாப்பு ஒன்றுக்காக முனைகின்ற பொழுது நாம் விரும்புவது இந்த நாட்டில் வாழக்கூடிய அனைத்து கலாசாரங்களையும், பின்பற்றி நடக்கும் மக்களுடன் அவர்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப ஒன்றிணைந்த பேச்சுவார்த்தை ஒன்றினை முன்னெடுத்து அதனூடாக அரசியல் யாப்பினை கொண்டு செல்வதேயாகும்.

நமது நாட்டில் இலங்கை கலாசாரம், இந்திய கலாசாரம் போன்றவற்றை பின்பற்றும் மக்களுடன் முஸ்லிம் கலாசாரத்தையும், பேகர் கலாசாரத்தையும் கொண்ட மக்கள் வாழ்கின்றனர்.

இவர்கள் அனைவருக்கும் உரிமைகள் கிடைக்கப் பெற்ற ஒரு அரசியல் யாப்பு மாற்றம் தேவைப்படுவதனால் அவர்களுக்கு ஏற்ப ஒரு மாற்றத்தினை கொண்டுவர வேண்டும். இதை நாம் அதிகமாக விரும்புகின்றோம்.

இதற்கான இணக்கப்பாட்டை அனைத்து மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் இந்த அரசியல் யாப்பு மாற்றம் நிலைத்திருக்கும் என தெரிவித்த அமைச்சரிடம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என கேட்டபொழுது,

எதிர்வரும் ஜனவரி மாதம் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானத்திருக்கும் நிலையில் இந்த தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியே வெற்றியை ஈட்டும் என தெரிவித்த அமைச்சர் இதற்கான ஏற்பாடுகளை இப்போதே முன்னெடுத்து வருவதாக தெரிவித்தார்.

இந்த சூழ்நிலையில் இப்பிரதேசத்திற்கு உங்களுடைய பயணம் எதற்காக அமைந்தது என கேட்ட பொழுது அதற்கு பதிலளித்த அமைச்சர்,

மருத்துவ குணமுள்ள மரக்கன்றுகளை வளர்ப்பதற்கும், வெளிநாட்டவர்கள் விரும்பத்தக்க ரோஜா பூ கன்றுகளை வளர்ப்பதற்கும் ஏதுவான காலநிலையும், மண் வளமும் கூடிய மலையக பிரதேசத்தில் எவ்வாறு அதனை பயன்பாடு அடைய நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை ஆராய்வதற்கு வருகை தந்தேன்.

அதேவேளை பெருந்தோட்டப்பகுதிகளில் இந்த பயிர்கள் ஊடாக பயன்பாட்டை அடைவதற்கு விரும்பும் தோட்டப் பகுதியை சார்ந்தவர்களையும் தோட்ட அதிகாரிகளிடமும் கலந்தாலோசனை நடத்த எனது விஜயம் அமைந்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மரபணு பரிசோதனை மூலம் இலங்கையில் தாயைக் கண்டுபிடித்த பிரித்தானியப் பெண்

(கொழும்பு)

இலங்கையில் பிறந்த பிரித்தானியாவின் பிரபல பெண் ஷெரி எசேஸன் தன்னை பெற்ற தாயை கண்டுபிடிப்பதற்கான மரபணு பரிசோதனையை மேற்கொண்டார்.

மரபணு பரிசோதனையின் அடிப்படையில் 99.99 வீதம் தாய்க்கும் மகளுக்கும் பொருந்தம் உள்ளதாக பரிசோதனையை மேற்கொண்ட பிரித்தானிய நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் தொழில்நுட்ப துறையில் பலமான 35 பெண்களில் இணைந்துள்ள இலங்கை பெண், தனது தாயாரை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை கடந்த மாதம் 18ஆம் திகதி ஆரம்பித்தார்.


அதற்கமைய அவர்சொந்த தாய் என கண்டுபிடித்த பெண்ணுக்கு மரபணு பரிசோதனை மேற்கொண்டுள்ளார். அந்த பரிசோதனை வெற்றியளித்து அவர் தனது தாயை உறுதி செய்துள்ளார்.

1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி இலங்கையில் பிறந்த ஷெரி எசேஸனுக்கு, வீர முதியன் சலாகே நிரோஷிகா என பெயரிடப்பட்டது. அவர் குழந்தையாக இருக்கும் போது அயர்லாந்து தம்பதி ஒன்றுக்கு தத்துக் கொடுக்கப்பட்டார்.

பிரித்தானியாவில் இணையம் ஊடாக வாக்களிக்கும் முறையை தயாரித்தமை உட்பட விசேட பல விடயங்களில் ஷெரி எசேஸனின் பங்களிப்பு உண்டு. மேலும் பல முறை உலக பொருளாதார மாநாட்டில் உரையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நுவரெலியா மாவட்டத்துக்கு புதிய பிரதேச சபை

## மலையகத்தில் கொண்டாட்டம்



(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபை அதிகரிக்க அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கியமைக்கு ஆதரவு தெரிவித்து மலையக நகரங்களில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் கொண்டாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்கள் ஹற்றன் மற்றும் கொட்டகலை, தலவாக்கலை (?) நகரங்களில் ஒன்றுகூடி பாற்சோறு சமைத்து பட்டாசு கொழுத்தி மகிழ்ச்சி ஆரவாரங்களில் ஈடுபட்டனர்.

நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ பிரதேச சபை மூன்றாக பிரிக்கப்பட்டு மஸ்கெலியா, நோர்வூட், அம்பகமுவ பிரதேச சபைகளாகவும் நுவரெலியா பிரதேச சபை மூன்றாக பிரிக்கப்பட்டு நுவரெலியா, கொட்டகலை, அக்கரப்பத்தனை ஆகிய பிரதேச சபைகள் அதிகரிக்கப்பட்டமைக்கு ஆதரவு தெரிவித்தே இந்த மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

இந்த மகிழ்ச்சி ஆரவாரத்துக்கு மத்திய மாகாண சபை உறுப்பினர் சோ.ஸ்ரீதரன், உட்பட தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

# வாழைச்சேனை கலவரத்திற்கு முன்னாள் முதல்வரே மூல காரணம்

## நஷீரை போட்டுத் தாக்கினார் யோகேஸ்வரன்





(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும்இன முரண்பாடுகளுக்கு வாழைச்சேனை பொலிஸாரும் முன்னாள் முதலமைச்சருமே முழுப் பொறுப்பாகும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் தே. இளங்கோ தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் இனமுறுகல் தோன்றியுள்ளதாக கூறுகின்றார்கள். அது ஏன், எப்படி வந்தது என்று பலருக்கு தெரியாது.

ஒரு சம்பவம் இடம்பெறும்போது அந்த சம்பவத்துடன் தொடர்புபடுகின்றவர்கள் தப்பித்துவிடுகின்றனர், அப்பாவிகள் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு அப்பாவிகள் பாதிக்கப்படுவதற்கு இடமளிக்க முடியாது. எந்த இனத்தை சேர்ந்தவர் என்றாலும் அவர்களுக்கு துன்பம் ஏற்படுத்தக்கூடாது.

சில தினங்களுக்கு முன்னர் வாழைச்சேனையில் பேருந்து தரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த பிரதேசம் என்பது தமிழ் மக்களின் பிரதேசமாக காணப்படுகின்றது.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள பிரதான வீதி கறுவாக்கேணி கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்டது, அப்பகுதியில் எந்த முஸ்லிம்களும் இல்லை, அவ்விடத்தில் இருந்து பல பகுதிகளுக்கு செல்வோர் பேருந்துக்காக காத்திருப்பர். எனவே அவ்விடத்திற்கு ஒரு பேருந்து தரிப்பிடம் தேவையாகவுள்ளது.

அந்தப் பேருந்து தரிப்பிட விடயத்தில் வாழைச்சேனை பொலிஸ் நிலையம் ஒரு இன ரீதியாக செயற்பட்டதன் காரணமாக முஸ்லிம் இனத்திற்கு ஆதரவாக செயற்பட்டதன் காரணமாக அந்த பிரச்சினை பெரிதாக மாற்றம் பெற்றுள்ளது.

பொலிஸார் அந்த பிரச்சினையை ஆட்டோ தரிப்பிடப் பிரச்சினையாக மாற்றி திரிவுபடுத்தியுள்ளனர்.

ஆட்டோ தரிப்பிடம் தொடர்பிலும் வாழைச்சேனை அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. முன்னாள் முதலமைச்சர் நஷீர் அஹமட் பதவியில் இருக்கும் போது, அந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

குறித்த பிரதேசம் தமிழர்களுக்கு உரியது. அது தமிழ் மக்களுக்குத் தேவையான ஒரு பகுதி. ஏற்கனவே ஆறு இடங்களுக்கு மேல் ஆட்டோ தரிப்பிடங்கள் உள்ளன. அனைத்திலும், முஸ்லிம் ஆட்டோச் சாரதிகள் பயன்படுத்துவதனால் இந்தப் பகுதியை தமிழ் ஆட்டோச் சாரதிகளுக்கு ஒதுக்க வேண்டும் என வாழைச்சேனை பிரதேசசபை செயலாளருக்கு பிரதேச அபிவிருத்திக்குழு உத்தரவிட்டது. அதனை பிரதேச செயலாளரும் உறுதிப்படுத்தியிருந்தார்.

ஆனால் அதனை வாழைச்சேனை பிரதேசசபை செயலாளர் முன்னாள் முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்ற போது, அதற்கொரு குழுவினை அமைத்து அவர் தேவையற்ற விடயத்தினை கையாண்ட காரணத்தினால் தான் அந்த ஆட்டோ தரிப்பிட பிரச்சினையும் பூதாகரமாக எழுந்தது.

பொலிஸார் சரியான முறையில் அணுகியிருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் அவர்களை சார்ந்தவர்களும் சரியான முறையில் செயற்படவில்லை.

சட்டத்தினை அவர்கள் சரியானமுறையில் கையாளவில்லை. ஒரு இனம் சார்ந்து செயற்பட்டுள்ளனர். தேவையற்ற விடயங்களையும் முரண்பாடான கருத்துகளையும் எழுதி நீதிமன்றுக்கு வழங்கியுள்ளனர். அதனால் அங்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளை அங்கிருந்து அகற்றுமாறு நீதிமன்றினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னரே முறுகல் நிலைகள் ஏற்பட்டன.

இந்த முறுகல் நிலைகளுக்கு மூலகாரணம் பொலிஸ் பகுதியினரும் முன்னாள் முதலமைச்சர் நசீர் அஹமட் ஆகியோர் என்பதனை ஆணித்தரமாக கூறவிரும்புகின்றேன். இவர்கள் குறுகிய அரசியல் இலாபம் கருதி இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் எனத் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1238

Search for people, places and things Nagendram Home

### சுனேக்கா





### சிந்துஜன்




### காவேரி





### புஸ்பா




### நிலோஜினி




### கம்சாயினி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நன்றி நவிலல்

## அமரர் திருமதி ஜெயதேவி சுஜிதன்

## (இளைப்பாறிய ஆசிரியை)



கடந்த 17.10.2017 இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி யாழ் மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவந்திருந்த காலத்தில் சகல உதவிகளையும் திறம்படச்செய்த யாழ். அரச போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி, வைத்திய நிபுணர் சிவன்சுதன் மற்றும் வைத்தியசாலையின் 4ஆம் கூடத்திலும் அதிதீவிர சிகிச்சைப்பிரிவிலும் கடமைபுரிந்த இதர வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், இதர ஊழியர்கள் ஆகியோருக்கும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை முகாமையாளருக்கும், ஊழியர்களுக்கும் எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி அறிந்து இறுதிக்கிரியை நிகழ்வுகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், அயலவர், நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள், பதாகைகள் வெளியிட்டவர்களுக்கும், யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆசியர்களுக்கும், மாணவிகளுக்கும், இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தினருக்கும், நேரிலும் தொலைபேசி மூலமும் எம்மைத் தேற்றிய உறவுகளுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகளும் ஒத்தாசைகளும் வழங்கி எம்முடன் துயர்பகிர்ந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (1207)

257, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

அன்னாரின் :
குடும்பத்தினர்

# கூட்டாட்சியிலிருந்து சு.கவிலகினால் கூட்டு எதிரணி இணைந்துவிடுமாம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிட வேண்டுமாயின், தங்களுடைய ஏழு நிபந்தனைகளையும் நிறைவேற்ற வேண்டுமென, ஒன்றிணைந்த எதிரணி நிபந்தனை விதித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து முன்னெடுக்கும் கூட்டாட்சியிலிருந்து விலகவேண்டும் என்பது ஒன்றிணைந்த எதிரணியின்பிரதான கோரிக்கையாகும்.

ஒன்றிணைந்த எதிரணியின் ஆதரவைக் கோரி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அனுப்பிவைத்துள்ள கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையில், ஒன்றிணைந்த எதிரணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் 42 பேர் கையொப்பமிட்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருக்குக் கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கையொப்பமிட்டுள்ளார்.

1. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து முன்கொண்டு செல்லும் கூட்டாட்சியிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலகவேண்டும்.

2. எவ்விதமான கட்டுப்பாடுகளுமின்றி, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்ற வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3. தேசிய சொத்துக்களை, வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வது அல்லது பரிமாற்றம் செய்யும் நடவடிக்கைகளிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் விலகவேண்டும். அதற்கெதிராகக் குரல் கொடுக்க வேண்டும்.

4. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மதிப்புகளுக்கு அமைவாக, அதி வணக்கத்துக் ரிய தேரர்களின் எண்ணங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

5. நாட்டைத் துண்டாடும் வகையில், அரசாங்கம் வியூகம் வகுக்கும் அரசமைப்பு செயற்பாடுகளிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலகவேண்டும்.

6. தற்போதைய சாட்சிகளின் அடிப்படையில், பிணைமுறி விவகாரத்தின் ஊடாக வங்கிகளில் கொள்ளையிட்டவர்களுக்கு எதிராக, எவ்விதமான தராதரங்களு மின்றி, கடுமையான சட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

7. சட்டத்தின் ஆட்சியை மீண்டும் உறுதிப் படுத்துவதற்கு, ஒவ்வொருநாளும் பலப்படுத்திக் கொண்டிருக்கின்ற பாதாள உலகக்கோஷ்டியினரின் மனிதப் படுகொலை சங்கிலியை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஒன்றிணைந்த எதிரணி உறுப்பினர்கள் பலர், வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமையால், இந்தக் கடிதத்தில் கையொப்பமிடவில்லை? என்றும், எனினும், கடிதத்தின் உள்ளக்கத்துக்கு அவர்கள் அனைவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் அக்கடிதத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# மாணவனைத் தாக்கிய அதிபர் மறியலில்

(கொழும்பு)

மாத்தறை ஊறுபொக்க பகுதியில் மாணவன் ஒருவனை தாக்கிய பாடசாலை அதிபர் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மாணவனின் தந்தை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய, அதிபர் கைது செய்யப்பட்டு, மொரவெவ மேலதிக நீதவான், சீ.எஸ். திஸாநாயக்க முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் படுத்தப்பட்டபோதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

தலைமுடியை வெட்டவில்லை என்ற காரணத்திற்காக தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவனை அதிபர் நேற்று முன்தினம் காலைக் கூட்டத்தின் போது கடுமையாகத் தாக்கியுள்ளார். இந்நிலையில் தாக்குதலுக்குள்ளான மாணவனுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டதையடுத்து அவர் ஊறுபொக்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# துயர் பகிர்கின்றோம்

மண்ணில் : 01.05.1946



விண்ணில் : 02.11.2017

## உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம்

நாலாம் கட்டை,பூநகரியைப் பிறப்பிடமாகவும் இல-12,சொர்ணவடலிஒழுங்கை,கொக்குவில் கிழக்கு,கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவரும் எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தலைவரும் இல்லக் குழந்தைகளின் பாசத்திற்குரிய தந்தையும் முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் வடமாகாண உள்ளூராட்சி பொது நிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளரும் பொது நிர்வாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளரும் உருத்திரபுரிசுவரர் ஆலயத்தின் முன்னாள் தலைவரும் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் முன்னாள் தலைவரும் காந்திநிலையச் சிறுவர் இல்லத்தின் முன்னாள் தலைவரும் யோகர்சுவாமிகள் திருவடிநிலைய முதியோர் இல்லத்தின் முன்னாள் தலைவருமான அமரர் உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் ஐயா அவர்கள் சிவபதமடைந்த செய்திகேட்டு ஆறாத்துயரடைகின்றோம்.

கள்ளமில்லா நல்லுள்ளமும் கனிவானநின்பார்வையும்
புன்னகைபூத்தபொன்முகமும் அன்போடு அனைவரையும்
அரவணைக்கும் பண்பையும் உமையிழந்தபோது
இனியாரிடம் நாம் காண்போம்......!
மின்னியது செய்தி
விம்மினோம் - நெடிதுயர்
பின்னியதுநெஞ்சில் - கலங்கினோம்
என்னது இது? ஏன் மறைந்தீர்?
எம் பாரினில் உமக்கேற்ற இத்துன்பமோ
யாராலும் ஏற்றிடமுடியுமோ?
இறைவனுக்கு உம்மை அழைக்கும் அவசரம் ஏன்?
அன்பரீர் உங்கள் ஆத்மா இளைப்பாற
விண்ணவனைப் பணிகின்றோம் நாம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-266)

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
இல்லக் குழந்தைகள், மகாதேவாசுவாமிகள்
சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

# தொண்டமானின் பெயர் நீக்கத்திற்கு எதிராக நேற்றும் கடைகள் பூட்டு





(ஹற்றன்)

ஹற்றன் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர்ப்பலகையில் இருந்து தொண்டமானின் பெயரை நீக்கியமைக்கு எதிராக நேற்று கொட்டகலை நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் பேரணியும் இடம்பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு கொட்டகலை நகர வர்த்தகர்கள் ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமது வர்த்தக நிலையங்களை மூடி ஹர்த்தாலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமாகிய கணபதி கனகராஜ், அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வெள்ளையன் தினேஸ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வன், இ.தொ.காவின் இளைஞர் அணித் தலைவர் இராஜமணி பிரசாத் உட்பட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கொட்டகலை பிரதேச சபைக்கருகில் ஆரம்பமாகிய ஆர்ப்பாட்ட பேரணி பிரதான வீதியூடாக கொட்டகலை ஆலயம் வரை சென்றது. ஆர்ப்பாட்டத்தின் போது தொண்டமானின் பெயரை, பெயர்ப்பலகையிலிருந்து நீக்கினாலும் மலையக மக்கள் மனங்களிலிருந்து நீக்க முடியாது என தெரிவித்தனர். (இ-7)



# கிழக்கு முறுகலுக்கு அரசியல் கட்சிகளே பிரதான காரணம்




(ஏறாவூர்)

"கல்முனை, சாய்ந்தமருது பிரதேசங்களில் உருவாகியுள்ள முறுகல் நிலைக்கு அரசியல் கட்சிகளே பிரதான காரணமாகவுள்ளன" என, கல்முனை அனைத்துப் பள்ளிவாசல்கள் பொது நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.எம். அஸீஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேசத்துக்கான தனியான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையால் ஏற்பட்டுள்ள சர்ச்சை தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு கல்முனை பள்ளிவாசல் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இனங்களுக்குள் எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தாமல் எல்லா மக்களும் சமமாக, சந்தோசமாக, சகோதரத்துவமாக வாழ்வதற்கான ஒரு தீர்வுத் திட்டமாகவே, முன்னர் இருந்தவாறு கல்முனை மாநகர சபையுடன் மேலும் மூன்று சபைகளை ஏற்படுத்துமாறு கோருகின்றோம்.

"1987ஆம் ஆண்டுக்கு முன்னர், கல்முனை பட்டின சபை மற்றும் கரவாகு மேற்கு, கரவாகு வடக்கு, கரவாகு தெற்கு என 3 கிராம சபைகளாகவே இருந்து வந்துள்ளன. 1987 ஆம் கொண்டுவரப்பட்ட பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் இவைகள் இணைக்கப்பட்டன. 2001 ஆம் ஆண்டு மாநகரசபையாகவும் மாற்றம் செய்யப்பட்டது.

"இது விடயமாக நாங்கள் உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் மற்றும் முஸ்லிம் அமைச்சர்களிடம் பேச்சுகளை நடத்திய போது, பிரதமர் மற்றும் ஜனாதிபதியுடன் கதைத்து, இதனை வழங்குவதாக உறுதியளித்திருந்தனர்.

"யாருடைய அனுமதியுமின்றி இணைக்கப்பட்ட இச்சபைகள், பாரிய பிரதேசங்களையும் சுமார் ஒரு இலட்சம் சனத்தொகையையும் கொண்டமைந்த மாநகர சபையாக இயங்கி வருகின்றமையால் அதன் நிர்வாகத்துக்கும் வளப்பங்கீடுகளுக்கும் பாரிய சவாலை ஏற்படுத்தியுள்ளது.

"குறைந்தது குப்பைகளைக் கூட முறையாக அகற்றுவதற்கு அதன் நிர்வாகத்தினருக்கு முடியாமலுள்ளது.

"ஆகவேதான், அதனை முன்னர் இருந்தவாறு பிரிப்பதால் எந்தவொரு சமூகமும் பிரதேசமும் பாதிப்படையப் போவதில்லை. அவர்களை அவர்களின் அபிலாசைகள், தேவைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இதன் மூலம் ஏற்பட வாய்ப்புள்ளது.

"எங்களது பிரச்சினைகளை நாங்களாகவே பேசித் தீர்க்க முடியும். இதற்காக சாய்ந்தமருது மக்களை நோக்கி அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம். இதற்காக அரசியல்வாதிகளும் ஒரு கொள்கை ரீதியான உடன்பாட்டுக்கு முன்வர வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இந்தியப் போர்க்கப்பல்களை

# அடுத்து கொழும்பு வருகிறது பாகிஸ்தான் போர்க்கப்பல்

(கொழும்பு)

பாகிஸ்தான் கடற்படையின், போர்க்கப்பல் ஒன்று நான்கு நாட்கள் பயணமாக, நாளை மறுதினம் கொழும்புத் துறைமுகத்துக்கு வரவுள்ளது. கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் நேற்று முன்தினம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.



பி.எஸ்.என்.சைய்ப் (PNS SAIF) என்ற, ஸ்வோர்ட் வகையைச் சேர்ந்த, சீனத் தயாரிப்பு போர்க்கப்பலே கொழும்புக்கு வரவுள்ளது. இலங்கையுடனான இரு தரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில், நல்லெண்ணப் பயணமாக பாகிஸ்தான் போர்க்கப்பல் கொழும்பு வரவுள்ளதாக, பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது. கொழும்பில் தரித்து நிற்கும் போது, இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து பயிற்சி, விளையாட்டு உள்ளிட்டவற்றில் பங்கேற்கும் என்றும், நாளை மறு தினம் 6ஆம் திகதி வரவேற்பு நிகழ்வு ஒன்றும் இடம் பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கடற்படையின் மூன்று போர்க்கப்பல்கள் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்துக்கு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கு மகிந்த அணி சபையில் பாராட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியும் ஒன்றிணைந்த எதிரணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷவின் உரையை ஆமோதித்து, இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா, கருத்துத் தெரிவித்தையடுத்து, அவையிலிருந்த ஒன்றிணைந்த எதிரணி உறுப்பினர்கள், மேசைகளில் தட்டிப் பாராட்டினர்.

புதிய அரசமைப்புக்கான அரசமைப்புச் சபை வழிப்படுத்தல் குழு இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதம், அரசமைப்புச் சபையில் நேற்று முன்தினம் நான்காவது நாளாகவும் இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஒரு சந்தர்ப்பத்தில், "வடக்கு, கிழக்கை மீண்டும் இணைப்பது தொடர்பான விவகாரம் குறித்து, முஸ்லிம்களுடன் நான் கலந்துரையாடிய போது, அவர்கள் அதற்கு எதிர்ப்பையே வெளியிட்டிருந்தார்கள். வடக்கு, கிழக்கை இணைத்தால் கிழக்கில் உள்ள தமிழர்களின் நிலைப்பாடு என்ன என்பதையும் சிந்திக்க வேண்டும்" என்றார்.

"இங்கே, அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வும் இருக்கிறார்" என்று மகிந்த ராஜபக்ஷ கூறியபோது, தன்னுடைய ஆசனத்தில் இருந்து எழுந்த இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், ஒலிவாங்கி முடுக்கிவிடப்படாத நிலையில்,

"வடக்கு, கிழக்கு இணைப்பை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். நாம் ஒருபோதும் இணங்கமாட்டோம்" என்றார்.

இதன்போது அவையிலிருந்த ஒன்றிணைந்த எதிரணி உறுப்பினர்கள், மேசையில் தட்டிப் பாராட்டுகளைத் தெரிவித்தனர். (இ-7)

# மதவாதத்தை இல்லாதொழித்த நாடாக முன்னோக்கி செல்ல கல்வியால் மட்டுமே முடியும்

## கல்வியமைச்சர் காரியவசம் தெரிவிப்பு




இனபேதம், குலபேதம் மற்றும் மதவாதத்தை இல்லாதொழித்து நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல முடிவது, கல்வியின் ஊடாக மாத்திரமே என்று கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையான கட்டுரை மற்றும் சித்திரப் போட்டியின் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே கல்வியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மூன்று தசாப்தங்களாக நாட்டில் தேசிய ஒற்றுமையின்மை காரணமாக நாம் பின்னோக்கிச் சென்றுள்ளதாகவும் தற்போது புதிய பாதையில் பயணிக்கும் வாய்ப்பு கிட்டியிருப்பதாகவும், அண்மையில் வழங்கப்பட்ட ஆசிரியர் இடமாற்றங்கள் இனவாதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிலர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை மறுப்பதாகவும் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் இதன் போது தெரிவித்தார். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## கிட்டாதாயின் வெட்டென மற!

வீரன்பட்டி என்று ஒரு சிறு கிராமம். அந்த கிராமத்தில் வீரையன் என்று ஒரு விவசாயி வாழ்ந்து வந்தான். அவனுக்கு பாலன், கோபு என்று இரண்டு பிள்ளைகள் இருந்தனர். வீரையனுக்கு இளம் வயதில் படிக்க வேண்டும் என்று நிறைய ஆசை இருந்தது. ஆனால் அவனால் படிக்க முடியாத சூழ்நிலை.

அதனால் தனது இரண்டு பிள்ளைகளையும் நன்கு படிக்க வைக்க விரும்பினான். ஒரு நல்ல நாளில் இருவரையும் அழைத்துக் கொண்டு அருகே நகரத்தில் உள்ள பாடசாலைக்கு அழைத்துச் சென்றான். இருவரையும் பாடசாலையில் சேர்த்து விட்டு மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான்.

சில மாதங்கள் பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலைச் சென்று வந்தனர்.

பாடசாலையில் காலாண்டுத் தேர்வு வந்தது. கோபு, பாலன் இருவரின் ஆசிரியர் அவர்களுக்கு தரச் சான்றிதழ் எனப்படும் ப்ரோக்ரஸ் ரிப்போர்ட் கொடுத்தார்.

இருவருமே சுமாரான மதிப்பெண்ணே பெற்றிருந்தனர். இதைத் தந்தையிடம் கொடுப்பதற்கு மிகவும் பயந்தனர். ஆனால் சிறியவன் கோபு தன் தந்தையிடம் தன் சான்றிதழைக் கொடுத்து அவர் முன் தயங்கியபடியே நின்றான். அவன் எடுத்திருந்த மதிப்பெண்கள் எல்லாமே சராசரிக்கும் கீழேயே இருந்தன. வீரையனுக்கு ஒரே கோபம். மூத்தவனாவது நல்ல மதிப்பெண் எடுத்திருப்பானோ என்று பாலனைக் கேட்டான். "ஏண்டா, தம்பி எல்லாத்திலையும் குறைஞ்ச மார்க் வாங்கியிருக்கிறானே, நீ எப்படி?"

தயங்கியபடியே தன் ரிப்போர்டைக் கொண்டுவந்து கொடுத்தான் பாலன். அதைப் பார்த்த வீரையன், "தம்பியைவிட பரவாயில்லை. ஆனாலும் நல்லாப்



படிக்கோணும்டா" என்று சற்றுக் கடுமையாகக் கூறினான். இருவரும் சரியெனத் தலையை ஆட்டினர். நாட்கள் செல்லச் செல்ல கோபுவுக்குப் படிப்பின் மீது நாட்டமே இல்லாமல் போயிற்று. அவன் அண்ணன் பாலன் அவனிடம் தந்தையின் ஆசை பற்றிச் சொல்லி அவனைப் பாடசாலைக்கு இழுத்து வந்தான்.

அன்றும் பாலன் பாடசாலைக்குப் புறப்பட்டு விட்டபோதும் கோபு கன்றுக் குட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அவனிடம் வந்த பாலன் "டேய் தம்பி என்னடா. பாடசாலைக்கு வரலையா?" என்று கடுகடுப்போடு கேட்டான். அதைக்கேட்ட கோபு "எனக்குத் தான் படிப்பே ஏறலியே நான் ஏன் பாடசாலைக்கு வரணும்? நீ வேணுமானா போ. நான் வரலை" என்றான்.

அதைக் கேட்டபடியே வந்த வீரையனுக்குக் கோபம் மூண்டது. "ஏண்டா, உங்களை எப்படியாவது படிக்கவைக்க நான் படாத பாடுபடுறேன். உனக்கு விளையாட்டா இருக்காடா? மரியாதையா அண்ணன்கூடப் போற வேலையைப் பாரு. இல்லேயின்னா..." என்று பற்களைக் கடித்தான் வீரையன். அவனது கோபத்தைப் பார்த்த கோபு உடனே தன் புத்தகப் பையைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு பாடசாலையை நோக்கி வெளியே ஓடினான்.

அன்று மாலையே அழுதபடியே வீட்டுக்கு வந்த கோபு தன் தந்தையிடம் வந்து நின்றான். அப்பா, உங்களுக்குப் பிடிக்குதுன்னு என்னைப் பாடசாலைக்கு போகச் சொல்றீங்களே. எனக்கு படிப்பு வருதான்னு பாக்க வேண்டாமா? இன்னிக்கு எங்க வாத்தியாரு என்ன சொன்னாரு தெரியுமா? எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடாதேடா வராத படிப்பை நினைச்சு ஏன் வீணா கஷ்டப்படுறே அப்படீன்னு சொல்லித் திட்டுறாங்கப்பா.

நான் உங்க கூட வயலுக்கு வந்து விவசாயத்தைப் பாத்துக்குறேன். அண்ணனுக்குப் புடிச்சா அவன் படிக்கட்டும்.

வீரையன் சற்று சிந்தித்தான். அவன் மனம் பேனா பிடிக்க ஒரு கை போனால் ஏரைப் பிடிக்க ஒரு கை இருக்கட்டும் என்று எண்ணினான்.

தொடரும்...

## 11.2017 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1333- ஆர்னோ ஆறு பெருக்கெடுத்து வெள்ளம் பரவியதில் இத்தாலியின் புளோரன்ஸ் நகரில் பெரும் சேதம் ஏற்பட்டது.
- 1861- வோஷிங்டன் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1869-அறிவியல் இதழ் நேச்சர் முதற்தடவையாக வெளியிடப்பட்டது.
- 1914- பிரித்தானியாவும் பிரான்சும் துருக்கியுடன் போரை அறிவித்தன.
- 1918-முதலாம் உலகப் போர்: இத்தாலியிடம் ஆஸ்திரியா-ஹங்கேரி அரசு சரணடைந்தது.
- 1918- 40,000 கடற்படையினர் கீல் துறைமுகத்தைக் கைப்பற்றியதை அடுத்து ஜேர்மனியப் புரட்சி தொடங்கியது.
- 1921- ஜப்பானியப் பிரதமர் ஹறா தக்காஷி டோக்கியோவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1956- ஒக்டோபர் 23 இல் ஆரம்பமான ஹங்கேரியப் புரட்சியை முறியடிக்க சோவியத் படைகள் ஹங்கேரியை முற்றுகையிட்டன. ஆயிரக்கணக்கான ஹங்கேரியர்கள் கொல்லப்பட்டு இலட்சக்கணக்கானோர் நாட்டை விட்டு வெளியேறினர்.
- 1966- இத்தாலியின் புளோரன்ஸ் நகரத்தின் மூன்றில் இரண்டு பகுதி வெள்ளப் பெருக்கில் அழிந்தது. 113 பேர் கொல்லப்பட்டனர். பல பெறுமதியான ஓவியங்களும் நூல்களும் அழிந்தன.
- 1967- எம்.ஜி.ஆர். கொலை முயற்சி வழக்கு: நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன் கொலை முயற்சி வழக்கில் நடிகர் எம். ஆர். ராதாவுக்கு ஏழு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.
- 1979-ஈரானியத் தீவிரவாதிகள் டெஹ்ரானில் அமெரிக்கத் தூதராலயத்தை முற்றுகையிட்டு 53 அமெரிக்கர்கள் உட்பட 90 பேரை பணயக்கைதிகளாகப் பிடித்தனர்.
- 1984-நிக்கராகுவாவில் இடம்பெற்ற தேர்தல்களில் சண்டினீஸ்டா முன்னணி வெற்றி பெற்றது.
- 1995- இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக் ரபீன் தீவிரவாத வலதுசாரி இஸ்ரேலியரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2004- ஐவரி கோஸ்டில் இடம்பெற்ற உள்நாட்டுப்போரில் 12 பிரெஞ்சுப் படையினர் மற்றும் 3 ஐ.நா கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1650-இங்கிலாந்தின் மூன்றாம் வில்லியம் (இ. 1702)
- 1845-வாசுதேவ் பல்வந்த் பட்கே, இந்தியப் புரட்சியாளர் (இ. 1883)
- 1897- ஜானகி அம்மாள், இந்தியத் தாவரவியலாளர் (இ. 1984)
- 1929- சகுந்தலா தேவி, இந்தியக் கணிதவியலாளர், வானியலாளர் (இ. 2013)
- 1957- டோனி அபோட், அவுஸ்திரேலியாவின் 28ஆவது பிரதமர்
- 1969- மேத்திவ் மெக்கானாகே, அமெரிக்க நடிகை
- 1972- தபூ, இந்திய நடிகை

இறப்புகள்

- 1918-வில்ஃபிரட் ஓவன், ஆங்கிலேயக் கவிஞர் (பி. 1893)
- 1920- உஹூத்விக் சுத்ருவ, ரஷ்ய வானியலாளர் (பி. 1858)
- 1985- டி கே. இராமானுஜக் கவிராயர், தமிழறிஞர், புலவர் (பி. 1905)
- 1994-கு. மா. பாலசுப்பிரமணியம், திரைப்பட பாடலாசிரியர் (பி. 1920)
- 1998- மரியோன் தொனோவன், அமெரிக்கப் புது மைப்புனைவாளர், தொழிலதிபர் (பி. 1917)
- 1999- அப்துல் சமது, தமிழக அரசியல்வாதி (பி. 1926)
- 2008-மைக்கேல் கிரைட்டன், அமெரிக்க மருத்துவர், இயக்குநர் (பி. 1942)
- 2012-ஜேக்கப் சகாயகுமார் அருணி, தமிழக சமையல் கலை நிபுணர் (பி. 1974)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | கொடிகாமம் | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 160 | 160 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 130 | 110 | 95 | 140 |
| பச்சைமிளகாய் | 500 | 480 | 600 | 400 | 450 | 700 |
| தக்காளி | 180 | 270 | 160 | 200 | 100 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 70 | 60 | 60 | 30 | 40 |
| கோவா | 120 | 160 | 160 | 100 | 70 | 200 |
| கரட் | 100 | 200 | 200 | 80 | 80 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 | 40 | 60 | 100 |
| புடோல் | 100 | 100 | 120 | 100 | 70 | 120 |
| வாழைக்காய் | 80 | 90 | 120 | 100 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 320 | 280 | 400 | 300 | 250 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 180 | 200 | 200 | 140 | 200 |
| பாகற்காய் | 200 | 270 | 400 | 250 | 200 | 400 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 120 | 100 | 70 | 140 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 120 | 80 | 70 | 120 |
| பயற்றங்காய் | 140 | 100 | 160 | 160 | 120 | 160 |
| லீக்ஸ் | 150 | 200 | 200 | 200 | 150 | 250 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 80 | 60 | 120 |
| கறிமிளகாய் | 300 | 200 | 400 | 250 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 160 | 150 | 120 | 400 | 200 | 200 |
| போஞ்சி | 180 | 170 | 160 | 350 | 110 | 200 |
| கத்தரிதம்புள்ள | 160 | 140 | 140 | 140 | 120 | 100 |
| கீரை - 1பிடி | 20 | 40 | 40 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 180 | 300 | 250 | 150 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 60-80 | 90 | 70 | 100 |
| இராசவள்ளி | — | 250 | — | — | 200 | 500 |
| வெங்காயப்பூ | 250 | — | 240 | — | 200 | 250 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 70 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 35 | 30 | 50 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 25 | 15 | 20 |
| ஈரப்பலா | — | 60 | 80 | 80 | 65 | 60 |

காய்ந்துபோன பூமியெல்லாம்
வற்றாத நதியைப் பார்த்து
ஆறுதல் அடையும். அந்த நதியே
காய்ந்து போனால்... – கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஈழத் தமிழர்களைக் காப்பாற்றாத குற்றம் சர்வதேசத்தை வையும்

வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த கொடும் போர் 2009ஆம் ஆண்டில் முடிந்தது. இன்று எட்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் தமிழ் மக்களுக்கு எந்த இழப்பீடும் விமோசனமும் கிடைக்கவில்லை.

வன்னிப் போரில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட சம்பவங்கள் ஆதாரபூர்வமானவை. சுருங்கக்கூறின் தமிழின அழிப்பு மேற்கொள்ளப்பட்டது என்றே அதனைப் பதிவு செய்ய வேண்டும்.

மனித உரிமை விவகாரங்கள் உச்சம் பெற்றிருக்கக்கூடிய இக்கால கட்டத்தில் ஐ.நா அமைப்பு முதல் மனித உரிமை பேணும் அமைப்புக்கள் உச்சமாக வளர்ச்சியடைந்த நிலையில்தான் ஈழ மண்ணில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர் எனும்போது இச் செயலுக்காக சர்வதேச சமூகம் எப்போதும் நொந்து கொள்ளும் என்பது சத்தியம்.

இவை ஒருபுறமிருக்க, ஈழத் தமிழ் மக்களின் விடயத்தில் இன்றுவரை அவர்களின் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லை என்பது பெரும் குறைபாடாக உள்ளது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும், போர்க்குற்ற விசாரணை நடத்தப்படும் என்ற உறுதிமொழிகளை ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை அரசு வழங்கியுள்ள போதிலும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற – காலங்கடத்துகின்ற நயவஞ்சகத்தையே தொடர்ந்தும் இலங்கை அரசு செய்து வருகிறது.

இது தொடர்பான புரிதல் ஐ.நா உட்பட சர்வதேச சமூகத்துக்கு உள்ளதாயினும் அதுபற்றி ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இலங்கை அரசு மீது எடுக்கப்படவில்லை.

இதற்குத் தமிழ் அரசியல் தலைமையை இலங்கை அரசாங்கம் கைக்குள் வைத்திருப்பதும் அண்டை நாடான இந்தியா, இலங்கை ஆட்சியாளர்களைக் காப்பாற்ற முற்படுவதும் காரணமாக இருந்தாலும் சர்வதேச சமூகத்துக்கென இருக்கக்கூடிய தார்மீகப் பொறுப்பை அது செய்தாக வேண்டும். அந்தப் பொறுப்பில் இருந்து விடுபடுவது என்பது மனித உரிமைகளை, சிறுபான்மை இனங்களைக் காப்பாற்ற சர்வதேச சமூகம் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டுக்கு வழிவகுக்கும்.

அதேநேரம் சிறுபான்மை இனங்களின் உரிமைகள், அவர்களின் அதிகாரங்கள் பாதுகாக்கப்படாவிட்டால் தொடர்ந்தும் அந்த மக்கள் ஆட்சியாளர்களாலும் பெரும்பான்மை இனவாதிகளாலும் நசுக்கப்படும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும்.

ஆக, பெரும்பான்மை இனத்தின் அல்லது அவர்கள் ஜனநாயகத்தின் பெயரால் அமைக்கப்படுகின்ற ஆட்சி பீடங்களே எல்லாம் செய்ய வேண்டும். அவர்களோடு சேர்ந்து செல்வது சிறுபான்மை இனத்தின் கடமை என சர்வதேச சமூகம் கட்டாயப்படுத்துமாக இருந்தால் இந்த யுகத்தில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படமாட்டாது என அறுதியிட்டுக் கூறமுடியும்.

எது எவ்வாறாயினும் இலங்கை விவகாரத்தில் ஐ.நா அமைப்பும் சர்வதேச சமூகப் பிரதிநிதிகளும் உண்மையை உணர்ந்து கொண்டு அறிக்கைகளை, கருத்துக்களை முன்வைக்கின்ற போதிலும் அவை போதுமானவை அல்ல என்பதே உண்மை.

வன்னி யுத்தம் முடிந்து எட்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை என்றால்; குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவில்லை என்றால் சர்வதேச சமூகத்துப் பணியும் காலங்கடத்துவதாக இருப்பதென்று சொல்வதைத் தவிர வேறில்லை.

எனவே இலங்கை அரசுக்கு கடுமையான அழுத்தம் கொடுத்து தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும்.

இல்லையேல் தொடர்ந்தும் தமிழ் மக்கள் ஏமாற்றப்படும் இனமாக – எச்சந்தர்ப்பத்திலும் பேரினவாதத்தின் கோரப்பசிக்கு இரையாகக்கூடிய இனமாகவே இருக்கும் என்பது விதியாகி விடும்.

## அரசாங்க மருத்துவபீட

# மாணவர்களின் பெற்றோர் சங்கம் ஜனாதிபதியின் செயலருடன் சந்திப்பு

(கொழும்பு)

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் அரசாங்கம் வழங்கியுள்ள தீர்வுகள் குறித்து அரச மருத்துவ பீட மாணவர்களின் பெற்றோர் சங்கத்திற்கும் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

சைட்டம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலையீட்டை பாராட்டிய அச்சங்கத்தினர் மருத்துவ கல்லூரி தொடர்பில் அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுகள் குறித்து சாதகமாக கருத்துக்களை வெளியிட்டனர்.

இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கத்தின் முன்மொழிவுகள் உள்ளடங்கிய செயன்முறையை துரிதமாக நடைமுறைப்படுத்தும்படியும் அச்சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கை மருத்துவ பேரவையினால் நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி தொடர்பிலான குறைந்த நியமனங்களை சுகாதார அமைச்சு அடுத்த வழக்கு தவணைக்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து முறையான அனுமதியுடன் வர்த்தமானி மூலம் அறிவித்தல் மற்றும் காலந்தாழ்த்தாது சைட்டம் நிறுவனத்தை இரத்துச் செய்து புதிதாக மருத்துவ மாணவர்களை அனுமதிப்பதை நிரந்தரமாக நிறுத்துதல், பாராளுமன்ற அனுமதியை பெற்றுக் கொள்ளுதல், வர்த்தமானி அறிவித்தலை முறையாக வெளியிடுதல் ஆகிய முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துமாறு அச்சங்கம் கோரிக்கை விடுத்தது.

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு முன்மொழிவுகளிலும் இவ்விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அரசாங்க மருத்துவ பீட மாணவர்களின் பெற்றோர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பில் அவர்களின் கருத்துக்களை முன்வைப்பதற்காக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டி.சி. திஸாநாயக்கவுடன் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதியின் செயலாளரினால் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் சங்கத்தின் பிரதித் தலைவர் வைத்தியர் சுனிமல் ஜயக்கொடி, பிரதி செயலாளர் நிஹால் கஜசிங்க மற்றும் பேராசிரியர் அத்துல களுஆரச்சி ஆகியோர் கலந்து கொண்டனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மின்சார நிலைய வீதி, விக்ரோறியா வீதி, பருத்தித்துறை வீதியில் ஒரு பகுதி, 'ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, சிறிநதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC, ஞானம்ஸ் விடுதி, றொப்பாஸ், வேலணைச் சந்தியிலிருந்து துறையூர் வரை, மடத்துவெளி, வல்லான், ஆலடிச்சந்தி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், புங்குடுதீவு கடற்படை முகாம், ஆஸ்பத்திரி வீதியில் காரைநகர் வீதி சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி சந்தி வரை, சீனிவாசகம் வீதி, சிவன்பண்ணை வீதியின் ஒரு பகுதி, கே.கே.எஸ்.வீதியில் துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து சத்திரச்சந்தி வரை, சப்பல் வீதி, யாழ் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் குறுக்குத் தெருக்கள் வேம்படி வீதி சந்தி வரை, பிரதான வீதியில் துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதா கபே வரை, வறாத்துப்பளை, புனிதநகர், திக்கிரி, கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, பருத்தித்துறை வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3ம் குறுக்குத்தெரு பிரதேசம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, யாழ் பொலிஸ் நிலையம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், யாழ்.பொது நூலகம், மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தொகுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையின் பிராந்திய முகாமையாளர் அலுவலகம், STS கண் வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கன் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

# நாடகவிழா பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இலக்கிய அணியின் அனுசரணையுடன் நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் கம்பன் கல்லூரி வளாக தமிழ்க் கோட்டத்தில் நடைபெறவிருந்த நாடக விழா பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையமும் கருகம்பனை தமிழ்மன்ற இந்து இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை பிற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை கருகம்பனை தமிழ்மன்ற சனசமூக நிலையத்தில் நடைபெறும். (இ-10)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கருவிற்கு பங்கம் வராமல் இருக்க?**

பெண் கருவுற்ற மூன்றாம் மாதத்தில் இருந்து திருக்கருக்காவூர் திருத்தாண்டகம், கரு உற்பத்தி திருமந்திரம் இவற்றைப் படித்துவர நல்ல முறையில் குழந்தை பிறக்கும். வேள்வியின் போதும் இம்மந்திரத்தை ஓதலாம். (தொடரும்)




கலியுகத்தின் கண்கண்ட கடவுளின் கருவறை, குவலயம் காக்கும் கோவிந்தன் உறையும் கோயில் ஆனந்த நிலையம்.

கருவறைக்கு முன்பாகக் காட்சி தரும் ஒரு கால்படி.

அண்ணலுக்கு அமுதுபடைக்கப்படுவது இந்தப் படிக்கு இப்பாலிருந்துதான்.

இந்தக் குன்றழகனைக் காணவந்த குலசேகராழ்வார் கசிந்துருகிக் கண்ணீர் மல்க ஒரு கோரிக்கை வைத்தார்.

"ஐயனே என்னை நாரைப் பறவையாய், மீனாய், மரமாய், புதராய், மலையாய், ஆறாய், மக்கள் நடக்கும் பாதையாய் என்று எப்படி வேண்டுமானாலும் படைத்துக் கொள். ஆனால் உன் வாசற்படியில் கிடக்கும் பாக்கியத்தை எனக்கருளினால் உன்னைக் காணவரும் பக்தர்கள் என்மேல் ஏறி நின்று உன்னைக் கண் குளிரத் தரிசிப்பார்கள். அவர்களோடு இணைந்து நானும் உன்னை எக்காலமும் இமைக்காமல் தரிசிப்பேன். (தொடரும்)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மனிதத் துணை அனைத்தையும் விட இறைவன் எல்லையற்ற பெருமையை உடையவனாகிறான். இறைவனிடம் நம்பிக்கை கொள். அவரையே எப்போதும் சார்ந்திரு அப்போது நன்னெறியில் செல்வாய். எதனாலும் உன்னை வெல்ல முடியாது.
- இறைவனது தொண்டர்களுக்குத் தொண்டு செய்பவர்கள் அவரது உத்தமத் தொண்டர்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.
- பொருளாதார மதிப்பு இருக்கின்ற மதமே வெற்றி பெறும். ஆயிரக்கணக்கான ஒரே விதமதப் பிரிவுகள் ஆதிகத்திற்குப் பாடுபடலாம். ஆனால், பொருளாதாரப் பிரச்னையைத் தீர்ப்பவைகளே ஆதிக்கத்தைப் பெறுகின்றன.
- ஒரு லட்சிய மதத்தின் நோக்கம் இவ்வுகை வாழ்விற்கும் உதவ வேண்டும். மறு உலகிற்கும் வழிகாட்ட வேண்டும். அதே வேளையில், இறப்பையும் ஏற்க அது ஒருவனை ஆயத்தம் செய்யவும் வேண்டும்.
- மதததைப் பற்றிக் கொண்டு சண்டையில் இறங்காதே, மதச் சண்டைகளும் வாதங்களும் அறிவின்மையின் அறிகுறி. தூய்மையும். அறிவும் வெளியேறி இதயம் வறளும் போது தான் சண்டைகள் தொடங்கும். அதற்கு முன்னால் அல்ல.

# மைலோ கிண்ண கால்பந்தாட்டம் ஜெகமீட்பர் -யூனியன் இன்று மோதல்





மைலோ கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் கிளிநொச்சி வலைப்பாடு ஜெகமீட்பர் அணியும் ஆனைக்கோட்டை யூனியன் அணியும் மோதவுள்ளன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும், யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்ட கழகங்களுக்கிடையிலான மைலோ கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தின.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள லீக் அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்று, சுப்பர் - 20 சுற்றுக்கு 20 அணிகள் தெரிவு செய்யப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 6 அணிகளும், யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 14 அணிகளும் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டன. இதனைவிட, கடந்த முறை மைலோ கிண்ணப் போட்டிகளில் அரையிறுதி வரையில் முன்னேறிய அணிகளும் இதனுடன் இணைந்து இம்முறை மாவட்ட மட்டச் சுற்றில் 23 அணிகள் விளையாடின.

. மாவட்ட மட்டச் சுற்றுப் போட்டிகள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானம் மற்றும் பாசையூர் சென். அன்ரனீஸ் மைதானம் ஆகிய இடங்களில் இடம்பெற்றன. தொடர்ந்து அரையிறுதியாட்டங்கள் முதலாம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும் ஆனைக்கோட்டை யூனியன் அணியும் மோதின. போட்டி தொடங்கிய முதல் சென்.அன்ரனீஸ் அணியினர் ஆதீக்கம் செலுத்தினர். எனினும், சில நிமிடங்களிலே அதனை மாற்றியமைத்து யூனியன் அணியினர் விடாது ஆடினர். முதல் பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் கோல் எதனையும் அடிக்கவில்லை.

இரண்டாவது பாதியிலும் இரண்டு அணிகளும் தமக்கான சந்தர்ப்பங்களை வீணடித்தனர். இரண்டாம் பாதியும் கோல்கள் எதுவும் பெறாமல் முடிவடையப் போகின்றதோ என்று இருந்த நிலையில், போட்டியின் 59 ஆவது நிமிடத்தில் (முடிவடைய ஒரு நிமிடம் இருக்கையில்) யூனியன் அணியின் தனுஜன் ஒரு கோலை அடித்து தனது அணியின் வெற்றியை உறுதி செய்தார். முடிவில் ஆனைக்கோட்டை யூனியன் அணி, 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வேலணை துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து கிளிநொச்சி வலைப்பாடு ஜெகமீட்பர் அணி மோதியது. போட்டி தொடங்கி 2 ஆவது நிமிடத்தில் துறையூர் அணியின் சுவராஜ் அசத்தலான கோல் ஒன்றை அடித்தார். இதற்கு பதிலடி கொடுக்கும் முனைப்பில் ஆடிய ஜெகமீட்பர் அணிக்கு 15 ஆவது நிமிடத்தில் அது கைகூடியது. அவ்வணியின் நியூட்டன்கொடுத்த அருமையான பந்துப்பரிமாற்றத்தை எஸ். சுமன் கோலாக மாற்றினார். முதற்பாதியாட்டம் 1:1 என சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதியின் 4 ஆவது நிமிடத்தில் ஜெகமீட்பர் அணியின் அணித் தலைவர் டி.கனிஸ்ரன் அபாரமான கோல் ஒன்றை அடித்தார். விடாது ஆடிய துறையூர் ஐயனார் அணி 19 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை அடித்தது. அந்தக் கோலை அவ்வணியின் கோகுலன் அடித்தார்.

ஆட்டநேர முடிவில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன. இதனால் வெற்றியாளரைத் தீர்மானிக்க தண்டனை உதை நாடப்பட்டது. இதில் ஜெகமீட்பர் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வென்றது. இறுதியாட்டம் இன்று 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (சு-26)

# ஹென்றியரசர் -சென்.பற்றிக்ஸ் இன்று பலப்பரீட்சை





மைலோ கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 16 வயதுப்பிரிவு அணிகளுக்கான இறுதிப் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரியும் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் பலப் பரீட்சையில் ஈடுபடவுள்ளன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும் யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்ட கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகளுக்கிடையில. மைலோ கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தின.

வழமையாக கழகங்களுக்கிடையில் மாத்திரம் வருடாவருடம் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டியானது இந்த வருடம் விஸ்தரிக்கப்பட்டு கிளிநொச்சி - யாழ்ப்பாணம் மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளின் 14 மற்றும் 16 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலும் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பாடசாலை அணிகளுக்கு தனித்தனியாக போட்டிகள் நடைபெற்று இரண்டு மாவட்டங்களையும் உள்ளடக்கிய சுப்பர்-10 சுற்றுக்கு அணிகள் உள்வாங்கப்பட்டன. யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து 8 அணிகளும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 2 அணிகளும் இவ்வாறு உள்வாங்கப்பட்டன.

சுப்பர்-10 ஆட்டங்களிலிருந்து அரையிறுதி அணிகள் தெரிவுசெய்யப்பட்டன. அரையிறுதியாட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் முதலாம் திகதி புதன்கிழமை நடைபெற்றன.

16 வயதுப்பிரிவினருக்கான முதலாவது அரையிறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அணி மோதியது. மிக அபாரமாக ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வென்றது. சென்.பற்றிக்ஸ் சார்பாக அடிக்கப்பட்ட 3 கோல்களையும் ஈ.டின்லேய்ஸ், ஏ.டி. டிலக்ஸன், ஜெ.ஜோன்ராஜ் ஆகியோர் கோல்களை அடித்தனர்.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இளவாலை ஹென்றியரசர் அணியை எதிர்த்து கொற்றாவத்தை அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை அணி மோதியது. இதில், போட்டியின் முழு ஆதீக்கத்தையும் தன்வசம் வைத்திருந்த ஹென்றிஸ் அணி கோல் மழை பொழிந்தது. ஹென்றிஸ் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஹென்றிஸ் அணிசார்பாக அடிக்கப்பட்ட கோல்களை பிரசாந்த் இரண்டு கோல் களையும் கிருசாந்தன், நிக்ஸன் ரேவோல்ட்டோ, ஜெலுக்ஸன், அருள் ஜோசப் ஆகியோர் ஒரு கோலையும் அடித்திருந்தனர். (சு-26)

# மணற்காடு-சென். பற்றிக்ஸ் இறுதியில் பலப்பரீட்சை





மைலோ கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 14 வயதுப்பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டியில் இன்று 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அணியும் மோதவுள்ளன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும் யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்ட கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகளுக்கிடையில் மைலோ கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தின.

வழமையாக கழகங்களுக்கிடையில் மாத்திரம் வருடாவருடம் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டியானது, இந்த வருடம் விஸ்தரிக்கப்பட்டு கிளிநொச்சி - யாழ்ப்பாணம் மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளின் 14 மற்றும் 16 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலும் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பாடசாலை அணிகளுக்கு தனித்தனியாக போட்டிகள் நடைபெற்று. இரண்டு மாவட்டங்களையும் உள்ளடக்கிய சுப்பர் - 10 சுற்றுக்கு அணிகள் உள்வாங்கப்பட்டன. யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து 8 அணிகளும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 2 அணிகளும் இவ்வாறு உள்வாங்கப்பட்டன.

சுப்பர்-10 ஆட்டங்களிலிருந்து அரையிறுதி அணிகள் தெரிவுசெய்யப்பட்டன. அரையிறுதியாட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் முதலாம் திகதி புதன்கிழமை நடைபெற்றன.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதலாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. இதில் சிறப்பாக ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சென்.பற்றிக்ஸ் அணி சார்பாக அடிக்கப்பட்ட இரண்டு கோல்களையும் க.ஜெஜெரோம், ரி.ஷனியோ ஆகியோர் அடித்தனர்.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின. இதில் மணற்காடு றோமன் கத்தோலிக்க அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மணற்காடு அணி சார்பாக அடிக்கப்பட்ட கோல்களை ஆர்.மயூரன் அடித்தார். ஹென்றியரசர் அணி அடித்த கோலை ஏ.டிலோசன் அடித்தார்.

இறுதிப்போட்டி இன்று 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (க-26)

# மு/வித்தியானந்தா மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிப்பு

அகில இலங்கை ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கிடையே ரீ.வி.ஜெயவீரா குத்துச் சண்டைப் போட்டியின் தேசிய ரீதியிலான போட்டி கடந்த செப்டெம்பர் மாதம் நடைபெற்றது.

17, 18, 19 ஆகிய வயதுப் பிரிவிலும் 13,14 ஆகிய வயதுப் பிரிவுகளில் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்று வெற்றியீட்டிய மு/ வித்தியானந்தா கல்லூரி மாணவர்களை முல்லைத்தீவு மாவட்ட இராணுவப் படைப்பிரிவின் கட்டளைப் பணியகத்தின் ஏற்பாட்டில் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. இந்த கௌரவிக்கும் நிகழ்வானது அண்மையில் முல்லைத்தீவு கேப்பாபிலவு கிராமத்தில் உள்ள இராணுவக்கட்டளை பணியகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, 17, 18, 19 ஆகிய வயதுப் பிரிவுகளில் முறையே 52.6 கிலோ எடைப் பிரிவில் வெற்றியீட்டிய முரளிதரன் - தனுஜன் 56.60 கிலோ எடைப் பிரிவில் வெற்றியீட்டிய யோகநாதன்- ஜனகன், 50.64 கிலோ எடைப் பிரிவில் வெற்றியீட்டிய யோகேஸ்வரன்-கிரிதரன் ஆகியோரும் 13.14 வயதுப் பிரிவில் 35.37 கிலோ எடைப் பிரிவில் வெற்றியீட்டிய விஜிந்தன் - சாம்சன் உட்பட நான்கு பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மு/வித்தியானந்தா கல்லூரியில் இருந்து குத்துச் சண்டைப் பயிற்சிகளைப் பெற்று தேசிய மட்டப் போட்டிகளின் போது போட்டியிட்டு ஒரு சில புள்ளிகளால் வெற்றி வாய்ப்புக்களை இழந்த 17 வீர/வீராங்கனைகளும் கௌரவிக்கும்பட்டதுடன் பாடசாலையில் கற்றல் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் கற்றல் உபகரணப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பாடசாலையை ஊக்குவிக்கும் வகையில் பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களின் பயன்பாட்டுக்கு உதவும் வகையில் ஒரு தொகுதி குத்துச் சண்டை உபகரணங்களும் வழங்கிகௌரவிக்கப்பட்டன.

இந்நிகழ்வின் போது, முல்லைத்தீவு மாவட்ட இராணுவ பாதுகாப்புப் படைப் பிரிவின் கட்டளைத் தலைமையகத்தின் தளபதி ஆர். டபிள்யூ.டபிள்யூ. ஏ. டீ. பி. ராஜகுரு வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு துவுண்டன் இரு துவிச்சக்கரவண்டிகளை வழங்கி வைத்துள்ளார்.

குறித்த நிகழ்வின்போது, பாதுகாப்புப்படை தலைமையகத்தின் தளபதி R.W.W.A. D.P.ராஜகுரு 59 ஆவது படைத் தளபதி மேஜர் ஜெனரல் வன்னியாராச்சி, எம்.ஏ.எஸ். நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர் றெனால்ட் பெனாண்டோ, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமாபதி-புவனேஸ்வரன், மு/வித்தியானந்தாக் கல்லூரியின் அதிபர் க.சிவலிங்கம் உட்பட குத்துச் சண்டைப் பயிற்சி ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளார்கள். (சு-15)

## தமிழ் பாராளு...

தினர், இதற்குரிய எதிர்விளைவை வருங்காலங்களில் அவர்கள் சந்திக்க வேண்டும் எனவும் எச்சரித்துள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துவரும் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாகவும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி ஒரு தீர்க்கமான முடிவினை எடுப்பதற்கென யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மக்கள் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

அந்த வகையில், குறித்த கலந்துரையாடல் நேற்று யாழ் பல்கலைக்கழக முன்றலில், நடைபெற்றது. இந்த கலந்துரையாடலில், பாராளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ்தேவானந்தா, சிவசக்தி ஆனந்தன், அங்கஜன் இராமநாதன், வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். ஏனைய பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை. குறித்த கலந்துரையாடல் நிறைவடைந்த பின்னரே மேற்குறித்த விடயத்தினை யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அறிவித்திருந்தனர்.

இது குறித்து யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் வி.அனுராஜ் மேலும் தெரிவிக்கையில்,

இவ் அழைப்பு வரலாற்றில் முதன் முறையானது. மாணவர் ஒன்றியமானது, மக்களின் பிரச்சினைகளுக்கு குரல்கொடுத்து, ஜனநாயக ரீதியான போராட்டங்களில் பங்கெடுத்து வருகிறது. இவ் அழைப்பினை உதாசீனம் செய்த வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை வன்மையாக கண்டிக்கிறோம்.

மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் விரக்திக்கு அவர்களின் செயற்பாடுகள் காரணமாக அமைந்துள்ளது. தேர்தல் இத்துடன் முடியவில்லை, இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பல தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டும். அதை நினைவில் வைத்துக் கொள்ளட்டும்.

இன்று (நேற்று) நாம் கலந்துரையாடலுக்கு அழைத்திருந்தோம். சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பை ஏற்படுத்திய போது, மாட்டீன் வீதியில் அமைந்துள்ள தமது கட்சி அலுவலகத்தில் இருப்பதாக தெரிவித்தனர். அதாவது பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிறிதரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதாகவும் பல்கலைக்கழகத்துக்கு வருவது தொடர்பில் முடிவெடுக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், தனது கட்சி அலுவலகத்தில் எம்மை வந்து சந்திக்கும்படி கூறினார். கைதிகள் அங்கு சாகக் கிடக்கிறார்கள், நாங்கள் மழைக்குள் 5 நாட்களாக எமது கற்கைகளை நிறுத்தி நிர்வாகத்தை முடக்கி போராடி வருகிறோம், ஆனால் மக்கள் பிரதிநிதிகள் கௌரவம் பார்க்கிறார்கள். இது எந்த வகையில் நியாயம்? நாங்கள் கட்சி சார்ந்து எவரையும் அழைக்கவில்லை. பொதுவாகவே அனைவரையும் அழைத்தோம்.

நாங்கள் தான் அவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பினோம். அவர்களை எமது இடத்துக்கு வருமாறு அழைப்பதற்கு எமக்கு உரிமை உள்ளது. நாங்கள் அழைத்தால் அவர்கள் வர வேண்டும்.

நாங்கள் அவர்களை பாராளுமன்றம் அனுப்பி விட்டு தற்போது அவர்கள் அழைக்கும் இடத்துக்கு போக வேண்டுமா? அவர்கள் எங்களை தேடி வர வேண்டுமா? என்பதை அவர்களே சிந்திக்க வேண்டும்.

எமது போராட்டத்துக்கு மக்கள் பிரதிநிதிகள் என்ற பெயரில் எவர் வந்து பார்த்தார்கள், எமக்கு பிரச்சினை உள்ளது. நாங்கள் அழைக்கிறோம். ஆனால் அவர்கள் வரமாட்டார்களாம், மக்கள், மாணவர்கள் தான் அவர்களை தேடி போக வேண்டுமாம்,

நாங்கள் கேள்வி கேட்க அழைக்கவில்லை அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் பிரதிநிதிகள் நீங்கள். உங்களால் சில கேள்விகளை அரசிடம் கேட்க முடியும் அழுத்தம் கொடுக்க முடியும் அதனால்தான் உங்களிடம், இது தொடர்பில் கலந்துரையாடி தீர்க்கமான முடிவு எடுக்க அழைத்தோம். இன்றைய எமது அழைப்பை நிராகரித்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வரலாற்று தவறை இழைத்துள்ளார்கள். இதற்குரிய எதிர் விளைவை விரைவில் சந்திப்பார்கள் என தெரிவித்தார். (ம-9)

## அரசியல் கைதி...

ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதமாக்க கோரியும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 5 நாட்களாக நிர்வாக முடக்கல் போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.

ஜனாதிபதியின் வாக்குறுதியை நம்பி ஏமாற்றம் அடைந்ததன் விளைவாக மேற்கொள்ளப்பட்ட இந்த போராட்டத்தில் முதற்கட்டமாக , வட கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பிரதிநிதிகளை அழைத்து குறித்த விடயம் தொடர்பாக நேற்று யாழ்.பல்கலையில் கலந்துரையாடியிருந்தனர்.

அவர்களின் பொறுப்புக்களை அவர்களிடம் எடுத்துக்கூறி குறிப்பாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உடல் நிலையை கருத்தில் கொண்டு அவர்களின் போராட்டத்தை இடைநிறுத்த கோருவதற்கு உரிய உத்தரவாதத்தினை மக்கள் பிரதிநிதிகளிடம் இருந்து பெற்றிருந்தனர்.

நேற்றைய கலந்துரையாடலில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சிவசக்தி ஆனந்தன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கே.சர்வேஸ்வரன், வட மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் மாணவர்களின் இந்த முயற்சிக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியதோடு. மாணவர்களுடன் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளின் உணவொறுப்புப் போராட்டத்தை முடித்து வைக்கக் கோருவதற்கு வருவதாகவும் உத்தரவாதமளித்துள்ளனர்.

அதனை தொடர்ந்து. அத்துடன் அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கைகள் நிறை வேறும் வரையில் தொடர்ந்து சாத்தியமான வழிகளில் போராட்டங்களை முன்னெடுப்பதெனவும் மாணவர் ஒன்றிய தலைவர் கிருஸ்ணமேன் மாணவர்கள் சார்பில் தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் மக்கள் பிரதிநிதிகள், பல்கலை மாணவர்கள், கைதிகளின் உறவுகள் ஆகியோர் இன்று காலை அநுராதபுரத்துக்கு சென்று கைதிகளின் போராட்டத்தை முடித்து வைக்கவுள்ளனர். (ம-9)

## விசேட அதிரடி...

மேற்குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக விசேட அதிரடிப்படையின் புலனாய்வு பிரிவை சேர்ந்த 7 பேரிடம் வாக்குமூலம் பெறபட்டு அதில் இருவர் கைதுசெய்யப்பட்டனர், கைது செய்யப்பட்ட இருவரும் யாழ் நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்தரனின் வாசஸ்தலத்தில் முற்படுத்தப்பட்ட போது, அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அரியாலை கிழக்கு உதயபுரம் பகுதியில் கடந்த 22ஆம் திகதி பி.ப 2.30 மணியளவில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த டொன்பொஸ்கோ ரிக்மன் (வயது 24) என்ற இளைஞர் படுகாயமடைந்து, சிகிச்சை பலனின்றி அன்றைய தினமே யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக அனைத்து பாதுகாப்பு படைகளையும் சந்தேகிக்கப்பட்ட நிலையில் பல கோணங்களில் விசாரணைகள் இடம்பெற்று வந்தது. அந்த வகையில் பல தடயங்களையும் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். அதில் சிசிரிவி காணொளி ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

அதனடிப்படையில் விசேட அதிரடிப்படையினரின் மேல் சந்தேகம் திரும்பியதையடுத்து இந்த விசாரணைகளை முன்னெடுத்து செல்வதற்காக கொழும்பில் இருந்து குற்றப்புலனாய்வு பிரிவினர் யாழுக்கு வருகை தந்திருந்தனர். கடந்த திங்கட்கிழமை, விசேட அதிரடிப் படையினரின் புலனாய்வு துறையினரிடம் விசாரணை நடத்தியிருந்தனர். அதன் அடிப்படையிலேயே நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இரவு விசேட அதிரடிப்படை முகாமுக்குள் சென்ற குற்றப்புலனாய்வு பிரிவின அதிகாரிகள், குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் சந்தேக நபர்கள் பயன்படுத்திய முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்துப்பாக்கியினை கைப்பற்றியிருந்தனர்.

அதனடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் விசேட அதிரடிப்படையினரின் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் 7 பேரை விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர் அவர்களின் வாக்குமூலங்களும் பெறப்பட்டது.

இந்த நிலையில் நேற்று விசேட அதிரடிப்படையினரின் புலனாய்வு பிரிவு உப பரிசோதகர் மல்லவராட்சி பிரதீப் நிசாந்த, பொலிஸ் கான்ஸ்டபிள் ரத்னாயகே முதியான்சலாகே இன்டிக புஸ்பகுமார ஆகியோர் கைது செய்யப்பட்டு 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-9)

## கேரள கஞ்சா...

வருடைய பயணப் பையினுள் நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு வைக்கப் பட்டிருந்த 04 கிலோ 100 கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன் புத்தளம் பகுதியைச் சேர்ந்த அப்துல் கரீம் முகமட் (வயது-24) என்ற இளைஞரைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ, ஏ.மகிந்த தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11. 30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச பேருந்து நிலையத்தில் வைத்து கிளிநொச்சியில் இருந்து புத்தளம் நோக்கி பயணித்த அரச பேருந்தை சோதனையிட்ட போது நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு பயணப் பையில் வைக்கப்பட்டிருந்த கேரளாக் கஞ்சாவுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையில் வவுனியா மாவட்ட போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் பொலிஸ் அணியினர் இந்த கேரளாக் கஞ்சாவை கைப் பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடை பெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப்பொருட்களுடன் சந்தேக நபரை வ்வுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ம-15)

## எதிர்வரும் மூன்று...

தொடக்கம் நேற்று காலை 8.30 மணி வரை 54.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் நேற்று காலை 8.30 மணி தொடக்கம், நேற்று இரவு 8.30 மணி வரையும் 90.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அயன மண்டலத்தில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை தொடர்ந்தும் இலங்கைக்கு மேல் காணப்படுவதால் எதிர்வரும் மூன்று தினங்களுக்கு முகில் சார்ந்த மழையுடன் கூடிய வானிலை காணப்படும்.

அதன் பின்னரும் சில தினங்களுக்கு மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-9)

## யாழில் வாள்வெட்டு...

பண்ணைச் சந்தியில் உள்ள ஒரு வீட்டில் 4 இளைஞர்கள் நேற்று மாலை 6 மணியளவில் "கரம் போட்" விளையாடிக் கொண்டிந்தனர்.

அவ்வேளை மோட்டார் சைக்கிளில் வந்த ரவுடிக்கும்பல் ஒன்று வாளால் வெட்டியதில் ஒரு இளைஞன் பலத்த காயத்திற்கு உள்ளானார். மற்றைய இளைஞன் தப்பிச் செல்ல முற்பட்ட வேளை தகரம் கிழித்து காயமடைந்தார். மற்றைய இரு இளைஞர்களும் தப்பிச் சென்று விட்டனர். சம்பவத்தில் வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவர்களான ஆனந்த் ஜெசிந்தன் (வயது 24) யோகநாதன் கஜ ரூபன் (வயது 25) என்பவர்களே படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-30)

## தீர்வை பெற்றுத்...

காகவே பயணித்துக் கொண்டிருக்கின்றோம். எமது வெற்றிக்கு மக்களின் ஆதரவு வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

யாழில் உள்ள அவரது வீட்டில் புதிய அரசியலமைப்பு தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று இடம் பெற்றது. அந்தசந்திப்பின் போதே இவ்வாறு வலியுறுத்தினார்.

புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையின் விவாதம் கடந்த நான்கு நாட்களாக இடம்பெற்றன. விவாதத்தின் போது, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் கொண்டு வந்த அரசியலமைப்பு வரைபினை ஏற்றுக்கொள்வேன் என அமைச்சர் டிலான் சொன்னதுடன், வரைபிற்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்றும் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

70 வருட கால தேசிய இனப்பிரச்சினை தீர்வதற்கான சந்தர்ப்பம் இது. தீராமலும் விடலாம். தோல்வியில் முடிவடையலாம். அவ்வாறு தோல்வியில் முடிவடைவது, எமது செயற்பாட்டின் மூலம் தான் என எவரும் சொல்லாத வகையில், தான் இந்த விடயங்களில் ஈடுபட வேண்டும்.

வெற்றிகரமாக அமைவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்க வேண்டும். அரைவாசி தூரத்திற்கு வந்திருக்கின்றோம். வந்த தூரத்திற்கு பெற வேண்டிய அரைவாசி விடயங்களையும் பெற்றிருக்கின்றோம். ஆகையினால், இவை தோல்வியில் முடிவடையுமென இப்போதே தீர்மானிக்கக்கூடாது.

வெற்றியில் முடிவடைய வேண்டும். வெற்றியிலேயே தான் முடிவடைய வேண்டுமென்ற நம்பிக்கையில் தான், செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எனவே, எமது மக்களின் பூரண ஆதரவு எமக்குத் தர வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.(ம)

## கைதிகளின் கோரிக்கை...

மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் கிருஷ்ணமேன் இதனை தெரிவித்தார்.

தமிழ் அரசியல் பிரதிநிதிகளுடன் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார். (ம)

## கூட்டமைப்பின்...

நாடு சுவர்க்க பூமியாக மாறும் என காணி, நாடாளுமன்ற அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் அமைப்பில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியல் அமைப்பின் இடைக்கால அறிக்கை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது.

மூன்று நாட்கள் வரை மட்டுமே நடைபெறவிருந்த இடைக்கால அறிக்கை மீதான விவாதம் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கருத்துக்களை வெளியிட வாய்ப்பு வழங்கும் நோக்கில் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இடைக்கால அறிக்கை மீதான விவாதம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தில் கருத்து தெரிவித்தவர்களிடம் இருந்து நாம் இரண்டு விடயங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது. உண்மையில் எமது நாடு முன்னேற விருப்பம் உடையவர்கள் யார் என்பதும், எமது நாட்டின் முன்னேற்றத்தை விட அரசியல் நடத்துவதை முக்கியமாக கொண்டவர்கள் யார் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு வெளியில் ஒன்றை கூறுவார்கள். கூட்டு எதிரணியினரின் நாடகம் இன்று மக்கள் மத்தியில் வெளிப்பட்டு விட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எப்போதுமே பௌத்த மதத்திற்கே இந்த நாட்டில் அதிக உரிமை உண்டு எனவும் பௌத்த மதத்திற்கே முக்கியத்துவம் கொடுப்பதாகவும், அதற்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது என்றும் கூறுவார்.

இவ்வாறிருக்க ஒற்றையாட்சியினை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் ஏற்றுக்கொண்டிருப்பதன் மூலம் எமது நாடு சுவர்க்க பூமியாக முன்னேறும் என்பதில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார். (ம)

நாளைமுதல் வெளிவருகின்றது!

தரம் 5 புலமைப் பரிசில் - 2018

மாணவர்களுக்கான முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களைக் கொண்ட தொடர் பரீட்சை வினாத்தாள்

"புலமைச் சிட்டு" (C-270)

1ஆவது பரீட்சை - 05.11.2017 ஞாயிற்றுக்கிழமை

- வெளிமாணவர்களும் பரீட்சைக்கு தோற்ற முடியும்
- ஞாயிறு தோறும் விரும்பிய 5 நேரங்களில் பரீட்சை (காலை 8.00 - 10.00, 9.00 - 11.00, 10.00 - 12.00, மாலை 3.00- 5.00, 4.00 - 6.00)
- பரீட்சை நடைபெறும் இடம் : புதிய நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
- வினாத்தாள் தேவையானோர் நேரில் தொடர்புகொள்ளவும் - T.P : 077 459 8440


## யாழில்...

மீன்களும் வீழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை தொடக்கம் அங்கு "மீன் மழை" பெய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழையுடன் சில வகை மீன்களும் நிலத்தில் பரவலாக வந்து வீழ்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக நடைபெறுவதாக அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். (ம)


வாடகைக்குத் தேவை

கடை வாடகைக்கு தேவை. கொக்குவில், ஆனைக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 623 7956 (C-273)

சொலெக்ஸ் நீர் பம்பிகள்

உயர்ந்த . நம்பிக்கையான




ரூபா. 8900/- முதல்...

0767 027344

விற்பனைப் பிரிவு - அவசர தொடர்புகளுக்கு

SOLEX WATER PUMPS

சொலெக்ஸ் வரையறுக்கப்பட்ட இஞ்சினியரிங் தனியார் கம்பனி இல. 39, புதிய நுகே வீதி, பேலியகொடை, இலங்கை. (C-145)

அமெரிக்க லொத்தர் விசா

இலவசமாக அமெரிக்காவில் குடியேற அதிஸ்ட வாய்ப்பாக அமையும் லொத்தர் விசா(Green Card)

- 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும்
- திருமணமானவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள்
- இவ்வருடம் 55000 பேருக்கான வாய்ப்பு

யாழ்ப்பாணம் / வேலணை / கிளிநொச்சி

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500 (C-233)

அமெரிக்க லொத்தர் விசா

மிகக் குறைந்த கட்டணத்தில் நேர்த்தியான முறையில் அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

செல்வா கொமினிகேசன்
124, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5169 (1084)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

0768226243

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

யாழ்ப்பாணத்தில் இருந்த வேலையற்ற யுவதிகளில் நானும் ஒருத்தி V2TRAVELS இல் பதிந்து விசா கிடைத்ததும் எனக்கு பதிவுத்திருமணம் நடந்து கணவரையும் நிரந்தர விசாவில் அமெரிக்காவிற்கு கூட்டிச்சென்றேன். மிகத்துல்லியமாக வழிநடத்திய V2TRAVELS க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



திருச்செல்வம்-மரியரோகினி
அமெரிக்க விசா வெற்றியாளர் (C-421)

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

V2 TRAVELS

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, | 10,பேருந்து நிலையம் | முடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services (C-232)

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு குலுக்கல் மூலம் மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-221)

UK-550*/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS- 0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


# கண்ணீர் அஞ்சலி



## உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம்

பூநகரி மண் பெற்றெடுத்த மைந்தனே
புண்ணியங்கள் பல செய்யவந்த புண்ணியனே
புன்னகை சிந்திடும் புதல்வனே
புண்படாமல் கதைப்பதில் வல்லவனே
பூநகரிக்கு பெருமை சேர்த்த பாமரனே
காலத்தால் அழியாது உங்கள் புகழ்
என்றும் எங்கள் நெஞ்சில் நிலைத்திருக்கும்
உங்கள் நிழல்

உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
சரவணப்பொய்கை குடும்பத்தினர்
tamilair@hotmail.com

(C-260)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.